படைப்பு
ஊற்று: 1 | நதி: 2 | ஜூன் 2018 | திங்களிதழ்

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## “எல்லாவற்றையும் தாண்டி வரவேண்டுமென்று முடிவுசெய்து சல்மாவாக மாறினேன்”

கவிஞர் **சல்மாவுடனான நேர்காணல்**



நான் வாசிக்கிறேன்
– யவனிகா ஸ்ரீராம்





விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குருதி
– நூல்விமர்சனம்



மலையாளக் கவிதாயினி சுகதகுமாரி
– பிறமொழிக் கவிஞர்கள் அறிமுகம்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்
ஊற்று: 1 | நதி: 2 | ஜூன் 2018

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாக மேலாளர்:
**சகா (சலீம் கான்)**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தனபால் பவானி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**கொ.வடிவேல்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

இணையதள முகவரி:
www.padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே, படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - பக். 04

**“எல்லாவற்றையும் தாண்டி வரவேண்டுமென்று முடிவுசெய்து சல்மாவாக மாறினேன்”**
- கவிஞர் சல்மாவுடனான நேர்காணல் - பக். 05

**எனக்குப் பிடித்த புத்தகம் - மாணவர் பக்கம்**
- கட்டுரையாக்கம் : அகதா - பக். 08

**பாஷோவின் பழைய குளம்**
- முகம்மது பாட்சா - பக். 17

**என் கேள்விக்கென்ன பதில்?**
- ஆகி - பக். 21

**சிற்றிதழ்ப் போராளி கவிஞர் சுகனின் இதழாளுமை!**
- வெற்றிப்பேரொளி - பக். 22

**கொப்பையா - மனித முகவரிகள்**
- மானசீகன் - பக். 28

**மலையாளக் கவிதாயினி - சுகததகுமாரி**
- ஜி. ராஜன் - பக். 33

**வாசகர் எண்ணங்கள்** - பக். 39

**என் படைப்பு - பள்ளி மாணவர் பக்கம்**
- இரா.மணிமேகலா - பக். 40

**குரலற்றவனின் எதிர்க்குரல் - நூல் விமர்சனம்**
- இரா.பூபாலன் - பக். 42

**நிகழ்வுகள்**
- அருணாதேவி - பக். 45

**மேகா பதிப்பக நூல் வெளியீட்டு விழா - நடந்ததும் கடந்ததும்**
- ஸ்டெல்லா தமிழரசி - பக். 52

**ஈரிருநாள் இலங்கை - பயணக் கட்டுரை**
- தமிழ்பாரதன் – பக். 55

**தகவு பதில்கள்** – பக். 60

**நாடக வழிவில் சங்க இலக்கியம்**
- கிருஷ்ணமூர்த்தி பழனியப்பன் – பக். 61

**நான் வாசிக்கிறேன்**
- யவனிகா ஸ்ரீராம் – பக். 62

## சிறுகதைகள்

**ஒப்பனைக்காரன்**
- பொள்ளாச்சி அபி – பக். 10

**ஏழை பக்தன்**
- மொழிபெயர்ப்பு : சிறுமேதாவி – பக். 25

**பொன்னையா**
- விந்தன் – பக். 36

**சீனநெடுஞ்சுவர்**
- பிரேமபிரபா – பக். 47

## கவிதைகள்

**பூவுலகின் நண்பர்கள்**
- மௌனன் யாத்ரீகா – பக். 09
- கார்த்திக் திலகன் – பக். 24

**கேள்விகள் பற்றிய நினைவுக் குறிப்புகள்**
- தமிழ் மணவாளன் – பக். 46
- க.அம்சப்ரியா – பக். 54

**பழச்சாறின்ஒழுக்கு**
- வேதநாயக் – பக். 59



# தலையங்கம்

வணக்கம்..!

அள்ளியெடுத்து உச்சிமோந்து கொண்டாடித் தீர்த்துவிட்டீர்கள் உங்கள் படைப்பு 'தகவு' இதழை. இணையத்தில் நமது இதழை ஆயிரக்கணக்கானோர் வாசித்து மகிழ்ந்துள்ளனர். அச்சு இதழாகக் கொண்டுவர வேண்டும் என்ற உங்களது பலரின் கோரிக்கையையும் மகிழ்ச்சியுடன் கவனத்தில் கொண்டுள்ளது படைப்புக் குழுமம்.

தமிழ்ப் படைப்புகளை எளிய ஆங்கிலத்தில் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் பேரறிஞர் ம.லெ.தங்கப்பா. தனித்தமிழ்ப் பற்றாளராக, பன்மொழி வித்தகராக, சுற்றுச்சூழல் விழிப்புணர்வாளராகத் தம் வாழ்வினைத் தமிழ் வாழ்வாக வாழ்ந்து மறைந்திருக்கிறார். இலக்கிய உலகிற்கான அவர்தம் பணிகள் அவரைக் காலம்கடந்தும் அடையாளப் படுத்திநிற்கும்.

வாசிப்புப் படிநிலையில் பாலகுமாரனைக் கடக்காமல் மேலேறி வந்தவர்கள் இந்தத் தலைமுறையில் மிகக் குறைவாகத்தான் இருப்பர். பெண்தோழிகள் பலருக்கும் அவர்நூல்களும் வரிகளும் நெகிழ்ச்சி தரும் ஆதர்சம்; உடனிருந்து ஆறுதல் சொல்லும் தோழமை.

மறைந்த தமிழறிஞர் ம.லெ.தங்கப்பா மற்றும் எழுத்தாளர் பாலகுமாரன் ஆகியோருக்குப் படைப்பு 'தகவு' அவர்தம் வேறுபட்ட எழுத்தாளுமைகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துகிறது.

மக்கள் தங்கள் உரிமைகளை மீட்டெடுக்க நடத்திய தூத்துக்குடி போராட்டம் நம் கண்முன்னே உயிர் கொடுத்து நீதி பெற்று முடிந்திருக்கிறது. நீதிக்காகத் தம்முயிரை ஈந்த பெருமக்களைத் தகவு கண்ணீருடனும் வணக்கத்துடனும் நினைத்துப் பார்க்கிறது. தமக்கென முயலாமல் பிறர்க்கென முயலும் சான்றோர்கள் இருப்பதினாலேயே இவ்வுலகம் நிலைபெற்றிருக்கிறது. எவ்வளவு உண்மை!

இழப்புகளின் மத்தியில், புதிய சுடர் ஒன்று கண்ணில் தென்படுகிறது. மனனத்தின் திசையிலிருந்து படைப்பின் திசைநோக்கிய புதிய பாடத்திட்டம்தான் அது. நவீனம், இணையம், வண்ணமயம், எதிர்கால வாய்ப்புகள் சார்ந்து உருவாகியிருக்கும் புதிய பாடத்திட்டம் எதிர்காலத் தலைமுறையினரின் தெளிவு குறித்த நம்பிக்கையை நம்மிடத்தில் விதைக்கிறது. சிற்பத்தைக் கொடுத்துச் சிற்பத்தை உருவாக்கக் கற்றுக் கொடுத்துவந்த கல்விக் கூடங்கள் இனி உளியையும் கல்லையும் கொடுத்துச் சிற்ப உருவாக்கப் பயிற்சி கொடுக்கும் என நம்புவோம்.

இந்த மாத இதழில் வழக்கமான பகுதிகளோடு மாணவர் பகுதிகள் கூடியுள்ளன. வாசகர் எண்ணங்களும் வாசிப்பனுபவங்களும் செறிவார்ந்த கட்டுரைகளும் கதைகளும் கவிதைகளும் நிரம்பி உங்கள் பார்வைக்காக விரிகிறது படைப்பு'தகவு'.

என்றும் வாசிப்பால் வளம் பெறுவோம்!

• தனபால் பவானி



# "எல்லாவற்றையும் தாண்டி வரவேண்டுமென்று முடிவுசெய்து சல்மாவாக மாறினேன்"

## கவிஞர் சல்மாவுடனான நேர்காணல்

அடக்கிவைக்கப்பட்ட சூழலிலிருந்து முட்டிமோதி முளைத்து முன்னேறித் தனக்கென ஒரு தனி அடையாளத்தை உருவாக்கிக் கொண்டவர் கவிஞர் சல்மா. படைப்புகளின் மீதான அவரது தீராத காதல் சிறந்த படைப்பாளியாகத் தமிழுலகத்தில் நிலைபெறச் செய்தது. மதம், அரசியல் என சர்ச்சைகளுக்குரிய தளங்களில் அவரது இருப்பு நிகழ்ந்தாலும் கவித்துவ மனம் மாறாத சிந்தனைக்குரியவர். வாஞ்சையும் வலுவும் மிக்க தனது குரலில் கவிஞர் சல்மா நமக்காகச் சில கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

**ரொக்கையா பேகம் எப்படி சல்மாவாக மாறினார்?**

துவரங்குறிச்சி என்னும் ஒரு சிறுகிராமத்தில் பிறந்து வளர்ந்தவள் நான். எழுத்து, படிப்பு, தேடல், கவிதைகளின் மீதான ஆர்வம், என்னை மற்றவர்களிடம் இருந்து தனித்துக்காட்ட வேண்டுமென்ற விருப்பம் எல்லாம் இருந்தது. பெண் என்பதால் நிறைய கேள்விகள், விமர்சனங்கள் எழுந்தன. எல்லாவற்றையும் தாண்டி வரவேண்டுமென்று முடிவுசெய்து சல்மாவாக மாறினேன். கலீல் ஜிப்ரான் தன் கவிதைகளில் காதலியின் பெயராக சல்மா என்ற பெயரைப் பயன்படுத்துவார். அந்தப் பெயரை என் புனைப்பெயராய் வைத்து எழுதிவருகிறேன்.

**'இரண்டாம் சாமங்களின் கதை' பெண்ணியம் சார்ந்து, இஸ்லாமிய சமூகம் சார்ந்து**

**முக்கியமான படைப்பு. அந்நாவலுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் என்ன மாதிரியான வரவேற்பு கிடைத்தது?**

தமிழில் எதிர்பார்த்த அளவுக்கு வரவேற்புகள் கிடைக்கவில்லை. இங்கு வேறுவிதமான அரசியல் இருக்கு. மற்ற மொழிகளில் அதிகமான அங்கீகாரம், வரவேற்பு இருந்தது.

**உங்களைப் பற்றிய ஆவணப்பட அனுபவங்கள்...**

சேனல் 4 மூலமாக உலகம் முழுக்க அறிமுகமானேன். 150 நாடுகளுக்கு மேலாக என்னைக் கொண்டு சேர்த்தார்கள். பல இடங்களில் சிவப்புக் கம்பள வரவேற்பு இருந்தது.

**மறைந்த எழுத்தாளர் சுந்தரராமசாமி குறித்த நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளுங்களேன்..**

ஆரம்பக் காலகட்டங்களில் என்னை ஊக்குவித்தவர் அவர்தான். எழுத்தின் மூலமாக எதையும் சாதிக்கலாம் என்று எனக்கு நம்பிக்கையூட்டியவர் அவர்தான். நான் தொடர்ந்து இயங்கக் காரணமானவரும் கூட.

**தங்கள் கவிதைகளில் பிறரின் தாக்கம் உண்டென்னும் விமர்சனத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

நான் அப்படி நெனைக்கல, அப்படியிருந் தாலும் அதை வாசிப்பவர்கள் தான் சொல்ல வேண்டும்.

**உங்கள் படைப்புகள் எல்லாவற்றிலும் நீங்கள் இருக்கிறீர்களா?**

நம் படைப்புகளில் நாம் எப்போதுமே இருப்போம். ஏதாவது ஒரு இடத்தில் நம் பார்வை இருக்கும். நம் படைப்புகளில் நாம் கட்டாயம் இருப்போம்.

**துவரங்குறிச்சியில் பிறந்த நீங்கள் உங்கள் படைப்புத் திறமையால் பல வெளிநாடுகளுக்கும் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளீர்கள். அங்குள்ள சூழலுக்கும் இங்குள்ள சூழலுக்கும் என்ன வேறுபாடு காண்கிறீர்கள்?**

பொதுவாகவே பல வெளிநாடுகளில் பெண்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கு. பெண்களுக்கு மதிப்பு கொடுக்கிறார்கள், அவர்களுக்கான சுதந்திரம் இருக்கு. இரவு இரண்டு மணிக்குக் கூட பெண்கள் தனியாகப் போகும் வாய்ப்புகள் உள்ளன. இங்கு அந்த நிலை எப்போது வருமென்று தெரியவில்லை. சில நாடுகளில் பெண்களுக்கான உரிமை 50% இருக்கிறது. நாமதான் இன்னும் 33%கே போராடிட்டு இருக்கோம்.

**சமீப காலங்களில் பெண்களின்/குழந்தைகளின் மீதான தாக்குதல்கள் அதிகமாகியிருக்கின்றன. சமூகத்தில் எங்கு தவறு ஆரம்பமாகிறது?**

பெண்களின் மீதான புரிதல்கள் இங்கு சரியாக இல்லை. அவர்களையும் சரிசமமாக மதிக்கும் மனம் குறைவாக இருப்பதால் அவர்களை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்னும் சிலருடைய கண்ணோட்டம் தவறான செயல்களுக்கு வழிவகுக்கிறது.

**பெண் பிள்ளைகள் இல்லை என்ற வருத்தம் எப்போதாவது வந்ததுண்டா?**

கண்டிப்பாக... ஒரு பெண்ணாய் நான் பல்வேறு தடைகளைத் தாண்டி வந்திருக்கிறேன். ஒரு பெண் குழந்தைக்கு என்னென்ன கிடைக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும், அதையெல்லாம் சொல்லிக்கொடுத்து வளர்க்க ஒரு பெண் குழந்தை இல்லையென்ற வருத்தம் எனக்குண்டு.

**எத்தனையோ தடைகளை, பிரச்சினைகளைக் கடந்துதான் இந்த உயரத்திற்கு வந்துள்ளீர்கள்.. படைப்பாளிகள் பல பிரச்சினைகளுக்கு நடுவில் இயங்கும் சூழல்தான் எப்போதும். அத்தனைக்கும் நடுவில் உங்களை எது இயக்கிக்கொண்டிருக்கிறது சல்மா?**

வாழ்க்கை மீதான பிடிப்பு, நம்பிக்கை தான் என்னைத் தொடர்ந்து இயங்க வைக்கிறது. இந்த உலகம் எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. ஆனால் அது ஒரு சிலருக்கானதாக மட்டுமே பார்க்கப்படுகிறது. அதை எல்லோருக்கும் பொதுவானதாய்க் கொடுக்க என்னாலான பங்களிப்பைக் கொடுக்கணும் என்ற உத்வேகம் என்னைத் தொடர்ந்து இயங்க வைக்கிறது.

**மனுஷ்யபுத்திரனின் இலக்கியத் தோழமை?**

அவர் என் உறவுக்காரர்தான், ஆனால் பேச்சுவார்த்தை இல்லை.





**நல்ல கவிஞர் நீங்கள். திரைப் பாடலாசிரியராக எப்போது பார்க்கலாம்..?**

இதுவரை முயற்சிக்கவில்லை, வாய்ப்புகள் வந்த போது நேரமில்லாத காரணங்களால் பாடல்கள் எழுத முடியவில்லை, இனி வாய்ப்புகள் வந்தால் பயன்படுத்தலாம். பாடல்களும் எழுத முயற்சிக்கலாம்.

**புதிதாக நிறைய பேர் எழுதவருகிறார்கள். இணையம் அவர்களுக்கு நிறைய வாசல்களைத் திறந்துவைத்திருக்கிறது. அவர்களுக்கெல்லாம்.. வாசிப்பும் எழுத்தும் எப்படி இருக்க வேண்டும் என்று கூறுங்களேன்.**

முதலில் தமிழின் மூத்த படைப்பாளிகளைத் தேடிப்பிடித்து நிறைய படிக்கணும், கவிதை என்றால் என்ன? அது எப்படி இருக்கணும்? போன்ற புரிதல்கள் வரணும். அடிப்படையைத் தெரிஞ்சிக்கணும், எல்லாரும் எழுதறாங்க அதனால நானும் எழுதறேன்னு இல்லாம, எழுத்துங்கிற பேர்ல எதையாவது எழுதாம.. இலக்கியத்தின் அடிப்படைகளில் இருந்து தொடங்க வேண்டும். வெளிநாடுகளில் கதைகள், கவிதைகள் எழுதுவதற்குத் தனி வகுப்புகளே இருக்கின்றன.

**இந்தத் தலைமுறை எழுத்தாளர்களில் உங்களைக் கவர்ந்தவர்கள்..**

"பேட்டை" நாவல் எழுதிய தமிழ்ப்பிரபா, போகன் சங்கர், சங்கர ராம சுப்ரமணியன், நரன்னு நிறைய பேர் நல்லா எழுதறாங்க.

**எங்களுக்கு சல்மா பெரிய கவிஞர்தான். உங்களுக்கு.. இலக்கியத் தடத்தில் நீங்கள் நினைத்த உயரத்தை அடைந்துவிட்டீர்களா?**

என்னதான் குறிப்பிட்ட வகையில் அங்கீகாரங்கள் கிடைத்தாலும், அது நிறைவாய் இல்லை. தொடர்ந்து என்னை நான் இயக்கிக் கொண்டே இருக்கணும்னு நெனைக்கிறேன். நிறைய எழுதணும், படிக்கணும், புதிது புதிதாய் நிறைய விஷயங்கள் செய்யணும், இந்த சமூகத்துக்கு எதையாவது செய்யணும். அதுக்காகத் தொடர்ந்து பயணிக்கணும்.

**சமகாலம் பிரச்சனை மிகுந்ததாய் இருக்கிறது. எழுத்தாளர்களின் பங்கு முக்கியத்துவப்படும் இச்சூழலில் தங்களது எழுத்து எதிர்வினை எவ்விதம் இருக்கிறது?**

கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதிக் கொண்டிருக்கிறேன். முகநூல், டுவிட்டர் போன்ற பக்கங்களில் தொடர்ந்து எழுதுகிறேன்.

**தற்போது என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்..?**

ஒரு நாவல் எழுதிக்கொண்டிருக்கிறேன், முடியும் தருவாயில் இருக்கிறது. வெளிநாடு பயணங்களைப் பற்றிய கட்டுரைத் தொகுப்பும் எழுதிக்கொண்டிருக்கிறேன். ■

• கட்டுரையாக்கம் : அகதா

# எனக்குப் பிடித்த புத்தகம்



பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரியில் இயற்பியல் இரண்டாமாண்டு பயிலும் மாணவி மா. ஸ்ரீதேவி தனக்குப் பிடித்த புத்தகம் குறித்து இப்பகுதியில் பகிர்ந்து கொள்கிறார்.

“தமிழகத்தில் தோன்றி அகில இந்தியாவையும் தன் கவிதைகளாலும் எழுத்துக்களாலும் கவர்ந்து மக்கள் மனதில் சுதந்திர வேட்கையை வீறு கொண்டு எழச் செய்தவர் தேசியக் கவிஞர் சுப்ரமணிய பாரதி. அவரது எழுதுகோல் என்னும் ஆயுதம் வீரமுடன் செதுக்கிய விடுதலை உணர்வுப் பாடல்கள் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த பாரததேச மக்கள் மனதில் ஏற்படுத்திய தாக்கம் அந்நாளில் ஆங்கிலேயரையே மிரளச் செய்தது.

பாரதி எழுதிய கவிதை வரிகளின் மூலம் எனக்குள் எழுந்த மாற்றங்கள் பலப்பல. எனக்குப் பிடித்த புத்தகம் பாரதியார் கவிதைகள்தான். பாரதியார் பல பாடல்களை இயற்றியிருந்தாலும் சில வரிகள் என் எண்ணத்திற்கு உயிர் தந்து நாளும் என்னை வழி நடத்துகின்றன.

“பல வேடிக்கை மனிதரைப் போலே நான் வீழ்வேனென்று நினைத்தாயோ” இந்த வரிகள் எனக்கு மட்டுமில்லாமல் ஒட்டுமொத்தத் தமிழர்களின் வேதவாக்காக நிற்பதோடு, அவர்களின் வாழ்வாதாரத்திற்குக் கைக் கொடுத்துத் தமிழரின் வீரத்தையும், பெருமையையும் உணர்த்தி நிற்கின்றன. இவ்வரிகள் தமிழர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுத்துப் பல போராட்டங்களில் வெற்றியைப் பரிசாக அளித்துள்ளன. இதயத்திற்கு ஊக்கமும் தைரியமும் அளிக்கும் வரிகளாகத் திகழ்வன. ஒரு பெண்ணாக என்னை எதிர்த்துவரும் பல புதிய பிரச்சினைகளுக்கு விடை தருவதும் இவ்வரிகளே ஆகும்.

“அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே” இப்பாடலைப் படிக்கும்போதே உடல் சிலிர்க்கிறது. பயம் என்ற ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டிருக்கும் பலருக்கு இவ்வரியின் உணர்ச்சிப்பூர்வமான விளக்கம் புரிந்தால் நலம். இவ்வரிகளை உச்சரிக்கும்போதே எனக்குள் இருக்கின்ற பயம் விட்டுவிலகியது. என் முன்னேற்றம் நோக்கிய பாதையில் இருந்த பயம் என்னும் தடைக்கல்லை இவ்வரிகள்தான் உடைத்தெறிந்தன.

“மனதில் உறுதி வேண்டும்” என்ற பாடலில் ‘பெண் விடுதலை வேண்டும்’ என்ற வரி எனக்குப் பெரும் சக்தியை அளித்தது. எனது அடுத்த கட்ட பயணத்தை நோக்கிச் செல்ல இப்பாடலின் உணர்ச்சிகரமான வரிகள் அடிகோலின.

**“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்**

**.................................................................................**

**நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்”**

இவ்வரிகள் பெண்ணாகப் பிறந்த என்னைப் பெருமைகொள்ளச் செய்தன. மேலும் பாரதி கண்ட கனவின் புதுமைப்பெண்களாக என்னையும் என்னைப் போன்ற பெண்களையும் உருவாக்க பாரதியின் இவ்வரிகளே போதுமானது.

நான் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவும், சாதிகளை ஒழிப்பதற்கு முக்கிய அங்கமாகவும், அடிமைத்தனங்களையும், தீண்டாமையையும் ஒழிக்கும் ஆயுதமாகவும் இருப்பேன்.

மேலும் பாரதி இயற்றிய பல பாடல்கள் எனது முக்கிய முடிவுகளை எடுக்க எப்போதும் ஒரு கருமையமாக செயல்படுகின்றன என்பது நிதர்சனம்.



• கவி : மௌனன் யாத்ரீகா
சித்திரம் : அழ.ரஜினிகாந்தன்

# பூவுலகின் நண்பர்கள்

காட்சிக்கு உள்ளே செல்லுங்கள்;
காட்டுக்குள் இரண்டு பேர் போகிறார்கள்;

‘சிதடிகளின் ரீங்காரம் குறைவாகக் கேட்கிறது;
இது மனிதர்கள் அத்துமீறியுள்ள காடு;
துளைக்கருவி இசைக்கு அவிழும் பூக்களை
சிதைந்துள்ள இக்காட்டில் நான்
எப்படி கண்டடைவேன் எனத் தெரியவில்லை’
பூவுலகின் நண்பன் கவலையுற்றான்;

‘மீன்கள் நித்தியத் தனிமையிலிருக்கும் ஓடையில்
இன்னமும் நீரோட்டமிருக்கிறதென்று நினைக்கிறேன்
அலைகளின் சத்தம் கேட்கிறது’
நினைவை மடை மாற்றினான் காடோடி;

‘இதோ, லாரிகள் சென்றுள்ள வழித்தடம்
சக்கரங்கள் வலுவாக அழுந்தியுள்ளன;
நல்ல எடை கொண்ட மரங்களைப்
பாவிகள் வெட்டியிருக்கிறார்கள்’
பூவுலகின் நண்பன் புலம்பினான்;

‘தீயில் சுட்ட சருகு மானின் இறைச்சியைக் கடித்துக்கொண்டு
குடித்துக் களியுறும் பழங்குடிகளின் ஊர்
அருகில் இருக்கிறது; அங்கு செல்வோம்;
நாம் அமைத்திருக்கும் தற்காலிகக் குடில்
கோபத்திலிருக்கும் யானையின் கண்ணில் பட்டுவிடக்கூடாது’
ஆபத்தை உணர்த்தினான் காடோடி;

‘இங்கிருக்கும் ஓலம் நம்மைத் தூங்கவிடாது; நாம் விழித்திருப்போம்;
ஈர மலத்தின் வாசம் காற்றில் கலந்திருக்கவில்லை;
விலங்குகளால் இடர் நேரும் வாய்ப்பு குறைவுதான்;
நாம் நிலவைப் பார்த்தபடி படுத்திருப்போம்’
பூவுலகின் நண்பன் காத்திருக்க விரும்பினான்;
‘அழிந்துள்ள காட்டின் துயரத்திலிருக்கும்
மீதமுள்ள மரங்களின் கேவல்
நெஞ்சைப் பிளந்துவிடும்; இங்கிருந்து போய்விடுவோம்’
காடோடி அஞ்சினான்;

காட்சியை விட்டு வெளியேறுங்கள்;
காட்டை விட்டு அவர்கள் வெளியேறுகிறார்கள்;
வெறும் தக்கையாக, உடைத்துப் பிளக்கப்பட்ட
புல்லாங்குழல் ஓடையில் மிதப்பதை மட்டும்
நீங்கள் காண வேண்டாம்; அது இசையின் பிணம். ■

• பொள்ளாச்சி அபி
ஓவியங்கள்: கொ.வடிவேல்

# ஒப்பனைக்காரன்..!

ஊரின் நடுநாயகமாக அமைந்திருந்த ஈசுவரன் கோவிலில், சிவராத்திரியை முன்னிட்டுக் கூத்து நடத்துவதற்கான மேடை அமைக்கப்பட்டிருந்தது. அலங்கார



மின்விளக்குகளைப் பொருத்தி முடித்த மைக்செட்காரன் ‘அலோ.. அலோ.. செக்..செக்..’ என்று நிமிடத்திற்கொருமுறை கூவிக்கொண்டிருந்தான்.

மேடையின் வலதுபுறத்தில், சற்றுத் தொலைவில் இருந்த ஆறுமுகம் வீட்டில்தான் கூத்துக் கலைஞர்களின் ‘மேக்கப்’ நடந்து கொண்டிருந்தது. சன்னல் வழியே அதனைப் பார்க்க ஆர்வப்பட்ட பொடிசுகளை, “டேய்.. போங்கடா.. அந்தப்பக்கம்..”, என்று கையில் சிறு குச்சியொன்றை வைத்துக்கொண்டு கெத்தாக விரட்டிக்கொண்டிருந்தான் ஆறுமுகம். பொடிசுகள் கலைவதும், மீண்டும் அங்கே குவிவதுமாக ஆறுமுகத்தை அல்லாட விட்டுக் கொண்டிருந்தனர்.

கூத்துமேடைக்கு முன்பாக, மைதானத்தை இரண்டாகப் பிரித்துப் பெண்களுக்கென்று தனியாக இடம் ஒதுக்கிக் கட்டப்பட்டிருந்த கயிற்றின் ஓரமாகவே தங்களுக்கும், சகாக்களுக்கும் இடம் பிடிப்பதற்காக இளவட்டங்கள் சிலர் மேல்துண்டுகளைத் தரையில் விரித்துப் பரப்பிவிட்டிருந்தனர். கோயில் கமிட்டி உறுப்பினர்கள் சிலர் பெருமையாகப் பேட்ஜு களைக் குத்திக்கொண்டு, பரபரப்பாக அங்கேயும் இங்கேயும் போய்வந்து கொண்டிருந்தனர். இருட்டினால்தான் கூத்து துவங்கும். அதற்கு இன்னும் அரைமணிநேரம் இருக்கிறது.

மைதானத்தின் இடதுபக்கம் பெரிதாய்க் கிளை விரித்துப் பரவியிருந்த வில்வமரத்தின் கீழ், தலையில் துண்டைப் போட்டு முகத்தை மறைத்தபடி உட்கார்ந்திருந்தான் ராதாகிருஷ்ணன். இந்தப் பரபரப்பு எதிலும் கவனம் பதியாமல், ‘சீக்கிரம் இருட்டாயிரோணும். கூத்தும் ஆரம்பிச்சுரோணும்.. அப்பத்தான் நம்மளை யாரும் கண்டுக்க மாட்டாங்க.. இல்லாட்டி இவனுங்க காப்பாத்துறேன்னு

சொல்லி, நம்மளை நிம்மதியாச் சாகவும் வுடமாட்டாங்க..'

'நம்மளைப் புரிஞ்சுக்காத மனுசங்ககூடப் பொழைக்கணும்னு என்ன இருக்கு.. நம்ம பொணம்கூட யார்கிட்டேயும் கிடைக்கக்கூடாது. நல்லவேளை நமக்கு நீச்சல் தெரியாது... கண்ணை மூடிக்கிட்டு, மேக்காலே ஓடற கால்வாயிலே எட்டிக் குதிச்சாப் போதும். அப்புறம் கண்காணாத திசையிலே தண்ணியே நம்மளைக் கொண்டுபோய்ச் சேத்துடும். அப்புடியே இவுங்களுக்கு வேணுமுன்னா.. நாத்தம் புடிச்ச நம்மளோட பொணத்தைத் தூக்கிக்கிட்டு வந்து, சீரு செஞ்சு.. சீரழியட்டும்..!' இன்றிரவில் யாரும் காணாமல் தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்திருந்த ராதாகிருஷ்ணனின் மனமெங்கும் வெஞ்சினமும்,ரோஷமும் பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருந்தன.

தான் கட்டியிருந்த வேட்டியின் இடுப்பு மடிப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். முன் எச்சரிக்கையாக மூன்று பொன்னரளிக் காய்களைப் போட்டு, விழுதாக அரைக்கப் பட்டிருந்த விஷம், அதைப் பொதிந்து வைத்திருந்த காகிதத்தையும் மீறி ஈரம் கசிந்துகொண்டிருந்தது.

கால்முட்டிகளைக் கைகளுக்குள் ஒடுக்கிக் கொண்டு, தலைமுக்காட்டுடன் தீவிர சிந்தனையிலிருந்த ராதாகிருஷ்ணனை விநோதமாய்ப் பார்த்தபடிக் கடந்த யாரோ இரண்டு இளவட்டங்கள் தங்களுக்குள் சங்கேதமாய் விசிலடித்துக் கொண்டனர்.

"போங்கடாப் போங்க.. நாளையிலேருந்து நீங்கெல்லாம் பாக்குறதுக்கு நான் இருக்க மாட்டேன்டா.."

இருட்டு மெதுவாய் வெளிச்சத்தைத் தின்றுகொண்டிருந்தது. மேடையில் நடுநாயகமாக மூன்று நாற்காலிகள் கொண்டுவந்து போடப் பட்டன. 'ஐயோ.. இது வேறயா..? இனிக் கோயில் கமிட்டிக்காரங்க வந்து பேசுபேசுன்னு பேசுவாங்க.. இவிங்க பேச்சை எவன் கேட்பான்? கூத்து ஆரம்பிக்கிற வரைக்கும் அவனவன் அலைஞ்சு கிட்டேத்தானே இருப்பான்.. இவனுங்க எப்ப அடங்கி உட்கார்றது.. நாம எப்பப் போய்க் கால்வாயிலே குதிக்குறது..?' ராதாகிருஷ்ணனின் கவலையை அதிகரிக்கும் வகையில், மேடைக்கு வந்த கோயில் கமிட்டித் தலைவர் கூத்து நடத்தும் குழுவிலுள்ள சொர்ணாம்பிகையின் ஆட்டமும் பாட்டும் எவ்வளவு சிறப்புமிக்கது..! எனப் பேசத் துவங்கிவிட்டார்.

இப்போது நன்றாக இருட்டிவிட்டது. ஒருவழியாகத் துவங்கிவிட்ட கூத்தின் முதல் அயிட்டமாக, மேடையின் ஓரத்தில் அமர்ந்திருந்த ஆர்மோனியப் பெட்டியும், தபேலாவும் சேர்ந்தாற்போல ஒலிக்கத் துவங்கின. வாசிப்பவர்களுக்கு நடுவே அமர்ந்திருந்த இன்னொருவர் திடீரெனப் பெருங்குரலெடுத்துப் பாடத்துவங்கினார்.

"அப்பம் முறுக்கு வடை மோதகம் பாரு நம்ம
ஆனைமுகப் புள்ளையார்க்குத் தொந்தியைப் பாரு..
அம்மாபோல அழகுப் பொண்ணு வேணுமின்னாரு..
ஆத்தங்கரை குளத்தங்கரை கோயில் கொண்டாரு..''

இசையும், தாளமுமாகப் பிள்ளையாரின் பெருமைகளைச் சொல்லியபடி பாடல் வளர்ந்து கொண்டிருந்தது.

விநாயகர் துதி முடிந்தவுடன் திடீரென்று இசை வாத்தியங்கள் அதிர்ந்து முழங்க.. வலப்பக்கம் சிவனும் இடப்பக்கம் பார்வதியும் ஒன்றாய் இணைந்திருக்கும்படி வேஷமிட்டவர் வந்து மேடையின் நடுவில் நிற்க, அடுத்த பாடல் துவங்கியது.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்
மாதொரு பாகனைப் போற்றியே துதிப்போம்.."

பாடலின் வரிகளுக்கேற்ப, மின்னிக் கொண்டிருந்த வண்ண விளக்குகள், மேடையைத் தேவலோகமாக மாற்றியிருந்தன. கூட்டத்தின் மொத்தக் கவனமும் மேடையில் குவிந்திருக்க,

அங்கிருந்து அருள்பாலித்தபடி நின்றிருந்த நடிகரை நோக்கிப் பார்வையாளர் கூட்டம் இப்போது சேவித்துக் கொண்டிருந்தது. ஹரஹர.. சிவசிவ.. என்று யாரோ ஒருவர் முழக்கத்தைத் துவங்கிவைக்க, குரல்கள் அதனைப் பின்தொடர்ந்தன.

அசிரத்தையாகக் கவனிக்கத் துவங்கிய ராதாகிருஷ்ணனின் கண்கள் ஆச்சரியத்தால் மின்னின. மூளைக்குள் ஏதோ அபார சுறுசுறுப்பு பரவியது. கூடவே, விஷத்தை முழுங்கிவிட்டுக் கால்வாயிலும் எட்டிக் குதித்துத் தற்கொலை செய்துகொள்ளும் முடிவு.. தவறோ என்று இப்போது தோன்றியது. அவன் மனத்தில் வேறுவிதமான சிந்தனைகள் அலையடிக்கத் துவங்கின.

ராதாகிருஷ்ணன் ஒரு முடிவிற்கு வந்திருந்தான். திருவிளையாடற் புராணம் துவங்கிவிட்டிருந்தது. உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தவனின் கால்களும், இடுப்பும் பயங்கரமாக வலித்தன. லேசாக நொண்டிக்கொண்டே நடந்தவன், கூட்டத்தைப் பக்கவாட்டு இருட்டில் கடந்து, மேடைக்கு வலப்புறம் சற்றுத் தொலைவிலிருந்த ஒப்பனை அறையின் முன்பாகப் போய்நின்றான்.

அப்போதுதான் வெளியே வந்து அந்த அறையைப் பூட்டுவதற்காகக் கதவைச் சார்த்தியவனிடம், "ஏனுங்க.. இங்க யாரும் இல்லீங்களா..?'' என்ற ராதாகிருஷ்ணனின் குரலைக் கேட்டுத் திரும்பியவனுக்கு ஏறக்குறைய ஐம்பது வயதிருக்கும்.

"நீ யாருப்பா..? என்ன வேணும்..?" புளித்த கள்ளின் மணத்தோடு அவனது கரகரக் குரல் வெளிப்பட்டது. தொண்டையைச் செருமிக் கொண்டு, ஒருமுறை காறித் துப்பினான்.

"இல்லே..எனக்கும் வேசம் போடணும்.. அதான் வேசம் போட்டுடறவரைப் பாத்துக் கேக்கலாமின்னு.."

"நாந்தா.. மேக்கப்மேன்.. உனக்கெதுக்கு வேசம் போட்டுவுடோணும்... நீ என்ன அங்கப் போய்க் கூத்துக்கட்டவாப் போறே..?" 'இப்பிடியொருத்தன் வருவான்னு நம்மகிட்டே யாரும் சொல்லலியே..!' ஒப்பனைக்காரன் இடதுகையால் நெற்றியைத் தேய்த்துக்கொண்டான். மற்றொரு கையால் சார்த்திய கதவைத் திறந்தவன், உள்ளே சென்று ஒற்றை மின்விளக்கைப் போட்டான். 'கோயில் கமிட்டியிலிருந்து யாராவது சொல்லிவிட்டிருப் பார்களோ..' "தம்பி உள்ள வந்து உக்காரு.. நான் கமிட்டித் தலைவருகிட்டே கேட்டுட்டு வந்துடறேன்.."

ஒப்பனைக்காரனைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தவன், "இல்லீங்க.. அவங்க யாரும் சொல்லலை. நானாத்தான் வந்தேன்.."

"இது என்னடா வம்பாப் போச்சு.." என்று முனங்கியவன், வெளிச்சத்தில் வந்துநிற்கும் ராதாகிருஷ்ணனை இப்போதுதான் முழுமையாகப் பார்த்தான். இவனுக்குப் பதினான்கு வயதுதான் இருக்கும். வேட்டியும், சட்டையுமாக நின்று கொண்டிருந்தவனின் மேல் துண்டு, அவனது நெஞ்சை மறைக்கும்படியாக இடது தோளிலிருந்து கீழிறங்கி, வலதுபக்க இடுப்பில் செருகப்பட்டிருந்தது.

ஒப்பனைக்காரனின் நெற்றியும் புருவமும் ஒருமுறை மேலேறிக் கீழிறங்கியது. 'அட.. இது.. அதுவா..?' "சரிசரி. முதல்லே.. உள்ள வந்து இந்த சேர்லே உக்காரு.." கள்ளின் போதை, கண்களில் கிறக்கமாக மாறிக்கொண்டிருந்தது.

ராதாகிருஷ்ணன் அந்த நாற்காலியில் அமர்ந்தவிதம் மிகவும் நளினமாக இருந்தது. எதிரே மேசையின் மேல் வைக்கப்பட்டிருந்த பெரிய கண்ணாடியில், அவனது இடுப்பளவில் தெரிந்த பிம்பம் அளவாய்ச் சிரித்துக் கொண்டிருந்தது.

"ஆமா.. உனக்கு வேசம் போடணுமின்னு சொல்றே.. எதுக்குன்னு சொல்லலியே..!"

"அதுவந்து.. அதுவந்து.. சும்மா எனக்கொரு ஆசைக்காகத்தாங்க.."

"ஆசைக்காகவா.. இதுக்கு அம்பது ரூவா ஆகுமே..!"

"ரூவா எதுவும் இப்ப இல்லீங்களே.."

"பரவாயில்லே.. சின்னப்பையன் ஏதோ ஆசைப்பட்டுக் கேக்குறே.. சும்மாவே போட்டுவிடுறேன்.." என்றபடியே, ராதாகிருஷ்ணனின் முகத்தில், பாட்டிலில் இருந்த திரவம் ஒன்றைப் பரவலாக அடித்துவிட்டு, சிறு துண்டு ஒன்றினால் முகத்தைத் துடைத்து விட்டான். ஒப்பனைக்காரனின் வாயிலிருந்து வந்த புளித்த கள்ளின் நாற்றம் குடலைப் புடுங்கியது. அவன் அழுந்தத் துடைத்தபோது, "ஆ..வலிக்குது.." என்று அலறினான் ராதாகிருஷ்ணன்.

ஒப்பனைக்காரன் பதறிவிட்டான். துடைத்துக் கொண்டிருந்த கையை விலக்கிப் பார்க்க, ராதாகிருஷ்ணனின் இடதுகன்னம் விரல் அடையாளங்களோடு கன்றிச் சிவந்து போயிருப்பது தெரிந்தது.

"என்னடா இது ஒப்புட்டு மாதிரி வீங்கியிருக்குது.. எங்கியாவது கீழே வுழுந்துட்டியா..?"

தனது அலறல் கேட்டு இவன் ஏதாவது கேட்டால் என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்த ராதாகிருஷ்ணன் சுதாரித்துக் கொண்டான். "ஆமாங்க.. வுழுந்துட்டேன்.."

"செரி.. செரி.. பக்குவமா மேக்கப் போட்டுவிடறேன்.. வேசம் போடணுமின்னு சொன்னே.. உனக்கு என்னடா வேசம் போடறது..?"

"சாமி வேசம்.."



"சாமி வேசமா..?"

"ஆமா..அர்த்தநாரீஸ்வரர் வேசம்..!"

சிரித்துக்கொண்டே அவனைப் பார்த்த ஒப்பனைக்காரன், "அர்த்தநாரீஸ்வர வேசமா..? ரொம்..பப் பொருத்தமா இருக்கும் போ.." அவனது பேச்சில் ஒலித்த நையாண்டி, ராதாகிருஷ்ணனுக்குப் புரியவில்லை. ஆனால், அர்த்தநாரீஸ்வரர் யாரெனப் புரிந்துதான் இருந்தது. இப்போதுதான் கூத்துமேடையில் பார்த்துவிட்டு வந்திருந்தான். அந்த வேசம் தனக்குப் பொருத்தமாக இருக்கும் என ஒப்பனைக்காரரே சொல்லிவிட்டார் என்றால்.. அவனது திட்டம் நிச்சயம் நிறைவேறிவிடும் என்று ராதாகிருஷ்ணனுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

"ம்..ம்..நல்லாப் பின்னாடி சாஞ்சுக்கோ.." ஒப்பனைக்காரன் சொல்ல, வசதியாய்ச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான். முதலில் அவனது நீளமான தலைக்கேசத்தைச் சரிபாதியாகப் பிரித்து இரண்டுமுடிச்சுகளை, இறுக்கமாகப் போட்டு விட்டு, முகத்தை மழித்துவிட்டான்.

டேபிளில் பரப்பிவைக்கப்பட்டிருந்த சிறிதும் பெரிதுமான டப்பாக்களில் இருந்த வண்ணப் பொடிகள், ஆயில், ஜிகினா.. என்று ஒவ்வொன்றையும் மற்ற ஏதோவொன்றுடன் கலக்கி, மழிக்கப்பட்ட ராதாகிருஷ்ணனின் முகத்தில், படிப்படியாக அப்பிக்கொண்டிருந்தான் ஒப்பனைக்காரன். கன்னத்தை லேசாகத் தட்டித் தட்டி அவன் மெருகேற்றிக் கொண்டிருந்தது சுகமாயிருந்தது.

ஒப்பனையில் லயித்தபடி லேசாகக் கண்ணை மூடிக்கொண்டான் ராதாகிருஷ்ணன். இமைகளின் இருட்டுக்குள் இப்போது அப்பா, ருத்ரமூர்த்தியாக நின்றுகொண்டிருந்தார். அனிச்சையாக அவனது உடல் ஒருமுறை சிலிர்த்து அடங்கியது.

"ஹரி கிருஷ்ணன்னு உனக்கு எவ்வளவு அழகாப் பேரு வெச்சோம்.. அதை ராதா கிருஷ்ணன்னு மாத்திச் சொல்லிகிட்டு அலைவீயா.. அலைவீயா..? நாங்க வெச்ச பேரை மாத்த உனக்கு என்ன திமிரு இருக்கோணும்..? அப்பனாத்தா வெக்கற பேரை மாத்துறதுக்குப் புள்ளைக்கு என்னடா உரிமையிருக்கு..? எங்க மானத்தை வாங்குறதுக்குன்னே வந்து பொறந்தீயாடா.. நாறப்பயலே..?'' குரலில் பொங்கும் ரௌத்திரத்துடன், கண்கள் தெறிக்கக் கத்திக்கொண்டிருந்த அப்பாவின் ஒவ்வொரு கேள்வி முடிவிலும், அவர் கையிலிருந்த தாம்புக்கயிறுத் துண்டு, சடேர்..சடேர்.. என அவன் உடலில் சாட்டைவரிகளைப் பதித்தது. அதிலிருந்து இரத்தம் கசிந்து துளிர்த்தது. வேதனை தாளாமல் அலறினான். அப்பாவின் பிடியிலிருந்து விடுபடத் திமிறினான்.

"அப்பா..அப்பா.. என்னைய விட்டுருங்கப்பா..!"

"இன்னும் நல்லாப் போடுங்க மச்சான்.. ஊருலே அவனவன் கேக்குற கேள்விக்குப் பதில் சொல்ல முடியலே.. தற்கொலை பண்ணிக்கலாம் போலிருக்கு.. சனியன் புடிச்ச நாயி.. இன்னும் செத்துத் தொலையாமே உயிரை வாங்குது.." அவனது தாய்மாமன் அப்பாவிற்குத் தூபம் போட்டுக் கொண்டிருந்தான்.

அடி தாளாமல் நான் துடிப்பதைப் பொறுக்காமல் எந்த நேரத்திலும் ஓடிவந்து தடுத்துவிடுவாள் அம்மா.. என்ற அவன் எதிர்பார்ப்பிலும் மண் விழுந்தது. ஓரமாய் நின்றிருந்தவளிடம் ஒரு அசைவும் இல்லை. மாறாக அவள் பார்வையிலும் அப்பாவின் குரோதப் பிரதிபலிப்பே தெரிந்தது.

"அம்மா.. காப்பாத்துமா.. என்னையக் காப்பாத்தும்மா..'' வேதனை தாளாமல் அலறிக்கொண்டே, அப்பாவின் பிடியிலிருந்து உதறித் திமிறிக்கொண்டு, அம்மாவிடம் பாய்ந்து சென்றவனை, ஒரு எட்டு முன்னால் வந்து தடுத்து நிறுத்தியவள், அவள் பங்குக்கு விட்டாள் ஒரு அறை. அவனது கன்னம் பழுத்தே விட்டது. "கிட்ட வராதே நாயே.. உன்னைப் பாத்தாலே அருவெறுப்பா இருக்கு.." அப்பா கொடுத்த அடியைவிட, மாமன் போட்ட தூபத்தைவிட, அம்மா விட்ட அறையைவிட.. அவளுடைய வார்த்தைகள் மிகவும் வலித்தன.

ஊராரின் கிண்டலும், பரிகாசமும் இதுவரை பாதித்ததைவிட, அம்மாவின் வார்த்தைகள் அவனைத் திக்குமுக்காடச் செய்தன. திடீரென்று இந்த உலகத்தைவிட்டு அவன் அந்நியமாகிப் போனது போலிருந்தது. அதற்குப் பின், அப்பா மீண்டும் அடித்ததோ, மாமனின் பரிகாசமோ அவனுக்கு உறைக்கவேயில்லை.

வீதியில் உருண்டுபுரண்டு விளையாடும் வயதிலேயே மண்ணைக் குவித்து அவன் செய்து வைத்த கோபுரத்தை, அர்த்தநாரீஸ்வரர் கோவில் என்றபோது, அம்மாவும் அப்பாவும் அவனை வாரியணைத்துக்கொண்டு செல்லம் கொஞ்சினார்கள்.

வீட்டிற்கு ஒரே பையன் என்பதால், அவனுக்குப் பாவாடை சட்டை போட்டுவிட்டு, போட்டோ எடுத்து வீட்டில் மாட்டிவைத்து விட்டு, வருகிறவர் போகிறவர்களிடமெல்லாம், “என் மகனைப் பாத்தீயா.. எவ்வளவு அழகு.. எவ்வளவு லட்சணம்..'' என்று அம்மா சிலாகித்தாள். வந்தவர்கள் ஆமாம் கொட்டி, தலையாட்டிச் சென்றபின், மறக்காமல் அவனுக்குத் திருஷ்டி சுற்றிப் போட்டாள்.

பள்ளி ஆண்டுவிழாவில் பெண்வேடமிட்டு இடுப்பை வளைத்து நெளித்து அவன் ஆடியபோது, அவனுக்குத்தான் எத்தனை திறமையென்று கொண்டாடினார்கள்.

முகத்தில் லேசாக அரும்பு மீசை முளைக்கும் வயதில் மற்ற ஆண்பிள்ளைகளிடம் சேராமல், எப்போதும் பெண்பிள்ளைகளிடமே பேசவும் சேர்ந்து விளையாடவும், பகிர்ந்து கொள்ளவுமே மனம் துடித்தது.

“டேய்.. நீ ஆம்பளை.. எங்களோடவெல்லாம் சேத்துக்க மாட்டோம்..'', என்று பெண்பிள்ளைகளும், “டேய்.. நீ ஆம்பளையே இல்லை..”, என்று ஆண்பிள்ளைகளும் அவனை ஒதுக்கத் துவங்கியபோது.. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

தன்னோடு படித்த பையன்களின் குரலெல்லாம் கம்பீரமாக மாறிக்கொண்டே வர, இவனது குரலில் மட்டும் இனிமை கூடிக்கொண்டே போனது. டிஎம்எஸ் பாட்டுக்களைவிட, சுசீலாவின் பாட்டுக்கள்தான் நன்றாகப் பாடவும் வந்தது.

தலையிலிருந்து இடுப்புவரை தானொரு பெண்ணாக மாறிக் கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றிக்கொண்டே இருந்தது. குரலும், மார்பும் அதற்கான அடையாளங்களைத் தோற்றுவிப்பதில் கூர்மையடைந்துகொண்டே வருவதாகப் பட்டது. குளியலறை அவனுக்கான பரிசோதனைக் கூடமாயிருந்தது. பலமுறை பரிசீலித்ததில் அவனது முடிவு உறுதியாகிக் கொண்டே வந்தது. முன்போல் இடுப்பில் வேட்டியும்,வெற்றுடம்பாகவும் அவனால் இருக்க முடியவில்லை.

அம்மாவிடம் ஒருநாள், இது குறித்துப் பகிர்ந்து கொண்டபோது, “வாலிபப் பசங்களுக்கு இந்த வயசுலே மாரு அப்படித்தாண்டா கட்டும். கொஞ்சநாள் போனாச் செரியாப் போயிரும்..” என்றாள். அவள் சொன்னபடி சரியாகவில்லை. அளவு கூடிக்கொண்டே போனது.

அதற்குப் பிறகு, வீட்டில் யாருமில்லாத ஒருநாளில் அம்மாவின் புடவையையும், ரவிக்கையையும் அவனுக்குத் தெரிந்தவாறு அணிந்துகொண்டு, கண்ணாடியில் பார்த்தபோது அழகு சொட்டுவதாகப் பட்டது. இப்படியே வெளியே போனால் யாரும் தன்னை அடையாளமே காணமுடியாது.. என்று உறுதியாக அவன் நம்பினான். லேசாக இருட்டும்வரை காத்திருந்தவன், மெதுவாக வாசல் விட்டு இறங்கித் தெருவுக்கு வந்தான். தெருவில் படுத்திருந்த நாய் ஒன்று வள்..வள்.. என்று கத்திவிட்டு உடனே அமைதியாகிவிட்டது. அட.. நாய் இவனை அடையாளம் கண்டுபிடித்து விட்டது. மனிதர்களை அடையாளம் காண்பதில் நாய்கள் எப்போதும் உசத்திதான்..!

ராதாகிருஷ்ணனின் முகத்திற்கான ஒப்பனை முழுவதுமாக முடிந்திருந்தது. தலையின் உச்சியில், ஹேர்பின்களின் உதவியோடு ஜடாமுடிக் கொண்டை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அவனது கழுத்திலே மாட்டப்பட்டிருந்த ரப்பர் பாம்பின் தலை அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருந்தது. அந்த அறையிலிருந்த கண்ணாடி இப்போது சட்டை வேட்டியில் இருந்த பரமசிவனை மங்கலாகப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

இது எதையும் உணரமுடியாத அயர்ச்சியால் கண்ணயர்ந்திருந்த ராதாகிருஷ்ணனின் மூக்கு கள்ளின் புளித்த நெடியை மிகநெருக்கமாக உணர்ந்ததில் குமட்டிக்கொண்டு வருவது போலிருந்தது. திடுக்கிட்டு விழித்தவனின் மார்புகளின் மீது, ஒப்பனைக்காரனின் கைகள் அழுத்தமாக ஊன்றிக் கொண்டிருந்தன. லேசாய் வலிக்கவும் செய்தது.

இராதாகிருஷ்ணனுக்கு ஏதோ விபரீதம் எனப் புரிந்தது. ஒப்பனைக்காரனின் கண்களில் மின்னுகின்ற உணர்ச்சி ஒரு வெறிநாயின் கொடூரமான பார்வையாய்த் தெரிந்தது. ராதாகிருஷ்ணனின் உடலெங்கும் பயத்தால் சிலிர்த்தது. அந்தச் சிலிர்ப்பின் வேகத்தோடே, ஒப்பனைக்காரனின் முகத்தில் கையை வைத்துத் தள்ளிவிட, அவன் கரடியாய் இறுக்கினான்.

ராதாகிருஷ்ணனுக்கு எங்கிருந்துதான் வந்ததோ அந்த ஆத்திரம். ஒப்பனைக்காரனைக் காலால் ஒரே எத்து. எதிர்பாராத இந்தத் தாக்குதலால் நிலை குலைந்த ஒப்பனைக்காரன் சத்தம் காட்டாமல் அப்படியே மடங்கித் தரையில் விழ, "யாருக்கும் தொந்தரவு குடுக்காத என்னையவே துன்பப்படுத்திப் பாக்குறிங்களாடா எல்லாரும்.. இதே வேலையாத்தான் இருப்பீங்களாடா எல்லாரும்..!" நாற்காலியிலிருந்து கீழிறங்கிய ராதாகிருஷ்ணனுக்கு இன்னும் ஆத்திரம் தீரவில்லை. தரையில் கிடந்த ஒப்பனைக்காரனை, அவனுடைய அப்பா அவனை எப்படி அடித்து உதைத்தாரோ அதேபோல அடித்து உதைத்தான். அம்மா எப்படி அறைந்தாளோ அதேபோல அறைந்தான்.

ஒப்பனைக்காரன் சந்தடியற்று மயங்கியிருந் தான். அவனது மூக்கிலிருந்து கசிந்த இரத்தம் தரையை லேசாய் ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

ராதாகிருஷ்ணன் சுற்றும்முற்றும் பார்த்தான். அங்கு ஏற்பட்ட சந்தடி யாருடைய கவனத்தையும் கவரவில்லை. சற்றே ஆசுவாசப்படுத்திக் கொண்டான். புலித்தோல் டிசைனில் இருந்த உடைகளையும், பட்டுப் போல மினுக்கிக் கொண்டிருந்த ஒரு புடவையையும், இரும்புக் குழாயால் செய்யப்பட்டிருந்த ஒரு வேல்கம்பையும் எடுத்துக் கொண்டான்.

களேபரத்தில் இடுப்பிலிருந்து சிதறிக் கீழே விழுந்திருந்த அரளிவிஷப் பொட்டலத்தை மறக்காமல் எடுத்துக்கொண்டான். "உங்களை மாதிரிதான் நாங்களும் மனுஷங்கன்னு மதிக்கமாட்டீங்களா..? எல்லாரையும் எப்படி மதிக்க வைக்கணும்னு எனக்குத் தெரியும்டா.. தூ..நாய்களா..!", காறித் துப்பியபடி ஒப்பனை அறையை விட்டு வெளியேறியவன், அவனது சொந்த ஊருக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் பரவியிருந்த இருளில் மெதுவாய்க் கரைந்தான்.

ஊரின் எல்லையில், சாலைக்கு நிழல் கொடுத்துக்கொண்டிருந்த அந்தப் பெரிய அரசமரத்தின் கீழ் சென்று நின்றுகொண்டான் ராதாகிருஷ்ணன். தனது எடையைத் தாங்கும் வகையில், வேலினை பலமாகத் தரையில் ஊன்றிக்கொண்டான். தனது முழுஎடையையும் கொடுத்து ஒருமுறை வேல்கம்பினை ஆட்டிப்பார்த்தான். அது ஆடவில்லை. அடித்து இறக்கியது போலத் தரையோடு பதிந்து நின்றது. இனி எவ்வளவு பெரிய காற்று அடித்தாலும் அசையாது.. அசைக்காது.. என்பதில் அவனுக்கு உறுதியேற்பட்டது.

அடுத்தநாள் நின்றநிலையில் செத்துப் போயிருந்தான் ராதாகிருஷ்ணன். உடல் முழுவதும் நீலம்பாரித்த அரளி விஷத்தோடும், ஜடாமுடியோடும், அர்த்தநாரீஸ்வரர் ஒப்பனை யோடும்..! கழுத்தில் மாட்டியிருந்த ரப்பர் பாம்பு இப்போதும் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

சில மாதங்கள் கழித்து, அவன் சடலம் இருந்த இடத்தில் இப்போது ஒரு கோவில் இருக்கிறது. ஆறுவேளை பூஜைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவிலில் இருந்த அர்த்தநாரீஸ்வரர் சிலையை மக்கள் கும்பிட்டுக் கொண்டிருந்தனர். ■

அகழ்வும் நிகழ்வும்

தொடர் - 2

• முகம்மது பாட்சா

# பாஷோவின் பழைய குளம்

**கோதுமை**
**மரணத்தை உணர்த்தும் வர்ணம்**
**தங்க நிறம்**

இந்த மாடர்ன் ஹைக்கூ 'யுடா கியோகோ' என்ற பெண் கவிஞருடையது. இறந்துவிட்டாலும் புகழ் மட்டும் நிலைத்திருக்கும் என்பதை, என் பார்வையில் இந்த மாடர்ன் ஹைக்கூ உணர்த்துகிறது. ஹைக்கூ இலக்கணங்களில் உட்படாமல், அதே சமயம் அதன் தன்மையை இழக்காமல் எழுதும் கவிதைகளை உலக ஹைக்கூ பவுன்டேஷன் 'மாடர்ன் ஹைக்கூ' என்றே அழைக்கிறது. இதனால் அவர்களால், சுதந்திரமாகச் செயல்பட முடிவதாக உணர்கிறார்கள்.

எதையும் நவீனத்துடன் சொல்லும் பாணி, இப்போது உலக ஹைக்கூ கவிதைகளில் நிரம்பி வழிகிறது. 'ஹோசினாகா புமியோ' வின் இந்த ஹைக்கூவைப் படியுங்கள் , ஹிட்லரின் ஆட்சியை இந்த ஹைக்கூ கவிதை, மிக அழகான வரிகளில் எள்ளி நகையாடிவிட்டுச் செல்கிறது.

**கேளிக்கைப் பூங்கா**
**நாஜிக்களால் நிறைந்திருக்கிறது**
**இலையுதிர்காலம்**

மரணம் என்பதை, சுவையானவொன்றென வெளிப்படுத்தும் மற்றுமொரு நவீன ஹைக்கூ சிந்தனையே, அடுத்துள்ள கவிதை. இதன் சொந்தக்காரர் 'ராபர்ட் மெய்னேன்'.

**இரங்கல் வீட்டுணவு**
**மயக்கும் மண்சுவை**
**இன்னமும் முள்ளங்கியில்**




சாவுவீட்டுச் சாப்பாட்டிலும் மண்சுவை ஒட்டியிருப்பதாகச் சொன்னவர், கடைசி வரியில் அந்த சாப்பிட்டிலிருந்த முள்ளங்கியில் அஃது ஒட்டியிருந்ததாக முடிக்கிறார். 'கண்ணாடி சிறகுள்ள பறவை' என்ற நூலில் சிற்பி எழுதிய கீழுள்ள கவிதை யாரையும் ஆச்சரியப்படவே வைக்கும்.

**ஓவியன் விரல்களை**
**முத்தமிட்டபோது**
**உதடுகளில் வானவில்**

பாகிஸ்தானைச் சேர்ந்த கட்டுரையாளர் 'சுஹைல் அஹமது சித்திக்' ஹைக்கூவைக் கசலின் சிறுவடிவம் என்று வர்ணிக்கிறார்.

இந்தியாவிற்குள் ஹைக்கூவை முதன்முதலில் கொண்டுவந்தவர் இரபிந்திரநாத் தாகூர் என்பது அறிந்ததே. 1914ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற கவிஞர்.. சிறப்பு அழைப்பின் நிமித்தமாகச் சொற்பொழிவு ஆற்ற 1916ஆம் ஆண்டு ஜப்பான் செல்கிறார். அங்கு ஜென் தத்துவங்களை அறிந்துகொள்ள முயன்றவர், ஹைக்கூ கவிதைகளின் மீது பிரியம் கொண்டு, அதன் எளிய முயற்சியை இந்தியாவிற்குள் எடுத்து வந்துவிடுகிறார். முதன்முதலில் ஹைக்கூவைப் பற்றிய கட்டுரையும் பாஷோ, ஷிகி போன்றவர்களின் சில ஹைக்கூ கவிதைகளையும் மட்டுமே, வங்காள மொழியில் எழுதி வெளியிட்டதாகத் தகவல்கள் அறிய முடிகிறது.

பின்னர் தாகூரே எழுதிய ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பு 'STRAY BIRDS' (வழி மாறிய பறவைகள்) என்ற நூலாக வெளியானது. இந்தக் கவிதைகள் சீன மொழியிலும் அதே ஆண்டில் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியானது என்பதும் அவரின் திறனுக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசாகும்.

"பவுத்த ஞானங்களையும், கலைகளையும் உள்ளடக்கிய ஹைக்கூ இந்தியக் கலைகளுக்கும் இலக்கியத்திற்கும் உற்சாகம் தரக்கூடியது", என்று தாகூர் சொல்கிறார்.

**புகழ் என்னை**
**அவமானப் படுத்துகிறது – ஏனென்றால்**
**அஃது இரகசியமாக நானெடுத்த பிச்சை**

**(இது தாகூரின் கவிதை)**

இதே காலகட்டத்தில்தான் லக்னோவைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞரான சையத் ஹஸன் அபித் ஜாஃபரி என்பவரும் தனது ஹைக்கூ கவிதைகள் மூலமாக உருது மொழியில், இந்தியாவின் சிறப்பான இரண்டாவது ஹைக்கூ நூலை வெளியிட்டார்.

1922ல் அவர் வெளியிட்ட அந்த நூலின் பெயர் 'ஜப்பனி ஷைரி பர் ஏக் நஸர்' ('JABANI SHAIRI PAR EIK NAZAR') என்பதாகும். ஆனாலும் உருது மொழியிலாகட்டும் மற்ற இந்திய மொழிகளிலாகட்டும் ஹைக்கூவிற்கான விவாதங்கள் எதுவும் பின்னர் நடைபெறவில்லை. 1936லிருந்துதான் இது சம்பந்தமான விவாதங்கள் மீண்டும் இலக்கிய வட்டாரத்தில் தொடங்குகின்றன.

ஹைக்கூ கவிஞர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒருவர் என்றால், குஜராத்தைச் சேர்ந்த ஜின்னாபாய் தேசாய் என்பவர். குஜராத் மொழியில் ஹைக்கூவை அறிமுகம் செய்த பெருமை இவரையே சேரும். இவரது, 'SONERI CHAND RUPERI SURAJI' (தங்க நிலவு வெள்ளி சூரியன்) என்ற நூல் 359 ஹைக்கூ கவிதைகளை உள்ளடக்கி வந்தது. அதுமட்டுமில்லாமல், அவர் அதில் 6 டங்கா கவிதைகளையும் முயற்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இருண்ட இரவு;**
**நகரம் மிதக்கிறது**
**ஒளியின் தெப்பத்தில்**

**– ஜின்னாபாய் தேசாய்**

தாகூரின் கட்டுரையைப் படித்த தாக்கத்தில் பாரதியார் 1916ஆம் ஆண்டு தனது சுதேசமித்ரன் நாளிதழில் ஹைக்கூ சம்பந்தமான ஒரு சிறு கட்டுரையைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்கிறார். ஹைக்கூவைப் பற்றிய பாரதியின் கட்டுரையைப் படிக்கும்போதே நமக்கும் ஹைக்கூவிற்கான ஆர்வம் மெல்ல எட்டிப் பார்ப்பதில் வியப்பில்லை. ஏனென்றால் அவர் மகா கவிஞனல்லவா! அவரது கட்டுரை இதோ :

ஜப்பானியக் கவிதை



ஜின்னாபாய் தேசாய்

சமீபத்தில் "மார்டன் ரிவியூ" என்ற கல்கத்தா பத்திரிக்கையில் "உயானோ நோக்குச்சி" என்ற ஜப்பானியப் புலவர் ஒரு லிகிதம் எழுதி இருந்தார். அவர் அதிலே சொல்வதென்ன வென்றால் "மேற்குக் கவிதையில் சொல் மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கை யில்லாமல் சொல்லும் வழக்கம் கவிதையிலே இல்லை."

எதுகைச் சத்தம் முதலியவற்றைக் கருதியும் சோம்பற் குணத்தாலும், தெளிவில்லாமையாலும் பல சொற்களைச் சேர்த்து வெறுமனே பாட்டை அது போகிற வழியெல்லாம் வளர்த்துக்கொண்டு போகும் வழக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிகம் இருக்கிறது.

தம்முடைய மனதிலுள்ள கருத்தை வெளியிடுவதில் மேற்குப் புலவர்கள் கதைகள் எழுதுவோரைக் காட்டிலும் சக்தி குறைந்திருக் கிறார்கள். ஜப்பானில் அப்படியில்லை, வேண்டாத சொல் ஒன்று கூடச் சேர்ப்பது கிடையாது.

"கூடை கூடையாய் பாட்டெழுதி அச்சிட வேண்டும்" என்று ஒரே ஆவலுடன் எப்பொழுதும் துடித்துக் கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதையெழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையை கவிதையாகச் செய்தோன். அவனே கவி.



புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம் மலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப் போய் இயற்கையுடன் ஒன்றாக வாழ்பவனே கவி.

கற்று முடிந்து வீட்டுக்குத் திரும்புகையிலே ஒரு சீடன் பாஷோ மட்சுவோ என்னும் புலவரிடம் மூன்று ரியோ [அதாவது ஏறக்குறைய முப்பது வராகன்] காணிக்கையாகக் கொடுத்தானாம் . இவர் ஒரு நாளுமில்லாத புதிதாக வந்த இந்தப் பணத்தை வைத்துக் காப்பது தொல்லையாதலால் "வேண்டியதில்லை" என்று திருப்பிக் கொடுத்து விட்டாராம்.

இவருக்கு காகா [kaga] என்ற ஊரில் ஹொகுஷி என்றொரு மாணாக்கர் இருந்தார். இந்த ஹொகுசியின் வீடு தீப்பட்டெரிந்து போய்விட்டது. அந்தச் செய்தியை ஹொகுஷிப் புலவர் தமது குருவாகிய பாஸோ மட்சுவோ புலவருக்குப் பின்வரும் பாட்டில் எழுதி அனுப்பினார்.

"தீப்பட்டெரிந்தது, வீழு மலரின் அமைதியென்னே!"

மலர் தனக்கு வாழுங்காலம் மாறிக் கீழே விழும் பொழுது எத்தனை அமைதியுடன் இருக்கிறதோ அத்தனை அமைதியுடன் ஞானி தனக்கு வருந்துன்பங்களை நோக்குகிறான். வீடு தீப்பட்டெரிந்தது ஆனால் அது பற்றித் தன் மனம் அமைதியிழந்து போகவில்லையென்ற விஷயத்தை ஹொகுஷி இந்தப் பாடலின் வழியாகத் தெரிவித்தார்.

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" ஜப்பானியக் கவிதையின் விஷேசத் தன்மையென்று நோக்குச்சிப் புலவர் சொல்வதுடன் ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார்.

நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது."கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்". கிழக்குத் திசையின் கவிதையிலே இவ்விதமான ரசம் அதிகந்தான் . தமிழ் நாட்டில் முற்காலத்தில் இது மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனாலும் ஒரேயடியாகக் கவிதை சுருங்கியே போய் விட்டால் நல்லதன்று ஜப்பானிலே

எல்லாப் பாடலும் "ஹொகுசி" பாட்டன்று. "நோக்குச்சி" சொல்வதிலே அருமையான உண்மையிருக்கிறது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் மெய்ப் பொருள் காண்பதறிவு" இதுதான் பாரதி எழுதிய அந்தக் கட்டுரை. இதில் வரலாற்று ஒப்பீட்டில் சில பிழைகள் இருப்பதாகப் பின்னர் சொல்லப்பட்டாலும் அதன் சாராம்சம் நம்மை இதன் பால் ஈர்க்கவே செய்கிறது.

ஹைக்கூ என்பது சிறிய வடிவம்தான் என்றாலும் அஃது கடலைப் போன்று வியாபித்து, இன்று உலகம் முழுவதும் அலையை வீசிக் கொண்டிருக்கிறது. ஜப்பானியப் பழைய ஹைக்கூ கவிதைகள் ஒவ்வொன்றுமே ஒரு மோன நிலையை நம்முள் நிறுத்திவிட்டுச் செல்லும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால் 'கோபயாஷி இஸ்ஸா' வின் இந்த ஹைக்கூவைப் படியுங்கள்:

**ஓ...நத்தையே!**
**ஃபுஜி மலை மீது ஏறு....**
**ஆனால் மெதுவாக, மெதுவாக!**

இங்கு நாம் அந்தக் கவிதையை விட்டு வெளியேறி நத்தையோடு நாமும் பயணிக்கும் உணர்வைப் பெற்றுவிடுகிறோம். அதனால்தான் என்னவோ இஸ்ஸாவின் இந்தக் கவிதை உலகப் பிரசித்தியைப் பெற்றது.

ஹைக்கூவுடன் ஐக்கியப்பட்ட இந்த ஜென், த்யான் போன்ற வார்த்தைகள், போதிதர்மர் சீனாவில் அறிமுகப்படுத்தி பின்னர் ஜப்பானுக்குச் சென்றது என்பது அங்குள்ளவர்களின் நம்பிக்கையும் கூட.

ஜென் தத்துவங்கள் உலக நாடுகளின் இடையே மிகவும் பிரபலமாகச் சென்றடைய 'ஹைக்கூ' ஒரு சிறந்த மீடியமாகச் செயல்பட்டதென்று சொன்னால் எள்ளளவும் மிகைக் கிடையாது.

ஜென் என்ற தத்துவார்ந்த பெயரே, இந்தியாவில்இருந்து அதுவும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருந்துதான் சென்ற தென்றால் வியப்பாக இருக்கும் இல்லையா? அதுதான் உண்மையும் கூட.

தமிழ்நாட்டில், காஞ்சிபுரத்தில் இருந்து, சீனாச் சென்ற போதி தர்மர், சீனாவில் அறிமுகம் செய்ததுதான் 'த்யான்' என்ற கலை. இதுவே சீனாவில் 'சான்' என்று மருவி, ஜப்பானில் 'ஜென்' என்று வடிவம் மாறியதாகச் சொல்கிறார்கள்.

போதி தர்மரைப் பற்றிய நிறைய தகவல்களை ஏழாம் அறிவு படத்திற்குப் பிறகு மக்கள் தெரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள். ஆனாலும் அவை அத்துணையும் உண்மை என்றும் சொல்லிவிட முடியாது. நிறைய இட்டுக் கட்டப்பட்ட திரிபுகளும் அதில் அடக்கமாகி இருக்கின்றன.

போதி தர்மர் தென் தமிழகத்தைச் சார்ந்தவர் என்ற ஒரு கண்ணோட்டம் உள்ள அதே சமயத்தில், சீனாவைச் சேர்ந்த யாத்திரிகர் யுவான்சுவாங் எழுதியுள்ள தன் பயணக் குறிப்பு நூலில், அவர் பாரசீகத்தைச் சேர்ந்த ஞானி என்று எழுதியுள்ளார். அவர் கருப்பு ஆடை உடுத்தியிருந்ததாக அவர் தன் நூலில் சொல்கிறார்.

நாம் நினைப்பது போல் த்யான் என்பது ஏதோ புத்த பிக்குகள் மட்டுமே மேற் கொள்ளும் தியானம் என்று நினைத்தால் அது தவறாகும். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் வாழும் மக்கள் தங்கள் வாழ்வியலின் ஒரு அங்கமாகவே த்யானைக் கருதுகிறார்கள். அப்படித்தான் அவர்களுக்கு அவர்களின் சமூகக் கட்டமைப்பும் சொல்லிக் கொடுத்து வந்திருக்கிறது. அதை இனி விரிவாகக் காணும் முன்பாக பிருந்தாசாரதியின் 'மீன்கள் உறங்கும் குளம்' நூலிலிருந்து ஒரு சிறந்த ஹைக்கூ...

**பூக்கிறது காய்க்கிறது**
**கனிகிறது**
**மயானத்து மரமும்**

– இன்னும் தூர்வாருவோம்

• ஆகி

# என் கேள்விக்கென்ன பதில்?

1. சோழன் கோச்செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் கழுமலம் என்னும் ஊரில் போரிட்டனர். சேரமான் தோற்றுப் போனதால் குடவாயில் கோட்டம் என்னும் இடத்தில் சிறை வைக்கப்பட்டான். சேரமானின் அன்புக்குரிய புலவர் பொய்கையார் அவனை விடுவிப்பதற்காக, சோழனைப் புகழ்ந்து பாடி, பரிசாக சேரமானின் விடுதலையைக் கோருகிறார். எனினும், காலம் தாழ்த்தித் தந்த நீரைக் குடிக்க மறுத்துத் தனது உயிரை விடுகிறான் சேரமான். பொய்கையார் பாடிய நூல் எது?

2. துளுவ நாட்டு அரசனாக இருந்தவர் அவர். பட்டினத்தாரின் சிறப்புகளை அறிந்தவுடன் அவரது சீடனாகித் துறவு பூண்டு சித்தரானவர். அவர் யார்?

3. தமிழ் நாடகங்களை முதலில் உரைநடையில் எழுதியவராகக் கருதப்படுகிறார். 'லீலாவதி சுலோசனா' என்ற அவருடைய முதல் நாடகம் அவரது 22வது வயதில் அரங்கேறியது. நாடகத் தந்தை எனப் புகழப்படும் அவர் யார்?

4. லிட்டன் பிரபு எழுதிய 'The secret way' என்ற நூலைத் தழுவி, சுந்தரம்பிள்ளையால் தமிழில் எழுதப்பட்ட நாடக நூல் அது. இந்நூலை எழுதி முடிக்க பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனது. இந்நூலில் இடம்பெறும் ஒரு பாடலே தமிழ்த்தாய் வாழ்த்தாக உள்ளது. அந்த நூல் எந்த நூல்?

5. முதிரமலைக்குத் தலைவன் அவன். தனது தம்பிக்கு நாட்டை வழங்கியவன். காட்டில் தன்னைக் காண வந்த பெருந்தலைச் சாத்தனார்க்குத் தன் தலையைத் தம்பியிடம் கொடுத்துப் பொருள் பெற்றுக்கொள்ளச் செய்தவன். அவன் யார்?

■

**விடைகள்**

1. களவழி நாற்பது
2. பட்டினத்தார்
3. பம்மல் சம்பந்த முதலியார்
4. மனோன்மணியம்
5. குமணன்

# சிற்றிதழ்ப் போராளி
## கவிஞர் சுகனின் இதழாளுமை!



சிற்றிதழ்ப் போராளி கவிஞர் சுகன் சிற்றிதழ் வெளியில் வெடித்தெழுந்ததொரு தங்கக் கோள். புதுத்திசையில் பெருக்கெடுத்துப் பாய்ந்த பேராறு. போலச் செய்தல்களில் புகாதவர். தனக்கான வழியையும், வடிவையும் தானே தகவமைத்துக் கொண்ட தனித்துவன். படைப்பு நாற்றுகளின் வேர்களில் நீர்ப்பாய்ச்சி, உரமிட்டு வளர்த்தெடுத்த வாஞ்சை இதழாளன். கற்பனைக் கிளைகளை வெட்டி வெட்டியெடுக்கும் போன்சாய் கலைஞன் அல்லன்; படைப்புகளின் அருமைகருதி கூடுதல் பக்கங்களின் எண்ணிக்கையை நோக்காமல் , நோகாமல் அள்ளித்தந்த இதழ் வள்ளல். ஆட்களுக்கு அடிமையாகாமல் ஆக்கங்களுக்கு இடமளித்தவன். இவன் ஆரம்ப நாட்களில் தன் தோள்களில் ஏந்திநின்றவர்களைத்தான் பின்னால் வணிக ஏடுகள் தங்கள் தேர்களில் ஏற்றிக்கொண்டன. மிகவும் இயல்பாகவும், துணிவாகவும் முதல் இதழிலேயே முழுமையான இதழாளனாக வெளிப்பட்டார் சுகன். பாரதியும் கண்ணதாசனும் தன் முன்னோடிகள் என முன்மொழிந்தார். தன் இதழுக்கான இலட்சினையையும், இலக்கு முழக்கையும் முதல் இதழிலேயே தேர்ந்துகொள்ளும் தெளிவு அவரிடமிருந்தது. இருவிழிகளுக்கிடையில் வளைந்து செல்லும் மயிற்பீலியும், "எழுதுகோலால் எண்ணக்கண் திறப்போம்!" என்ற முழக்கும் இதழின் பேரடையாளங்களாகின. இறுதிவரை அவற்றில் மாற்றமின்றித் தொடர்ந்தார். இவற்றை வாசகர்கள் ஆரவாரித்து வரவேற்றனர் என்பதும், இதை அவர் முதல் இதழிலேயே சாதித்தார்

என்பதும் சிற்றிதழ் வரலாற்றின் புதிய கல்வெட்டாகும். தலையங்கம், மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, துணுக்குகள் எல்லாமும் முதல் இதழிலேயே இடம்பெற்றன; அடுத்த இதழில் முதல் இதழ் குறித்த வாசகர் கடிதம் வந்தது. சுகன், (பின்பதிவு பெற்று) சுந்தரசுகன், சௌந்தரசுகன் என்று வந்த 334 இதழ்களும் வெறும் அச்சடித்த தாள்கள் அல்ல. ஓரிதழ் கூடத் தடைபடாமல் ஒலித்த உயிர்ப்புக்குரல். உணர்வுப் பேரலை. அதன் "எழுதுகோலால் எண்ணக்கண் திறப்போம்" தலையங்கம் பக்கநிரப்பியன்று; பூசிமெழுகத் தெரியாத போர்வாள்; அன்னையெனப் பரிந்தூட்டும் அமுதசுரபி; புதுப்பெண்ணின் கன்னச்சிவப்பும் புதுமைப்பெண்ணின் கண்சிவப்பும் சேர்ந்த கலவை; அது தென்றல் சுடராகவும் எரியும்; புயல்பந்தமும் ஏந்தும்! ஆம் சுகனுடையது துணிவினைத் தோழமையாக்கிக்கொண்ட தூய்மை; வாய்மையை வரித்துக்கொண்ட வாழ்க்கை! சுகன் இதழின் நேர்காணல்கள் நேயமும் நிஜங்களும் பொங்கிவழிபவை. பிரபலமானவர்கள் பின்னால் ஓடிக்கொண்டிராமல், மிக எளியவர்களை நாடிச்சென்ற தேடல்கள் அவை. பெண்படைப்பாளர்களுக்கான சொந்தத் தளமாகச் சுகன் இருந்தது. இளம்பிறை, கமலாசிவம், கிருஷ்ணப்பிரியா, காசி.தமிழவதி, சக்திஅருளானந்தம் ......என விரியும் பட்டியல். அதுபோலவே வரைகோடுகளுக்கு வாழ்வுதரும் ஓவியச்சித்தர்கள் ஷராஜ், திண்டுக்கல் தமிழ்ப்பித்தன், பித்தன், சக்திஅருளானந்தம் மற்றும் ஒளிப்படங்களுக்கு உயிர்கொடுக்கும் நெய்வேலி ந.செல்வன் போன்ற ஆற்றலாளர்களை அவர்களின் பிறைப் பருவத்திலேயே அடையாளங்கண்டு பிரியத்துடன் வளர்த்தவர். இன்று படைப்புலகிலும் இதழியலிலும் முன் வரிசையில் இருப்பவர்களான வாமுகோமு, ஷராஜ், என்.டி.ராஜ்குமார், ஆரூர் தமிழ்நாடன், மானா. பாஸ்கரன், இளம்பிறை, இரா.காமராசு, தெ.வெற்றிச்செல்வன்.... போன்றோர் எல்லாம் சுகனின் ஆரம்பகாலப் படைப்பாளிகள்தாம். இதழைப் பற்றிய நிறைகுறைகளை நடுநிலையுடன் அலசும் "கூர்" பகுதி இதழின் இதயத்துடிப்பாக இருந்தது. முகமன் கருத்துகளைவிட முரண் கடிதங்களுக்கு முன்னுரிமை அளித்தார். நீளநீளமான, பக்கங்கள் பலவற்றைத் தின்னும் கடிதங்களின் அமிலமழையில் ஆர்வத்துடன் நனைந்தார். வாசகர்களையும் ஈர்த்து எதிர்பார்க்க வைத்த சூடான, சுவையான பகுதி இது. சுகன் முதல் இதழை வெளியிட்ட நான் அதன் 300ஆம் இதழையும் வெளியிட்டேன். முதல் இதழிலிருந்து, மரணத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டதாக ஒரு பொய்யான நம்பிக்கையோடு சுகன் தயாரித்த 334ஆம் இதழ்வரையிலும் தொடர்ந்து படைப்பாளியாய்ப் பயணித்த உறவாளன் நான். அதனால்தான் சுகன் இதழில் வெளிவந்த என் கவிதைகளை மட்டும் தொகுத்து "சொல்பருக்கைகள்" என்ற பெயரில் வெளியிடும் வரலாற்றுப் புகழ் எங்களுக்கு வாய்த்தது. "முகலாயச் சூரியன்" என்ற வரலாற்றுக் கதைத் தொடரை சுகன் ஆரம்பித்தார். நான் "கொலையுதிர் காலம்" என ஒரு மர்மத்தொடரைத் தொடங்கினேன். ஆனால் இரண்டும் முடியாமல் இடையிலேயே நின்றுவிட்டன. அதைப்போலவே "புறநானூறு" புத்தகத்தை வாங்கித் தந்து, "புதுக்கவிதையில் புறநானூறு" தொடரை எழுத வைத்தார். மிகப் பெரிய வரவேற்பைப் பெற்ற அத்தொடர் எனக்கே உரிய காலந்தவறுதல் காரணமாக - இதழைக் காலத்தே கொண்டுவரும் சுகனின் இயல்பால் - இடையில் நிறுத்தப்பட்டது. இலக்கிய ரிஷி வல்லிக்கண்ணன் ஐயா சாகித்திய விருது பெற்ற தன் "புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்" நூலின் புதிய பதிப்பின் பின்னிணைப்பில் என் புதுக்கவிதையில் புறநானூறு இடம்பெறும்அளவு அத்தொடர் கொண்டாடப்பட்டது. இப்படி, சிற்றிதழ்ப் போராளி சுகன் குறித்த, சுகன் இதழ் குறித்த நினைவுகள் நெஞ்சில் நீங்காமல் நிலைத்திருக்கின்றன.

**நன்றி – முகம்மது பாட்சா**

• கவி: கார்த்திக் திலகன்
சித்திரம்: அழ.ரஜினிகாந்தன்



நோயுற்ற மனைவியின் கை
குழந்தையின் கைபோல இருக்கிறது
எடுத்து நெஞ்சில் வைத்துக்கொள்ள ஏதுவாக...
எத்தனை கோபத்தில் அவள்
இறுக மூடி வைத்திருந்தாலும்
என்னைக் கண்டதும் அவள் மனதின் தாழ்
சட்டெனத் தெறித்துவிடும்
எனக்கான வீடு அவள் மனம்தான்
என்று நம்புகிறேன்
இரண்டு மனங்களுக்கிடையே
ரகசிய சுரங்கவழி ஒன்றிருக்கிறது
யாருமே சொல்ல முடியாத
ஆறுதல்களை
அதன் வழியேதான் நாங்கள்
எடுத்துச் செல்வோம்
இன்று அவள் நோயுற்றிருக்கிறாள்
ரகசியப் பாதையின் கதவுகளைப்
பகிரங்கமாகத் திறக்கிறேன் நான்
அழுகையால்...
கடவுள் நம் கூடவே இருக்கிறார்
கவலையை விடு என்று,
கண்களைத் துடைக்கிறாள் அவள்.
யாருக்கு யார் ஆறுதல் சொல்வது?
இந்தத் தலைகீழ் விகிதங்களை
என்னதான் செய்வது என்று
கைகளைப் பிசைகிறது விதி.....

**நாட்டுப்புற மொழிபெயர்ப்புச் சிறுகதை**

• ஆங்கில மூலம் : ஏ.கே.இராமானுஜன்
தமிழில் : சிறுமேதாவி
ஓவியங்கள் : கொ.வடிவேல்

# ஏழை பக்தன்



ஒரு ஊர்ல ஏழையான சிவபக்தன் ஒருத்தன் இருந்தான். அவன் எப்பவும், சிவனை நினைத்துக்கொண்டே இருப்பான். தினமும் ஏதாவது கூலி வேலைக்குப் போயி, அவனோட பொண்டாட்டி குழந்தைகளைக் காப்பாத்திட்டு வந்தான். ஆனாலும், அவனோட கெட்ட காலம்.. அவன் இன்னும் ஏழையாவே இருந்தான். அவனும் வயசுக்குத் தகுந்த மாதிரி தெடகாத்திரமா இல்லாம, ரொம்ப நோஞ்சானா இருந்தான். அவனுக்குப் பணம் தேவையாத்தான் இருந்துச்சு. ஆனா, பணத்துக்காக சாமி கும்பிடுறத அவனால ஏத்துக்க முடியல. 'எல்லாம் தெரிஞ்ச கடவுளுக்கு நாம ஏழையா இருக்கறது தெரியாதான்னு' அவன் இருந்துட்டான். கொடுக்கறதா இருந்தா அவரே கொடுப்பார்; நாம கேக்க வேணாம்னு இருந்தான் அந்த ஏழை பக்தன்.

ஒருநாள் சிவனும் பார்வதியும் இந்த உலகத்தைச் சுத்திப் பார்க்க வந்தாங்க. இந்த உலகத்தோட அப்பா அம்மாங்கற முறையில, யாருக்கு என்ன வேணும், என்ன செய்யணும்னு அவங்களுக்குத் தெரியும். அந்த ஏழை பக்தனோட, குடிசையைத் தாண்டிப் போகும்போது, பார்வதி சிவபெருமான்கிட்ட, "அவன் யாருன்னு உங்களுக்குத் தெரியுதா? உங்களையே நம்பிட்டிருக்குற ஒரு அருமையான பக்தன். அவன் இவ்வளவு ஏழையா இருக்கறானே? நீங்க அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டாமா?"ன்னு கேட்டாள்.

சிவனும், “ஆமா. கண்டிப்பா நாம அவனுக்காக எதாவது செய்யணும்’’னு சொன்னாரு.

அந்த ஊருக்கு நேர் வெளியே சிவபெருமானோட பையன் விநாயகனோட கோயில் ஒன்னு இருந்துச்சு. அவங்க ரெண்டு பேரும் அந்தக் கோயிலுக்குப் போய், விநாயகனைக் கூப்பிட்டாங்க.

“விநாயகா! இந்த ஊர்ல நல்ல மனுசன் ஒருத்தன், பரம ஏழையா இருக்கான். அவனுக்கு ஒரு ஐயாயிரம் ரூபாய் நீ கொடுக்கணும்”னு சொன்னாங்க.

“இவ்வளவுதானே? நான் கொடுத்தர்றேன்” என்றான் விநாயகன்.

“சொன்னபடி சரியாக் கொடுத்துடு. மறந்துடாதே”ன்னார் சிவபெருமான்.

“அப்படியெல்லாம் பண்ணமாட்டேன்” என்றான் விநாயகன். “ஆனா.. இன்னிக்கு என்னால கொடுக்க முடியாது. நாளைக்கு நான் கண்டிப்பாக் கொடுத்தர்றேன்’’ என்றான்.

“அப்படியே செய்! மறந்துடாதே!”ன்னு சொல்லிட்டு சிவனும் பார்வதியும் அவங்களோட காளை வாகனத்துல ஏறி, மேலுலகத்துக்குப் போனாங்க.

விநாயகனின் சிலையில் இருந்த தங்க நகைகளைத் திருடறதுக்காக, சேலை வியாபாரி ஒருத்தன் அங்க ஒளிஞ்சுட்டிருந்தான். சாமிகள் பேசறதக் கேட்டுட்டிருந்தவன், அதுக்கப்புறம் அவனோட திருடுற திட்டத்தை மாத்திட்டான். ‘நகையத் திருடறது அவ்வளவு நல்லா இருக்காது. மாட்டிக்கிட்டாத் தப்பிக்கறது கஷ்டம்’னு நெனச்சவன், அதுக்கப்புறம் நேரா அந்த ஏழை பக்தனோட குடிசைக்குப் போனான். அவங்கிட்ட, “உனக்கு இப்ப பணம் தேவையா இருக்குது. இன்னிக்கு உனக்கு நான் மூவாயிரம் ரூபா கொடுக்கறேன்னு வெச்சுக்க. நாளைக்கு உனக்கு எவ்வளவு பணம் கெடைக்குதோ அவ்வளவையும் எனக்கே கொடுத்திடுவியா?”ன்னு கேட்டான்.

விவரம் இல்லாத அந்த ஏழை பக்தனும், ‘அட! இது நல்லாருக்குதே!’ன்னு நெனச்சு, அவனோட திட்டம் என்னான்னு தெரியாம “சரி”ன்னுட்டான். அந்த வியாபாரிகிட்ட, “நாளைக்குள்ள எனக்குப் பணம் வர்ற அளவுக்கு ஒண்ணும் இல்லியே’’ன்னு சொன்னான். ஆனா, தந்திரக்கார வியாபாரி, “வர்றது, வராதது முக்கியமில்லே. நாளைக்கு என்ன வருதோ, வர்றத எனக்குக் கொடுக்கணும்”னு சொன்னான். ஒருத்தன் ஒண்ணுமே இல்லாத பரம ஏழையா இருக்கும்போது, இப்படி ஒரு சந்தர்ப்பம் வந்தா வேணாம்னா சொல்வான்? அந்த இடத்துலயே வியாபாரி மூவாயிரம் ரூபாயக் கொடுத்துட்டான்.

அடுத்த நாள் காலையில சீக்கிரமா எந்திரிச்சு ஏழை பக்தனோட குடிசைக்கு வந்து வெளியே உட்கார்ந்துட்டான் சேலை வியாபாரி. விநாயகன் எந்த நேரத்துலயும் அங்க வந்து, ஏழை பக்தனுக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்துவிடுவார் என்று எதிர்பார்த்தான் அவன். ஆனா, மத்தியானம் வரைக்கும் விநாயகன் அங்க வரவே இல்லை; பொழுதாகியும் வரவில்லை; ராத்திரியான பின்னாடியும் அவர் வந்த மாதிரி தெரியலே. வியாபாரி ஆத்திரத்தில் பொருமிக்கொண்டு, ‘சொன்னபடி பணம் கொடுக்க இந்தச் சாமி வரல்லியே’ன்னு முனகிக் கொண்டிருந்தான். ராத்திரியிலயும் சாமி வரலேன்னு தெரிஞ்சதும், அவனுக்கு உண்மையிலேயே கோபம் வந்துடுச்சு. அவன் நேரா விநாயகன் கோயிலுக்குப் போனான்.

அங்க கதவு சாத்தியிருந்துச்சு. அது, உடைஞ்சு போயிருந்த பழைய கதவு. வியாபாரி அதை ஒரு உதை உதைச்சதும், கதவு தெறந்துடுச்சு. ஆனா, அவன் கால் கதவுல அப்படியே ஒட்டிடுச்சு. அவன் காலை எடுக்கறதுக்கு, எவ்வளவோ முயற்சி பண்ணியும் எடுக்க முடியல. காலை இப்படியும் அப்படியும் மாத்தி மாத்தி முறுக்கிப் பார்த்தான்; மேலயும் கீழயும் குதிச்சுப் பார்த்தான்; தள்ளிப் பார்த்தான்; இழுத்துப்பார்த்து, என்னென்னமோ பண்ணினான். ஆனா, என்ன பண்ணியும்

கால எடுக்க முடியல. கோபத்துல அவன் அப்படியே அங்க நின்னுட்டிருக்கும்போது, அந்த வழியாப் போயிட்டிருந்த சிவனும் பார்வதியும் மறுபடியும் கோயிலுக்கு வந்து, விநாயகன்கிட்ட, “அந்த ஏழைக்கு ஐயாயிரம் ரூபா பணம் கொடுத்தியா?”ன்னு கேட்டாங்க.

“ஓ! நேத்தைக்கே மூவாயிரம் ரூபா அவனுக்குக் கொடுத்துட்டேன். இன்னிக்கு ராத்திரி அவனுக்கு மீதி இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்துடுவேன்”னு விநாயகன் சொன்னான்.

“அப்படியே செய்! அதுதான்.. நீ சரியா செஞ்சிடுவே”ன்னு சொன்ன சிவனும் பார்வதியும் அங்கிருந்து போனாங்க.

இது எல்லாத்தையும் கேட்டுட்டிருந்த வியாபாரி, விநாயகரைக் கேட்டான்.

“சாமி! கணபதி! இங்க பாருங்க.. இந்த உடைஞ்ச கதவுல இருந்து என் காலை எடுத்து வுடுங்க. உங்களுக்கு இரண்டாயிரம் ரூபா கொடுத்துடறேன்”னு சொன்னான்.

கணபதியும் உடைஞ்ச கதவுலருந்து அவனோட கால எடுத்துவிட்டுட்டு, அவங்கிட்ட, “அத எனக்குக் கொடுக்க வேணாம். அந்தப் பணத்தையும் ஏழைக்கே கொடுத்துடு. வாக்குக் கொடுத்த மாதிரி நீ அவனுக்குப் பணம் கொடுக்கலேன்னா, நீ எங்க நிக்கறியோ, அங்கயே உன் கால் ஒட்டிக்கும். பார்த்து நடந்துக்கோ!”ன்னு எச்சரிக்கை பண்ணினார் விநாயகன்.

என்னனாலும், வியாபாரிக்குக் கால் வேணுமில்லியா? அதனால அவன் ஒரே ஓட்டமா, ஏழையோட குடிசைக்குப் போயி, பக்தன்கிட்ட மீதி இரண்டாயிரம் ரூபாயையும் கொடுத்துட்டான். இதுதான் ஏழை பக்தன் ஐயாயிரம் ரூபா சம்பாரிச்ச கதை. ■



• மானசீகன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்,
கொ.வடிவேல்

# கொப்பையா

உங்களுக்குக் கண்டிப்பாகக் கொப்பையாவைத் தெரிந்திருக்காது. ஒருவேளை கொப்பையாவைப் பார்த்திருக்கலாம். வியர்வை வழிந்த முகத்தோடு சட்டை போடாமல் அட்டைக்கருப்பு வெளித் தெரிய அவர் தள்ளுவண்டியைத் தள்ளிக் கொண்டு போவதை நீங்கள் அலட்சியமாகக் கடந்து போயிருக்கலாம். இவர்களை ஓட்டுப் போடுவதற்காகவே அரசாங்கம் உயிரோடு வைத்திருக்கிறது என்று கூட உங்களுக்குள் சிந்தனை ஓடியிருக்கலாம்.

ஆனால் கொஞ்சம் உற்றுக் கவனித்திருந்தால் கொப்பையாவின் முகத்தில் எப்போதும் கொப்பளித்துக் கொண்டிருக்கும் அந்தப் புன்னகையைக் கண்டு அதிர்ச்சியடைந் திருப்பீர்கள். இது போன்ற ஜடங்கள் கை கட்டிக் கூழைக்கும்பிடு போட்டு, பயபக்தியோடு கூலி வாங்கி, வாழ்வின் மீதான தீராத கசப்புகளோடு தூங்கி, எழுந்து, புணர்ந்து சாவதற்கோ, காலில் விழுவதற்கோ தயாராயிருக்கும் முகபாவங் களுடனே பார்த்துப் பழகியிருப்பீர்கள். கொப்பையா அவர்களில் ஒருவர் அல்ல; அவர் முகத்தில் எப்போதும் புன்னகை வழிந்து கொண்டேயிருக்கும்.

அது சாதாரணப் புன்னகை அல்ல. கேமராவுக்கு முன்னால் இரண்டாவது தடவை பிரஷ்ஷால் இழுத்து நுரையைத் துப்பிவிட்டுப்



பல்லைக் காட்டுகிறவர்களிடம் இந்தப் புன்னகையைப் பார்த்திருக்கவே முடியாது. ரிசப்ஷனிஸ்டுகள், தொழிலதிபர்கள், உலக அழகிகளாக அறிவிக்கப்படும் மேக்கப் ராணிகள் யாரிடமிருந்தும் இப்படி ஒன்றைக் கண்டிருக்க மாட்டீர்கள். உலகக் கோப்பையை வென்ற நிமிடத்தில் அந்தக் கேப்டனின் முகமும், நெடுநாட்களாக ஏங்கிக் கொண்டிருந்த காதல் வசப்படும்போது மலர்கிற காதலனின் முகமும் கூடக் கண்டிப்பாகக் கொப்பையாவிற்குக் கீழேதான் இருக்கும். கொப்பையாவின் முகத்தில் இருக்கும் அந்தச் சிரிப்புக்கு எந்தக் காரணங்களுமே தேவை இல்லை. பதினாறு கிலோ மீட்டர் உச்சி வெயிலில் தள்ளுவண்டியில் பொருள் ஏற்றிக்கொண்டு போய் போட்ட பிறகு நாளை வரச் சொல்கிறவர்களைக் கொப்பையா தானத்தாழ்வாகக் கிழித்தெடுப்பார். அப்போதும் கூட முகம் இதே மாதிரிதான் இருக்கும். லாங் சாட்டில் இதைப் பார்க்கிற ஒருவனுக்குக் கொப்பையா யாரையோ பார்த்துப் பகவத் கீதை சொல்கிற மாதிரிதான் இருக்கும்.

கொப்பையாவை நான் முதன்முதலாகச் சந்தித்த நாள் இப்போதும் நினைவில் இருக்கிறது. அந்த நாளை என்னால் மறக்க முடியாது. அந்த நாளில்தான் நான் காதலித்த பெண்ணுக்குத் திருமணம். காலையிலேயே ஒரு நண்பன் அக்கறையாகப் பேசுவது போல் கிளறிவிட்டிருந் தான். அவன் அந்தப் பெண்ணுக்குத் தூரத்துச் சொந்தம். பொண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்து போனவாரம் படம் பார்த்ததையும், பொண்ணு நேற்று மாலை முகமெல்லாம் மலர பியூட்டி பார்லர் போய் வந்ததையும் சம்பந்தமே இல்லாமல் ஆனால் தற்செயலாகச் சொல்வது போல் என்னிடம் சொன்னான். எனக்கு அது புரிந்தும் இருந்தது. ஆனால் இந்தச் சுயவதையை நான் விரும்பினேன். இது மட்டும் இல்லையென்றால் என் காதல் மற்றவர்களுடையதைப் போல் சாதாரணமான ஒன்றாக ஆகி விடுமே!

எனக்குத் தண்ணி அடிக்கும் பழக்கம் இல்லை. ஒருவேளை லேசாகப் பழகியிருந்தால் கூட நான் இந்த உலகின் மிகப்பெரிய குடிகாரனாக ஆகியிருப்பேன். நல்ல வேளை! அந்த வாடை எனக்குப் பிடிக்கவில்லை. அதுதான் என்னைக் காப்பாற்றியிருந்தது. போதாக்குறைக்குக் குடிகாரர்களை விடக் கூட இருப்பவர்களுக்குத் தான் சைடிஷ் அதிகம் வாய்க்கும் என்கிற பேருண்மையை அறிந்தவனாயிருந்தேன். நிறைய குடிகார நண்பர்களோடு சுற்றிக்கொண்டே நான் டீடோட்டலராக இருந்தது இதனால்தான்.

சாதிக் அண்ணன் கம்பத்தில் தள்ளுவண்டிப் பட்டறை வைத்திருந்தார். அவர் தன்னை அப்போது கவிஞர் என்று நம்பிக்கொண்டிருந்த காலம். அது மட்டுமல்ல; அந்த நம்பிக்கையை ஊருக்கே பரப்பிக் கொண்டிருந்தார். இப்போதும் அப்படித்தான் என்றாலும் உண்மை அவருக்கு மட்டும் தெரிந்துவிட்டது. அவரிடம்தான் என் சோகங்களைக் கொட்டிக் கொண்டிருந்தேன். ஒரு மணிநேரமாக என்னையே பார்த்தபடி அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். பொதுவாக அவர் அடுத்தவர்கள் பேச்சைக் கேட்பது ரொம்ப அபூர்வம். நான் பிரபஞ்சமே என்னைக் கவனித்துக் கொண்டிருப்பதாய் நம்பி அவரிடம் என் சுமைகளை இறக்கிக் கொண்டிருந்தேன். ஒரு மணி நேரம் கழித்து அமைதியாகக் கேட்டார் 'ஆமாத்தா! டல்லா இருக்கீங்களே! என்ன பிரச்சினை?'. சொன்ன சூட்டோடு ஒரு கஸ்டமரைப் பார்க்கப் போய்விட்டார். அப்போதுதான் கொப்பையாவை முதன்முதலாகப் பார்த்தேன். அப்படிக் கூடச் சொல்லி விட முடியாது. அந்தச் சிரிப்பைக் கேட்டேன்.

பூமி, வானம், சூரியன், நட்சத்திரங்கள், கோள்கள், பஞ்சபூதங்கள் யாவற்றையும் அழித்துவிட்டு இந்தப் பால்வெளியில் ஒரு சிரிப்பு மட்டும் மிதக்க முடியுமா? அன்று மிதந்தது. எனக்கு முதலில் கோபம்தான் வந்தது. 'யாருண்ணே இந்தக் கிழவன்?' சாதிக் அண்ணன் அதற்குள் வந்துவிட்டார். 'த்தோவ் இவர் கொப்பையா. உங்கள மாதிரித்தா! நல்ல மனுஷன்'. நான் கொப்பையாவைப் பார்த்தேன். அழுக்கு வேட்டி மட்டுமே உடுத்தி மடித்துக் கட்டியிருந்தார். டவுசர் வெளியே தெரிந்தது. காலெல்லாம் கன்னங்கரேலென்று. ஆனால் அடிக்கடி எண்ணெய் போட்டது போல் அப்படி ஒரு மினுமினுப்பு. முகம் அந்த மாதிரி அடி வாங்கியிருந்தும் கண்கள் பளீரென்று இருந்தன. வாயில் பெரும்பாலும் பற்களே இல்லை. ஆனாலும் அந்தச் சிரிப்பு விழுகிற இடமெல்லாம் பல் முளைக்கும் போல் இருந்தது.

'கூட்டுக்காரிக்குக் கல்யாணமா?' இப்படித்தான் ஆரம்பித்தார். நான் மௌனமாக இருந்தேன்.

'போகாதது நல்லதுதான். சனியன் அறிவுக்குத் தெரியும். மனசுக்குத் தெரியாது. உனக்கென்ன பிரச்சினை? அவளுக்குக் கல்யாணம் ஆறதா? இல்ல.. கல்யாணத்தப்ப அழுகாம சிரிச்சுக்கிட்டு இருக்கிறதா? இதே இது அவ மூஞ்சிய உம்முன்னு வச்சிருக்கான்னா உனக்கு உச்சி குழுந்துரும். அதானே! நான் சொல்றேன். உன்ன மாதிரி ஒருத்தன் கூடப் பழகுனவ அழுகாம இருக்கமுடியாது. என்னா அவ அத வெளிக் காட்டல. அது சிரிப்பு இல்லப்பா. அழுகைக்குப் போட்டுக்கிற முகமூடி. உனக்கும் தெரியாது. அவ புருஷனுக்கும் தெரியாது அவ அழுகை. மாரியாத்தாவுக்கு வேணும்னாத் தெரியும். நான் சொல்றேன் குறிச்சு வச்சுக்கோ! உனக்கு எவளோடவாவது கல்யாணம் ஆயி பொட்டப்புள்ளதான் பொறக்கும். அது பூமிக்கு வர்றப்ப அழுகும். நீ கதவுக்கு வெளில நின்னிருப்ப! உன் காதுல அது விழுகும். உனக்கு அப்ப புரியும்டா கண்ணு அது இவளோட அழுகைன்னு'.



கொப்பையா மீண்டும் வெடிச்சிரிப்பு சிரித்தார். நான் தாள முடியாமல் குலுங்கினேன். 'ஏய் விடுறா! மனுஷன் நர்ஸ் கையிலயே அழுது தீத்தரணும். அழுகவா வந்தோம் பூமிக்கு. ஒக்காலஓலி அந்தச் சாமிக்கு நாம யார்னு காட்ட வேணாம்? நானெல்லாம் எங்க நர்ஸ்கிட்ட பொறந்தேன்? காட்டுக்குப் போன ஆத்தாவே புல்லு அருவாள்ல கொடியறுத்துத் தூக்கிட்டு வந்துருக்கா. அப்பவே அழுகலையாம். இப்ப வரைக்கும் அழுததில்லை ராசா! பல ராவு பட்டினிதான். மூணு புள்ளைய வயித்தாலக்குப் பறி கொடுத்தவன். பொண்டாட்டி யார் கூடவோ ஓடிட்டா! ஒத்த பொம்பளப் புள்ளதான். வறுமைனால நேத்துப் பிறந்த பயலும் பேர் சொல்லிக் கூப்பிடறான். எல்லாத்துக்கும் பதிலு சிரிப்புதான் சாமி. அழுதா ஆண்டவனுக்கே இளக்காரமா ஆயிடும். அப்புறம் மனுஷனுக்கு எப்புடி? நீ எந்திரி ராசா. இவ வேற சிறுக்கி. உன் சோட்டுக்காரி உன்கிட்டதாய்யா பத்திரமா இருக்கா. அவளப் பார்த்துக்கோ. நீ பாக்காததையா அந்தப் பயமகன் இன்னிக்குத் தொட்டுறப் போறான்?' மீண்டும் அதே வெடிச்சிரிப்பு. எனக்குள் ஏதேதோ காட்சிகள் ஓடின. மனம் தெளிந்திருந்தது. 'வரேன்யா' ன்னு எழுந்தேன். 'அடங்கொப்பன் மகனே! இருடா டீ வாங்கித் தாரேன்.'

பலதடவை கவனித்திருக்கிறேன். கொப்பையா யாரிடமும் டீ வாங்கிக் குடித்ததில்லை. ஆனால் காசிருந்தால் எத்தனை பேருக்கும் வாங்கித் தருவார். அன்னிக்குக் கூலிய அப்படியே செலவழித்துவிட்டுச் சும்மா கூட வீட்டுக்குப் போயிருக்கிறார். கூலியைத் தவிர யாரிடமும் எதுவும் வாங்க மாட்டார். இரண்டு நேரம் சாப்பிடாமல் இருந்தாலும் அடுத்தவர்களிடம் சோறு வாங்க மாட்டார். ஹோட்டலில் டீ மட்டும்தான். பீடி குடித்துப் பார்த்ததே இல்லை. எப்போதும் சிகரெட்தான். பஞ்சு வச்ச சிகரெட். ஒருதடவை கண்மூடி யோசித்துவிட்டு 'நான் போன பிறவில ராசாடோய்' என்றார். அதை நம்பலாம் என்கிற மாதிரிதான் அவர் நடவடிக்கைகள் இருந்தன.

சேமிக்கிற வழக்கமே கிடையாது. பூர்வீக வீடு என்ற பெயரில் ஒரு தகரக் கொட்டகை இருந்தது. மூணு செத்தது போக ஒரே ஒரு மகள். அது கூட இவருது இல்லை. ஓடிப்போன பொண்டாட்டிக்கு 'அவன்' மூலமாப் பிறந்தது. அந்த லாரி டிரைவர் கொஞ்ச நாள் கழிச்சு அவளை ஆந்திராவில் விட்டுட்டு எங்கயோ போய் விட்டானாம். அவள் அடுத்த நாளே அரளி விதை சாப்பிட்டு மகராசியாப் போய்ச் சேர்ந்துவிட்டாள். தாய் புள்ளையாய்ப் பழகிய ஒருத்தி நெடுந்தொலைவு பஸ்ஸேறி வந்து கலைச்செல்வியை இங்கே விட்டுவிட்டுப் போயிருக்கிறாள். அப்போது கலைச்செல்வி 6 மாதக் கைக்குழந்தை.

அந்தக் குழந்தையைக் கையில் வாங்கியபோதும் இதே சிரிப்புதானாம். 'அந்தத் தாயோழி போடற கணக்கெல்லாம் பக்காவா இருக்கே' என்றிருக்கிறார். ஐயப்பசாமிக்கு மாலை போட்ட கருப்பையா 'எந்தத் தாயோழி?' என்று கேட்க சட்டைக்குள்ளிருந்து மாலையை உருவி 'இந்தத் தாயோழிதான்' என்று சிரித்திருக்கிறார். கலைச்செல்வி அவருக்கு ஏத்த மாதிரியே வாய்த்துவிட்டாள். எந்த ஆசையும் இல்லை. இருந்தால் சாப்பிடுவாள். இல்லையென்றால் தண்ணீரைக் குடித்துவிட்டுப் படுத்துக் கொள்வாள். ஆனால் கொப்பையாவைப் போல் அவளால் பசியில் சிரிக்க முடியாது. அது மட்டும்தான் வித்தியாசம்.

அவளுக்கு ரொம்ப நாளாய் விஷயம் தெரியாது. ஒருநாள் குழாய்ச் சண்டையில் எவளோ போட்டு உடைத்துவிட்டாள். ரொம்ப நேரம் அழுதிருக்கிறாள். கொப்பையா வழக்கம் போல் சிரித்துக்கொண்டே கடைசியாகச் சொல்லி யிருக்கிறார். 'அம்மாவக் கர்ப்பமாக்குறவனெல்லாம் அப்பன் கிடையாது தாயி! சில நேரம் நம்ம பருக்கை எந்தப் பாத்திரத்திலயோ வெந்துட்டு நம்ம தட்டுக்கு வரும். நீ அப்படித்தான் கண்ணு. எனக்கு மூணு பொறந்து சிரிப்பாச் சிரிக்க வச்சுப் போயிருச்சு. நீ பேண்டத அள்ளிக் கழுவுனவன் நான்தான். துளி கூட அருவருப்பே இல்லை தாயி! இந்த சென்மத்துல உனக்கு ஆயி, அப்பன் ரெண்டும் நாந்தேன்!' அவள் ஓடிவந்து கட்டிக்கொள்ள அப்போதும் ஏழு வீட்டுக்குக் கேட்கச் சிரித்திருக்கிறார்.

அவளுக்குப் படிப்பு ஏறவில்லை. தையல் பழகி வேலைக்குப் போகிறாள். அதையும் கிண்டலாகச் சொல்வார். 'கலெக்டராவான்னு நினைச்சேன். மோசமில்லை . கலெக்டருக்கு ஜாக்கெட் தைக்கிற யோகமாவது நம்ம வீட்டுக்கு வாச்சிருக்கு.' அவள் வேலை பார்க்கும் கம்பெனி கொஞ்சம் பெரிசு. அதற்கு ஒருதடவை கலெக்டரம்மாவின் அம்மா வந்து போனபோதுதான் கொப்பையா இதைச் சொன்னார். அவள் சம்பாத்யத்தைக் கையால் கூடத் தொட மாட்டார். அவளே சீட்டுப் போட்டிருக்கிறாள்.

எம்.எல்.ஏ. கூட அவருக்குத் தூரத்துச் சொந்தம்தான். 'ரொம்ப நல்ல மனுஷன். மக கல்யாணத்துக்குப் போயிக் கேளு. தட்டாமச் செய்வார்' என்று யாரோ சொன்ன போது உடனே மறுத்து விட்டார். 'அவரக் கேட்டுக்கிட்டாய்யா நா பொம்பளப் புள்ளய பெத்தேன். நமக்கு ஒரு வயிறுதாய்யா. அவுகளுக்கு ஆயிரம் கைய்யி. இருக்கட்டும்யா' என்று தட்டி விட்டார்.

தேர்தல் அன்று தவறாமல் ஓட்டுப் போட்டு வருவார். அவர் திமுககாரர். கலைஞர்னா உயிர். 'டிஸ்கோ கடையில டீ வாங்கி அந்தாளு பேச்சைக் கேட்டுக்கிட்டுச் செத்துப் போகனும்' பார். ஆனால் ஓட்டுப் போடும்போது ஆள் பார்த்துதான் போடுவார். கட்சி அபிமானம், சாதி எல்லாவற்றையும் தூர வீசி விடுவார். 'நைனாரண்ணே தோத்தாலும் என் ஓட்ட வாங்கித் தோக்கட்டும்'பார். 'அப்ப கலைஞர் சி. எம். ஆக வேண்டாமா?' என்று கேட்டால் 'இந்த ஈத்தரப் பய ஓட்டுலயா அவ்வளவு பெரிய மனுஷன் தோத்துப் போயிடுவார்? அது சுயம்புயா. எப்பயும் ஜெயிக்கும்,' அதே சிரிப்போடு முடிப்பார்.

ஏதோ ஒரு மூடில் அவரிடம் தெரியாமல் கேட்டுவிட்டேன். 'சும்மா சிரிக்கிறீகளே! ராசாத்தியம்மா ஒங்கள விட்டு ஓடிப் போன அன்னிக்குமா சிரிச்சீக?' கேள்வி முடிவதற்குள் உரக்கச் சிரித்தார். 'பின்ன.. சிரிக்காம? தாலியக் கழட்டிப் பொறுப்பா சாமி படத்து மேல தொங்க விட்டுட்டுப் போயிருந்தா. பயங்கரமாச் சிரிப்பு வந்துருச்சு. சாமி என்னென்ன சோலி மயிருகளைப் பார்க்க வேண்டியதிருக்கு பாரு.

அந்தத் தாடிக்காரன் இருக்காப்லைல.. அதான் தலப்பா... அட நம்ம பிரதமருப்பா.. ம்.. அவர்தேன்.. மன்மோகன் சிங்.. அவரை விடப் பாவப்பட்ட ஆளு சாமிதானப்பா. நாயமா அதுதான் நம்பளக் கும்பிடனும்' அந்தச் சிரிப்போடுதான் முடித்து வைத்தார்.

சரியாய் என்றைக்கு நடந்ததென்று நினைவில் இல்லை. சாதிக் அண்ணன்தான் ரொம்ப சீரியஸாய் சொன்னார். கொப்பையா சமையல் வேலைக்காக வெளியூர் போயிருக்கும்போது கலைச்செல்வி தனியாய் இருந்திருக்கிறாள். கூட துணைக்குப் படுத்த பொன்னுத்தாயம்மாவிற்கு வயிறு புரட்ட மந்தைக்குப் போயிருக்கிறது. அந்த இடைவெளியில் எவனோ உள்ளே நுழைந்திருக்கிறான். அதே சாதி சனம்தான். இருட்டில் ஆள் அடையாளம் காண முடியவில்லை. திமிறியவளை வாயைப் பொத்திக் கிடத்தியிருக்கிறான். பட்டியக்கல்லில் தலை மோத ரத்தம் வழிந்திருக்கிறது. பாவி மகன் அப்போதும் விடவில்லை. எல்லாம் முடிவதற்கு முன்பாகவே கலை செத்துப் போய்தான் இருந்திருக்கிறாள்.

கொப்பையா மறுநாள் பகலில் வந்திருக்கிறார். யார் மகனோ?எவ புருஷனோ என்கிற பதைபதைப்பில் எல்லோரும் விஷயத்தை மறைத்து, தடுக்கி விழுந்து பட்டியக் கல்லில் அடிபட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். கொப்பையா சிரிக்கவில்லைதான். ஆனால் முகம் அப்படியேதான் இருந்திருக்கிறது. காரிய மெல்லாம் முடிந்த பிறகு பொன்னுதாய் கிழவி மனசு கேட்காமல் கொப்பையாவிடம் சகலத்தையும் சொல்லி விட்டாள்.

மறுநாளிலிருந்து கொப்பையா வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டிருக்கிறார். பகலெல்லாம் நாயாய் உழைப்பு. ராத்திரியானால் கிடைத்த இடத்தில் படுக்கை. பெரும்பாலும் சுடுகாடு. எவனோடும் பேசுவதில்லை. முக்கியமாய் அந்தச் சிரிப்பு காணாமல் போய்விட்டது. யாராவது ஏதாவது கேட்டால் கெட்ட வார்த்தையை ஆங்காரத்தோடு வீசி எறிகிறாராம். வேலை தொடர்பாகவும், டீ, சிகரெட் வாங்கவுமே மனிதர்களோடு சகவாசம். ஒன்றிரண்டு நாய்கள் பின்னால் அலைகின்றனவாம். பொறுப்பாய் பன்னை டீயில் முக்கிப் போடுவாராம். கொஞ்சி முத்தமிடுவாராம். திடீரென ஆவேசம் வந்து கெட்ட வார்த்தை சொல்லி எட்டி உதைப்பாராம். ஆனாலும் அவை வாலாட்டிக் கொண்டே அவரோடுதான் திரிவதாகச் சொன்னார்கள்.

அன்று மதியம் நான் சுடுகாட்டுக்குப் போயிருந்தேன். சவரம் செய்யாத முகம். அழுக்காகி இத்துப்போன வேட்டி. கண்களில் மட்டும் அதே ஒளி. சில நிமிடங்கள் அமைதியாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். பக்கத்தில் உட்காரப் போனேன். நகர்ந்தார். அருகில் அமர்ந்து தோளைப் பற்றினேன். சலனமில்லாமல் பார்த்தார். 'பேசமாட்டீங்களா?' 'உனக்கு என்ன வேணும்?' 'உங்க சிரிப்பு'.

தலையைக் குனிந்தார். உடல் குலுங்கியது. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நிச்சயம் இவை ஊழியின் நிமிடங்கள்தான். கொப்பையாவா அழுவது? இந்த அழுகையை தாங்கிக்கொள்கிற சக்தி பிரபஞ்சத்திற்கு இருக்கிறதா? அந்தாளின் ஆத்தாள் கூட அதைப் பார்த்ததில்லையே. பொன்னுத்தாய் அம்மா அதைச் சொன்ன போது கூட அழவில்லையாம். சிரிப்பு நின்று போயிருந்தது; அவ்வளவுதானாம். கைகளைப் பற்றிக் கொண்டேன். அவரே கண்களைத் துடைத்துக் கொண்டார்.

தீர்மானமான குரலில் சொன்னார். 'போ! நீ ஒரு கிறுக்கன். ஒரு கிறுக்கன் இன்னொரு கிறுக்கனோடு தனிமையில் இருக்கக்கூடாது. உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். ஓடி விடு.' அந்தக் குரல் கட்டளை போலவே இருந்தது. கொப்பையாவின் இந்தக் குரலை நான் கேட்டதே இல்லை. வித்தியாசமாக ஆனால் எப்போதோ, எங்கேயோ கேட்ட ஒன்றாக இருந்தது. மெல்ல நடந்தேன். 'உனக்குப் பொம்பளப் புள்ள பொறக்காது. பையன்தான். பொம்பளப் புள்ள வேணாண்டா.... நிசமாச் சொல்றேன்... பொம்பளப் புள்ள வேணாம்' . கொப்பையாவின் பழைய அதே வெடிச் சிரிப்பு. ஆனால் நான் திரும்பியே பார்க்கவில்லை. வாயைப் பொத்திக்கொண்டே ஓட ஆரம்பித்தேன். ■

• ஜி. ராஜன்

# மலையாளக் கவிதாயினி சுகதகுமாரி

"இரவு மழையோடு
நான் சொல்வேன் –
சோகமிழைந்தோடும்
உன் சங்கீதம் அறிவேன் நான்;
உன் கனிவும்
அழுத்தமான கோபமும்
இருட்டை நாடிய உனது வரவும்
தனிமையில் தேம்பும் உனது அழுகையும்
புலரும் வேளையில்
அவசரமாய் முகம்துடைத்த
பொய்யான உன் புன்முறுவலும்
நான் அறிவேன்;
எப்படி என்கிறாயா?
தோழி, நானும் உன் போல்
இரவில் பெய்தடங்கும் மழைதான்!"

பெண்ணின் மனதை இரவு மழையோடு ஒப்பிடும் இந்த அற்புதமான கவிவரிகளின் சொந்தக்காரர் கேரளம் போற்றும் கவின் மலையாளக் கவிஞர் சுகதகுமாரி. சுற்றுச்சூழல் இயக்கங்களுக்கும் பெண்ணிய இயக்கங்களுக்கும் முன்னோடியாய்த் திகழ்ந்துகொண்டிருக்கும் ஒரு மலையாளப் பெண்மணி தலைசிறந்த கவிஞராகவும் உலாவந்து மலையாள இலக்கிய வானில் ஒரு தாரகையாய் மின்னிக் கொண்டிருக்கிறார்.

கவிஞரும் விடுதலைப் போராட்ட வீரருமான திரு போதேஸ்வரன், சமஸ்கிருதப் பண்டிதையான திருமதி கார்த்தியாயினி தம்பதிகளின் புதல்வியாக 1934 ஜனவரியில் பிறந்த சுகதகுமாரி தந்தையின் வழியில் சமூக ஈடுபாடும் இலக்கிய ஆர்வமும் கொண்டு வளர்ந்தார். திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியில் தத்துவ இயலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். சுகதகுமாரியின் சகோதரி திருமதி இருதயகுமாரி அவர்களும்



அமைதிப்பள்ளத்தாக்கு- நன்றி zee news



சுகதகுமாரி – நன்றி மாத்ருபூமி

மிகச்சிறந்த பேச்சாளரும் கேரள சாகித்திய அகாடமி விருதும் பெற்ற ஒரு இலக்கியவாதி ஆவார். சுகதகுமாரியின் கணவர் டாக்டர் கே. வேலாயுதன் நாயர் அவர்கள் மலையாள மண்ணின் ஒரு புகழ்பெற்ற கல்வியாளர் ஆவார்.

"சுகதகுமாரி டீச்சர்" என்று அன்பாகக் கேரள மக்களால் அழைக்கப்படும் இந்தக் கவிஞர் அகவை எண்பதைத் தாண்டியவர். நாட்டின் பழம்பெரும் இயற்கை வளம் கொழிக்கும் காடுகளில் ஒன்றாகத் திகழும் 'அமைதிப் பள்ளத்தாக்கு' (Silent Valley) என்றழைக்கப்படும் கேரளத்தின் அழகான வனப்பகுதியை அழிக்கக்கூடிய நீர்மின்சக்தித் திட்டத்தைக் கொண்டுவர எழுபதுகளில் அப்போதைய அரசுகள் முயற்சி செய்தன. அதனை எதிர்த்து ஒரு பெரும் இயக்கத்தைத் தொடங்கியபோதுதான் இக்கவிஞரை அகில இந்திய அளவில் மக்கள் அறியத் தொடங்கினர். "அமைதிப் பள்ளத்தாக்கைக் காப்போம்" (Save Silent Valley) மக்களியக்கத்தை முன்னின்று நடத்திய, இயற்கை மீது பெரும் காதல்கொண்ட இந்தக் கவிஞரின் "மரத்தினு ஸ்துதி" (மரத்துக்கு வணக்கம்) எனும் கவிதை நீரில் மூழ்கும் அபாயம் கொண்டிருந்த அமைதிப் பள்ளத்தாக்கைக் காப்பாற்றும் இயக்கத்தின் நிகழ்ச்சிகளில் வாழ்த்து கீதமாய் ஒலித்தது. "பிரகிருதி சம்ரக்ஷண சமிதி" எனும் இயற்கையைப் பாதுகாக்கும் ஒரு அமைப்பு துவங்கியதில் கவிஞரின் பங்களிப்பு மிக முக்கியமானது. இயற்கையன்னையின் எழிலைப் பாதுகாக்கும் நோக்கம் மட்டுமல்லாமல் சிங்கவால் குரங்கு என்கிற விலங்கினத்தின் அழிவுக்கு ஒரு அபாய சங்காக ஒலித்த நீர்மின்சக்தித் திட்டம் கவிஞர் சுகதகுமாரியின் இயக்கத்தின் வெற்றியாக அரசால் கைவிடப் பட்டது. ஒரு தேசிய வனப்பூங்கா அங்கு உருவாவதற்கும் காரணமானது.

பெண் மன நோயாளிகள் அரசு மருத்துவ மனைகளில் பெரும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான மனிதாபிமானமற்ற அன்றைய நிலையைக் கேரளத் தலைநகரின் மருத்துவ மனையில் ஒருமுறை பார்க்க நேரிட்ட கவிஞர் சுகதகுமாரியின் பெண் கவிதை மனது "அபயா" எனும் ஆதரவற்ற மனநிலை பிறழ்ந்த பெண்களுக்கான அடைக்கல இல்லம் தொடங்கக் காரணமானது. சுகதகுமாரி அவர்கள் கேரள மாநில மகளிர் ஆணையத்தின் தலைமைப் பொறுப்பிலும் சிறந்த பணியாற்றியிருக்கிறார்.

மலையாள இலக்கிய வானில் ஒரு வானம்பாடியாய்ப் பறந்த கவிதாயினி சுகதகுமாரி சாகித்ய அகாதமி விருது (1978) பெற்றவர். "ராத்திரி மழ" (இரவு மழை) எனும் அவரது கவிதைத் தொகுப்பு நூல்தான் அவருக்கு அந்த விருதினைப் பெற்றுத் தந்தது. இந்திய அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ (2006) விருதும் அவரை நாடி வந்தது. அவர் பெற்ற விருதுகள் பற்பல. கேரள மாநில சாகித்ய அகாதமி விருது (1968), ஒடக்குழல் விருது (1982), வயலார் விருது (1984), இந்திரா பிரியதர்ஷினி விருட்ச மித்ர விருது (1986), ஆசான் விருது (1991), வள்ளத்தோள் விருது (2003), எழுத்தச்சன் புரஸ்காரம் (2009),

சரஸ்வதி சம்மான் (2002) என விருதுகள் ஒவ்வொன்றாகக் கவிஞரைத் தேடி வந்தன.

அவரது இலக்கியப் படைப்புக்களில் ராத்திரி மழ (இரவு மழை), முத்துச்சிப்பி, பாதிராப்பூக்கள் (நள்ளிரவுப்பூக்கள்), பாவம் மானவ ஹிருதயம் (பாவம் மானுட இதயம்), இருள் சிறகுகள், அம்பல மணி (கோவில் மணி), குறிஞ்சிப்பூக்கள், துலாவர்ஷப் பச்ச (பருவமழைப் பசுமை), ராத எவிடே (ராதா எங்கே), தேவதாசி, மணலெழுத்து போன்றவை மிகச் சிறந்தவையாகக் கருதப் படுகின்றன. இவரது படைப்புக்கள் பல மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு உலக இலக்கிய ஆர்வலர்களுக்கு விருந்தானவை. மழலையர் இலக்கியங்களிலும் இவர் பல படைப்புக்கள் படைத்துக் குழந்தை இலக்கியத்துக்கான ஆயுள்கால விருதையும் மாநில அரசிடமிருந்து பெற்றார். குழந்தைகளுக்காகத் "தளிரு" (தளிர்) எனும் இதழையும் நடத்தி வந்தார். பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு விருதுகளும் இவரைத் தேடி வந்ததில் ஆச்சரியம் இல்லை.

இயற்கையை நேசிக்கும் ஒரு தாயுள்ளத்தோடு இவர் எழுதிய பல கவிதைகளும் மிகப் பிரபலமானவை. அவரது முதல் கவிதை 1957ஆம் ஆண்டு ஒரு பிரபலமான மலையாள இதழில் வெளியிடப்பட்டது. பெண் இனத்துக்கு இழைக்கப்படும் அநீதியும் வேதனைகளும் ஏற்றத்தாழ்வுகளும் அவரது கவிதைகளின் வலிமிகும் வரிகளில் எதிரொலித்தன.

செந்தமிழிலிருந்து பிறந்த திராவிட மொழிகளில் தமிழுக்கு நெருக்கமான கவின் மலையாளத்தின் படைப்பாளியும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான திருமதி சுகதகுமாரி இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மானுட இனத்துக்கும் இயற்கைக்கும் தொண்டு புரிய வாழ்த்துவோம்.

மானுடத்தால் மெல்ல மெல்லக் காடுகள் அழிக்கப்படும் அவலநிலை குறித்துக் கவிதாயினி சுகதகுமாரி எழுதியதுதான் "ஒரு பாட்டு மீண்டும்" என்கிற புகழ்பெற்ற மலையாளக் கவிதை. வெட்டப்பட்ட ஒரு அடிமரத்தின் கட்டை மீதமர்ந்து தனது அந்திமக்காலம் நெருங்கி விட்டதை உணர்ந்து சிறகொடிந்துபோன ஒரு காட்டுப் பறவை இறுதியாகப் பாடும் நிலையை ஒரு வலிமிகும் கவிதையாய் வடித்திருக்கிறார். அந்த அற்புதமான கவிதை தமிழில் :

## ஒரு பாட்டு மீண்டும்

**மலையாள மூலம்: சுகதகுமாரி**
**தமிழில்: ஜி. ராஜன்**

ஒரு பாட்டை
மீண்டும் பாடத்துடிக்கும்
சிறகொடிந்ததொரு காட்டுப் பறவை;

கோடரி தின்றுவிட்ட மாமரக்கொம்பில்
தனிமையிலமர்ந்து ஒடியாத ஒற்றைச்சிறகடித்து
வலிக்குமென்று மெல்ல அசையாமல்
பாவம் முயன்று பாடுகிறதந்தக் காட்டுப் பறவை;

இடறுகின்ற பாடலுக்கு
எசப்பாட்டு பாட இணைப்பறவை இல்லை;
கூட்டமாய்ச் சேர்ந்து பாடக் கிளிகள் இல்லை;
வழக்கமாய்க் கொத்திப் பிரிந்து போயின
மெய்ச்சூட்டால் அடைகாத்து
விரித்த குஞ்சுகுழந்தைகள்;
எவருக்குமல்லாத
வெளிச்சத்தையும் கானத்தையும்
காற்றையும் மனதில் குடியமர்த்திப் பாடுகிறது;

அந்திவேளையின் வரவு கண்டு
ஒரு சின்னஞ்சிறு இரவுப்பூ கண்விழிக்கும் நேரம்–
ஒரு பாட்டை மெல்ல இசைக்கும்
சிறகொடிந்த அந்தக் காட்டுப் பறவை;

இருளில் ஒலிக்கும் அப்பாடல் கேட்டிடவே
கூட மரமுண்டு; மழையுண்டு; குளிரும் உண்டு;
நிழலுண்டு; ஆறுண்டு; தலையாட்டிட
மரத்தின் கீழ் புல்லும் உண்டு;
யாருமில்லாவிடிலும் கேட்கவே
ஆயிரம் கிளைகளில் பூத்த தாரகைகள் உண்டு;
அப்பாட்டில் மகிழ்வின் தேனுண்டு;
கனவுமுண்டு; கண்ணீருமுண்டு;

அப்பாடலை மீண்டும் ஒருமுறை பாடவே
சின்னஞ்சிறு சிறகின் வேதனை மறந்து
இனி பறக்கவும் இயலா நிலை மறந்து
விரியும் வானத்தை உள்ளத்தால் அணைத்து
வெட்டப்பட்ட அடிமரக்கட்டை மேல் சாய்ந்து
ஒற்றைச்சிறகின் தாளத்தோடு
ஒரு பாட்டை மீண்டும் தெளிந்து பாடுகிறது
அந்தச் சிறகொடிந்த காட்டுப் பறவை!! ■

• விந்தன்
ஓவியம் : கொ.வடிவேல்

# பொன்னையா

“என்னா சின்னி வயிற்றைக் கிள்ளுகிறது; சோத்தையாச்சும் வடிச்சயா?’’, என்று கேட்டுக்கொண்டே வந்தான் பசியால் வாடிய பொன்னையா.

‘‘நீயும் கேட்கிறயே! வெட்டவெளியிலே அடுப்பைப் பற்ற வச்சிட்டு நான் அவதிப்படறேன். குழந்தை வேறே பனியிலே படுத்துக் காலையிலேருந்து காயலாக் கிடக்குது. எனக்கு வேலையே ஒண்ணும் ஓடலே. அடிக்கிறக் காத்துலே இந்த அடுப்பு கொஞ்சமாச்சும் எரியுதா?” என்று எரிந்து விழுந்தாள் சின்னி.

“என்னை என்ன பண்ணச் சொல்றே.. சின்னி? என் அப்பன் எனக்கு ஆஸ்தியா வச்சுட்டுப்போன அந்த ஒரே ஒரு பொத்தல் குடிசையையும் பாழாய்ப் போன வெள்ளம் வந்து அடிச்சுட்டுப் போயிடிச்சு. இப்ப அந்த வீட்டைக் கட்டறதுன்னா கையிலே காசில்லே...”

“எதுக்குத்தான் ஒங்கிட்டெ காசு இருந்தது? நீயும் வந்து வெடிஞ்சயே, என் தலையிலே! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நான்



என்ன சுகத்தைக் கண்டேன்? நகை உண்டா? நட்டு உண்டா? இல்லை நல்ல புடவையாச்சும் ஒண்ணு உண்டா? நான் வந்த வழி!...ஊ...உம்...ஊ....உம்" என்று தன் புடவையின் மேலாக்கை எடுத்துக் கண்களைக் கசக்கிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள் சின்னி.

"அழு, அழு! நல்லா அழு! நான் அந்தத் தெருப்பக்கமாகப் போயிட்டு வாரேன்!" என்று கீழே வைக்கப்போன அடைப்பத்தை மீண்டும் தூக்கி அக்கத்தில் வைத்துக் கொண்டு நடந்தான் பொன்னையா.

...

வீட்டுக்கு வீடு 'ஸேப்டி ரேஸர்' வைத்துக்கொண்டிருக்கும் இந்த நாளிலே பொன்னையாவின் பிழைப்பு க்ஷீணதசையை அடைந்திருந்தது. கிடைத்ததைக் கொண்டு வயிற்றைத் திருப்தி செய்துகொள்ளவே அவனால் முடியவில்லை. இந்த லட்சணத்தில் அவன் இழந்த வீட்டை மீண்டும் கட்டிக் கொள்வதென்றால் குறைந்தது ஐம்பது ரூபாயாவது வேண்டுமே! அடே அப்பா! இந்த ஜன்மத்தில் அத்தனை ரூபாயை அவன் கண்ணாலாவது பார்க்க முடியுமா?

உலகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதுதான்; அது எல்லோருக்கும் சொந்தம்தான். ஆனால், பணக்காரர்கள் சிலர் அதை ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கு போட்டுக்கொண்டு, "இது என்னுடையது; அது உன்னுடையது" என்று உரிமை கொண்டாடுகிறார்களே.. அவர்களுக்கு மத்தியில் ஏழை பொன்னையாவுக்கு வாழ இடமுண்டா?

'எல்லோரும் ஓர் குலம்' என்பதெல்லாம் எழுத்திலே. வெறும் பேச்சிலே! நடை முறையிலோ?

நாடு நகரங்களில் எத்தனையோ மாட மாளிகைகள், கூடகோபுரங்கள்! மேல் ஜாதியைச் சேர்ந்த எத்தனையோ பேர் அவற்றில் ஒண்டுக் குடித்தனம் செய்கின்றனர். அவர்களுடன் நாய்கூடச் சரிசமானமாக வாழ்ந்து வருகிறது. ஆனால் பொன்னையா? அவன்தான் கீழ் ஜாதியாச்சே! மரணமடைந்த பின் மயானத்தில் கூட அவனுக்குத் தனி இடந்தானே?

...

"சின்னி! எனக்கொரு யோசனை தோணுது; எங்கேயாச்சும் ஒண்டுக் குடித்தனம் இருக்கலாம்னு பார்க்கிறேன்!" என்றான் ஒருநாள் பொன்னையா.

"நல்ல யோசனைதான்; நமக்கு யார் வீடு விடுவாங்க?" என்று கேட்டுச் சிரித்தாள் சின்னி.

"நம்ம ஜில்லா போர்டுக்குத் தலைவரா யிருக்காரே தர்மலிங்கம். அவர் எப்பப் பார்த்தாலும் 'எல்லோரும் ஓர் குலம்'னு பேசிக்கிட்டிருக்காரு; நம்ம ஜாதியும் அவரு ஜாதியும் ஒண்ணுன்னு சொல்றாரு. அதாலே அவரைக் கேட்டா நமக்குக் கொஞ்சம் இடம் விடுவாரு, இல்லையா?"

"என்னமோ கேட்டுத்தான் பாரேன்?"

"இரு, கேட்டுக்கிட்டு வாரேன்" என்று சொல்லிவிட்டு, அவருடைய வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றான் பொன்னையா.

...

"அம்மா! ஐயா இருக்காரா?"

"யாரடா அது? பொன்னையா?" என்று கேட்டுக்கொண்டே வாசலுக்கு வந்தார் தர்மலிங்கம்.

"ஆமாங்க!"

"எங்கே வந்தே?"

"வெள்ளம் வந்து என் வீட்டை அடிச்சுக்கிட்டுப் போயிட்டுதுங்க; அதைத் திருப்பிக் கட்டலாம்னா கையிலே காசில்லிங்க! பனியிலே படுத்துப் படுத்துக் குழந்தை வேறே காயலாக் கிடக்குது. அதாலே உங்க வீட்டுத் திண்ணையிலாச்சும் கொஞ்சம் இடம் கொடுத்தீங்கன்னா, என்னமோ நாங்க பொழைச்சுப் போவோம்!"

இதைக் கேட்டதும் தர்மலிங்கத்துக்குத் தர்மசங்கடமாக இருந்தது. பொன்னையாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. எதற்கும் தமது மனைவியுடன் கலந்து யோசித்துப் பார்க்கலாம் என்று எண்ணியவராய், "சரி நாளைக்கு வாடா!" என்று சொல்லி அவனிடமிருந்து அந்த நிமிஷம் தப்பிவிட்டார்!

...

‘‘பத்மா! பொன்னையாவின் வீடு வெள்ளத்திலே போயிடுத்தாம்; நம்ம வீட்டுத் திண்ணையிலே கொஞ்சம் இடம் வேணும்னு கேட்கிறான்” என்று எண்சாண் உடம்பையும் ஒரு சாணாக ஒடுக்கிக் கொண்டு, தன் மனைவியிடம் தாழ்மையோடு விண்ணப்பம் செய்துகொண்டார் தர்மலிங்கம்.

‘‘ரொம்ப அழகாகத்தான் இருக்கு! போயும்போயும் அந்தக் கீழ் ஜாதி நாயைக் கொண்டு வந்து...” என்று ஆவேசத்துடன் இரைய ஆரம்பித்துவிட்டாள் அவள்.

“உஸ்! யாராவது கேட்டுக்கொண்டே உள்ளே வந்துவிடப் போகிறார்கள்!” என்று அவள் வாயைப் பொத்தினார் தர்மலிங்கம்.

அவள், வாசல் வரை சென்று எட்டிப் பார்த்துவிட்டு வந்து, “யாரையும் காணோம்! ஆமாம், அதற்கு நீங்கள் என்ன சொல்லித் தொலைத்தீர்கள்?” என்று கேட்டாள்.

“என்னத்தைச் சொல்வது? ‘எல்லோரும் ஓர் குலம்’னு எடுத்ததுக்கெல்லாம் தொண்டை கிழியக் கத்தும் நான் என் வீட்டுத் திண்ணையில் அவனுக்குக் கொஞ்சம் இடமில்லையென்றால்...?”

“அதற்கு நான் ஒரு வழி, சொல்கிறேன்” என்று சொல்லிக்கொண்டே பத்மா ஓடோடியும் வந்து, அவர் காதோடு காதாக ஏதோ சொல்லி வைத்தாள்.

அதைக் கேட்டதும் தர்மலிங்கத்தின் முகம் ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தது. ‘அடியே! பெண் புத்தி பின் புத்தி என்று சொல்கிறார்களே, அவர்களைக் கொண்டு போய் உடைப்பில்தான் போட வேண்டும்!’ என்று அகங்கனிந்து சொல்லி அவளை அன்புடன் தழுவச் சென்றார், அவள் விலகிக் கொண்டாள்!

...

மறுநாள் பொன்னையா வந்தான். அவன் கொஞ்சமும் எதிர்பாராதவிதமாக “ஏண்டா, பொன்னையா! எத்தனை நாளைக்குத்தான் நீ என் வீட்டுத் திண்ணையில் பொங்கித் தின்று கொண்டிருக்க முடியும்? இந்தா இந்த ஐம்பது ரூபாயைக் கொண்டு போய் உனக்கென்று ஒரு வீட்டைக் கட்டிக்கொள்” என்று அவனிடம் ஐம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தார் தர்மலிங்கம்.

நல்ல வேளையாகப் பொன்னையா மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விடவில்லை. இரு கைகளையும் ஏந்தி அந்தப் பணத்தைப் பக்தி சிரத்தையுடன் பெற்றுக்கொண்டான். “நீங்க நல்லாயிருக்கணும் சாமி!” என்று நெடு மரம் போல் அவர் காலில் விழுந்து கரைபுரண்டு வந்த கண்ணீரால் அவருடைய பாதங்களை நனைத்தான்.

“ஆமாம், இவனுக்குப் பணம் கொடுக்காவிட்டால் நான் கெட்டுப் போய்விடுவேனாக்கும்!” என்று தம்முள் முணுமுணுத்துக் கொண்டார் தர்மலிங்கம்.

...

ஆனந்தக்கடலில் நீந்திக்கொண்டு வந்த பொன்னையா, அடுத்த நிமிஷத்தில் தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான். ஆவலே உருவாய்த் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சின்னியிடம் ஐம்பது ரூபாயைக் கொடுத்தான்.

“ஐயோ சாமி, இத்தனை பணம் உனக்கு ஏது?’’ என்று திடுக்கிட்டுக் கேட்டாள் சின்னி.

“ஐயாதான் கொடுத்தாரு!“ என்றான் பொன்னையா.

‘‘மவராஜா! இந்த ஏழைகளுக்கு இவ்வளவு பணம் கொடுத்தாரே! அவரு மனுசர் இல்லை; தெய்வம்!”

“தெய்வந்தான்! இல்லேன்னா என்னை உன் வாயிலேயிருந்து காப்பாத்தியிருக்க முடியுமா?’’ என்றான் பொன்னையா சிரித்துக்கொண்டே.

அந்தப் பணம் மனமுவந்து கொடுத்த பணமல்ல; மனைவி சொன்ன யோசனையின் பேரில் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கொடுத்த பணம்; தன்னை எப்பொழுதுமே தாழ்த்தப்பட்டவனாக வாழச் செய்யும் பணம் அது என்பது ஏழை பொன்னையாவுக்கு எப்படித் தெரியும்?



# வாசகர் எண்ணங்கள்



➲ அன்புள்ள படைப்பு தகவு ஆசிரியர் அவர்களுக்கு..

வணக்கமுடன் ஹரணி.

முதல் இதழ் தகவு, அதுவும் மின்னிதழ் கண்டேன். அற்புதமான வடிவமைப்பு. நேர்த்தி. சிக்கலில்லாத எழுத்துகள். போதிய வாசிக்கும் இடைவெளியில் படைப்புகள். மொழி பெயர்ப்புகள், கவிதைகள், சிறுகதைகள், கட்டுரை, நிகழ்வுகள், நூல் விமரிசனம் என களை கட்டுகிறது இதழ். அத்தனையும் தகுதி தரமும் மிக்கவையாய் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாகச் சிற்றிதழ்ப் போராளி சுகனின் மனைவி சகோதரி செளந்தரவதனாவின் நேர்காணல் மனம் கசிய வைத்தது. மிகச் சிறந்த சமரசம் செய்துகொள்ளாத கலைஞன் சுகன். இதுபோன்ற இதழ்களின் வரிசையில் தகவும் வெற்றி நடை போடட்டும். விரைவில் இது அச்சிதழாக மலர என் மனம் நிறை வாழ்த்துகள். ஆசிரியர் குழுவிற்கு என் பாராட்டுகள். நான் மிகவும் மதிக்கும் நேசிக்கும் முன்னோடி திருமிகு பொன்னீலன் அவர்களின் நேர்காணல் பாந்தமானது.

– வாழ்த்துகளுடன்
**ஹரணி,** தஞ்சாவூர்.

➲ வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் மின்னூல்கள் வரிசையில் “தகவு” சிறப்பிடம் பெற்றுக்கொண்டது. கதை கவிதை கட்டுரைகள் என எல்லாவற்றிலும் தனி கவனம் கொண்டுள்ளது சிறப்பு. ஆசிரியர் குழுவிற்கும், இதழ் வடிவமைப்பாளர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். குறிப்பாக ஓவியர்களுக்கு ஒரு ஸ்பெசல் சபாஷ்..!

– **பொள்ளாச்சி அபி,**
பொள்ளாச்சி.

➲ என்னை ஏமாற்றிவிட்டீர்கள். நான் நினைத்ததைவிட மிகவும் அருமையாக மின்னிதழ் அமைந்திருக்கிறது. இதழினை இந்த அளவிற்குக் கொண்டுவந்த குழுமத்திற்கு என் அன்பான வாழ்த்துக்கள். மகிழ்ச்சி.

– **பிரேமபிரபா,** சென்னை.

➲ மிகச் சிறப்பு தோழர்களே.. நம் தமிழ்மொழியின் தொன்மையை உணர்ந்து “தகவு’’ என்று பெயரிட்டுப் பெருமை சேர்த்துள்ளீர்.. தொடர்ந்து பயணிக்கட்டும் “தகவு’’ தமிழ் மின்னிதழ்.. உலகம் வியக்க.. வாழ்த்துக்கள்.

– **ரூபஸ் வி.ஆண்டனி,** கோயம்புத்தூர்.

➲ படைப்பு தகவு வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் சிறப்பாகவே இருக்கிறது.

இதழ் மிகச் சிறப்பாகவே மலர்கிறது. வெளிச்சத்திற்கான சுடர் தெரிகிறது...

வாழ்த்துகள்.

– **ஆரூர் தமிழ்நாடன்**

➲ இதழ் வெகு நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டுள்ளது.. அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி! புதுமைப்பித்தன் சிறுகதையைப் போல நம் முன்னோடி கவிஞர்களின் சிறந்த கவிதைகளையும் பகிரலாம். கடந்த காலத்தின் இலக்கியத் தடங்களைப் புதிய தலைமுறைக்கு நினைவூட்டுவதும் அவசியமான ஒன்று.

– **குறிஞ்சிநாடன் தியாகு,** துபாய்.



• இரா.மணிமேகலா

# என் படைப்பு

சமூகத்தின் உயிரோட்டமாக விளங்கும் மாணவர்கள், தம் உயர்வான எண்ணங்களால், பன்முகச் சிந்தனைகளால், அறிவுத்திறன்களால் அகிலத்தை வழிநடத்தும் கடமைபெற்றவர்கள். அம்மாணவர்களின் சிந்தனைகள் படைப்புகளாய் உருவெடுக்கும்போது அவற்றைச் செதுக்கி வழிநடத்தும் பொறுப்பு நமக்குண்டு. திருச்சிராப்பள்ளி அலங்கவிலாஸ் சிங்காரம் பிள்ளை சிவபாக்கியத்தம்மாள் நினைவு நடுநிலைப்பள்ளி மாணவர்கள் தங்கள் எழுத்துத்திறன்களை வெவ்வேறு தலைப்புகளின் கீழ் இங்கு வெளிப்படுத்துகிறார்கள்.

## யாதும் ஊரே யாவரும் கேளிர்!

**– கு.மோகன்,** எட்டாம் வகுப்பு



முகமறியா மனிதர்களின் உழைப்பை மூலதனமாகக் கொண்டுதான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வுலகம் வாழ எத்தனை உயிர்கள் உயிர்த்தியாகம் செய்திருக்கின்றன? அவர்களுக்கெல்லாம் நாம் கடமைப் பட்டிருக்கிறோம். 'மானுட சமுத்திரம் நானென்று கூவு' என்றார் பாரதிதாசன். பெறுவதும் தருவதும்தான் வாழ்க்கை. அதற்கு ஒவ்வொரு மனிதனும் மானுட சமுத்திரத்தில் ஐக்கியமாவது அவசியம். அப்போதுதான் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது சாத்தியமாகும்.

## கற்க கசடற!

**– நா.ஸ்ரீவித்யலெட்சுமி,** ஏழாம் வகுப்பு



ஒருவனுள் புதைந்துகிடக்கும் அறியாமையைத் தோண்டி எடுப்பதே கல்வி எனப்படும். அறிவுடைய ஒருவனை அரசனும் மதிப்பான் என்கிறார் அதிவீரராமபாண்டியர். மனிதன் தான் கற்ற கல்வியால் அறிவியல் முதலான பல துறைகளிலும் உயர்ந்தோங்கியிருக்கிறான். வாழ்நாள் முழுவதும் ஒருவன் கசடறக் கற்ற வண்ணமாக இருந்தால்தான் சிறப்படைவான். எனவே கசடறக் கற்றல் என்பது மனிதனின் உயர்வுக்கு வழிவகுப்பதாகும்.

## அச்சம் தவிர்!

**– மு.ஷாகின்பானு,** ஏழாம் வகுப்பு

மங்கையராய்ப் பிறப்பதற்கே
மாதவம் புரிய வேண்டுமென்ற
பெரியோரின் வாக்கினைச்
செவிமடுத்திடா கண்ணே!
முயற்சி என்னும் வழிசென்று
வெற்றி என்னும் கனியைப்
பறித்து உண்!
சிரிப்பு என்னும் மத்தாப்பினைக் கொண்டு
உன் சூழலை ஒளிரச் செய்!
அச்சம் என்னும் அரக்கனை
முயன்றவரை நீ விரட்டு!
துணிந்து பல கலைகளைக் கற்று
காலனை விரட்டி ஓட்டு!



## எண்ணுவது உயர்வு!

– **ஜோ.அனிஷா ஆக்னேஷ்,** ஏழாம் வகுப்பு

புல்லாய்ப் பிறந்தோம் நாம் என்று
புலம்ப வேண்டாம்
நெல்கூட புல்லின் இனத்தைச்
சேர்ந்ததுதான்..
அது பூமியின் பசியைப் போக்கவில்லை?
ஒடுங்கி வாழ்வது சரிதானா?
சுட்டுவிரல் நீ சுருங்குவதா?
சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா?
எண்ணத்தில் உயர்வு வேண்டும்
முன்னேறு..
முயற்சிசெய்து வாழ்ந்துவிடு!



## ஒற்றுமையே வலிமை!

– **ம.திவ்யதர்ஷினி,** ஏழாம் வகுப்பு

பண்டைக்கால மக்களிடம் ஒற்றுமை உணர்ச்சி ஓங்கி வளர்ந்திருந்தது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே', 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை' என்னும் பொன்மொழிகளை உணர்ந்து மக்கள் கூட்டம்கூட்டமாய்ச் சேர்ந்து வாழ்ந்துவந்தார்கள். அதனால் அவர்களிடம் பொதுமைப்பண்பு பொங்கி வழிந்துவந்தது. நாளடைவில் அவர்களிடம் பற்பல சாதி, சமய, இன வேறுபாடுகள் உண்டாயின. பிரிவுகளும் பேதைமைத்தன்மைகளும் மிகுதியாகத் தோன்றின. அதனால் அவர்களுக்குள் பற்பல பூசல்களும் இன்னல்களும் உண்டாயின. 'எல்லோரும் ஓரினம்



எல்லோரும் ஓர் நிறை' என்ற உயரிய கருத்தை ஒவ்வொருவரும் உணரத் தொடங்கினர். இன்றைய சூழ்நிலையில் ஓர் இனமோ நாடோ தனித்து வாழ முடியாது. ஆதலின் யாவரும் ஒன்றுபட்ட உள்ளத்தோடு ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதனையே தத்தம் கடமையாகக் கொள்ளவேண்டும்.

## அன்பே கடவுள்!

– **ச.க.முத்தரணி,** எட்டாம் வகுப்பு

சக மனிதனோடு
அன்பு செலுத்தத் தெரியாதவன்
ஒருபொழுதும் கடவுளை
உணர்வது இல்லை
காரணம் கடவுளின்
நிலையான வடிவம்
அன்புதான்!



## அறிவியல் முன்னேற்றம்!

– **பா.பவானி,** எட்டாம் வகுப்பு

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு 'நவீன கோயில்கள்' என அழைக்கப்படும் ஆராய்ச்சிக் கூடங்கள், தொழில்நுட்ப நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் மிகவும் அவசியம் என நம் நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால்நேரு கூறினார். எனவே அதற்கான பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளன. அத்திட்டங்களைச் செயல்படுத்த வெவ்வேறு துறைகள் பணியாற்றி வருகின்றன. நம் நாடு அறிவியலில் முன்னேற்றம் கண்டு வல்லரசாக மாறும் என்பது உறுதி. ■



நூல் விமர்சனம்

• இரா.பூபாலன்

# குரலற்றவனின் எதிர்க்குரல்

– கவிஞர் **சோலை மாயவனின்**
'விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குருதி' கவிதைத் தொகுப்பை முன்வைத்து

ஒரு கவிதையை நாம் முழுமையாக உணர்ந்துகொள்வது என்பது ஒரு கவிஞனை அவனது உணர்வுகளோடு முழுமையாக உள்வாங்கிக் கொள்வது என்பதையும் சேர்த்ததுதான். ஒரு கவிதையை நாம் புரிந்துகொள்வது என்பது வாசக மனநிலையை ஒத்தது. வாசிப்பின் சூழல், காலம், மனோநிலை என அத்தனையையும் உள்ளடக்கிய ஒன்றுதான் ஒரு நவீனக் கவிதையை நாம் புரிந்துகொள்ளுதல் என்பது. ஒரு கவிதை, படைப்பாளனால் என்ன தொனியில் எழுதப்பட்டதோ அதே தொனியில் வாசகன் அதை உள்வாங்கிக் கொள்ளும் இடம் படைப்பாளனின் வெற்றி உறுதி செய்யப்படும் இடம். போலவே, படைப்பாளன் சொல்லாத அல்லது பூடகமாக வைத்திருக்கும் பொருள் அனைத்தையும் சேர்த்து வாசகன் உள்வாங்கிக் கொள்ளும் இடம் என்பது அந்தப் படைப்பின் வெற்றியை உறுதி செய்யும் இடம். ஒரு கவிஞன் தான் சொல்ல நினைத்ததை வாசகனுக்குக் கடத்துவதும், சொல்லாமல் விட்டு வைத்திருக்கும் செய்தியையும் வாசகனுக்குக் கடத்துவதும் கவிதையில் சாத்தியம்தான்.



கவிஞர் சோலை மாயவன்







ஒரு கவிதைத் தொகுப்பு அதனளவில் மனநிறைவைத் தர, குறைந்தபட்சம் ஐந்து கவிதைகளாவது நினைவில் நிற்கும் கவிதைகளாக இருந்தால் போதுமானது. ஒரே ஒரு கவிதையாவது முத்திரைக் கவிதையாகத் தொகுப்பின் அடர்த்தியைச் சொல்லும்படி அமைவது இன்னும் சிறப்பு.

கவிஞர் சோலை மாயவனின் விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குருதி கவிதைத் தொகுப்பின் கவிதைகள் நவீன மொழிதலில் சொல்லப்பட்ட நூற்றாண்டு காலப் பழைய வலிகள். அவற்றை இந்த நூற்றாண்டிலும், அதிலும் கவிதையில் பேச வேண்டி வைத்திருக்கிற நம் காலத்தைத்தான் சபிக்க வேண்டியிருக்கிறது.

**தேயிலை நிழலில்**
**உறங்குகிறது**
**வனமிழந்த சிறுத்தை**

இந்த ஒரு கவிதை தரும் அழுத்தமும் இந்த ஒரு காட்சி விரியச் செய்கிற பெரும் வரலாற்றுப் பிழையின் கொடூரச் சித்திரமும்தான் ஒரு கவிதையில் ஆவணப்படுத்தப்பட வேண்டிய காலச் சித்திரம் என உணரச்செய்கிறது. வனத்தை அழித்துத் தேயிலைச் செடிகளை நட்டு, பன்னாட்டு வணிகத்தைப் பெருக்கச் செய்ய நம் வயிறு கிழித்து இடம் கொடுத்தபின், வனத்தின் உயிர்கள் போக்கிடமின்றிச் சமநிலத்துக்கு வருவதும் அவற்றை நாம் விரட்டுவதுமான விலங்குகளுக்கும் மனிதனுக்குமான போரை வேதனையுடன் நினைவு கூறச் செய்கிறது இந்தக் கவிதை.

தேயிலை குத்துச் செடிக்கடியில் படுத்துக் கிடக்கும் சிறுத்தை ஒரு குறியீடுதான். அது ஒரு மிகப்பெரிய வன உயிர்க் கூட்டத்தை, செழித்த பெருங்காட்டைத் தனது உருவத்துக்குள் மறைத்து வைத்திருக்கிறது. தேநீருக்கு நாம் விலை போன கதையையும் நமது குறிஞ்சிக் காடுகளை அழித்துத் தேயிலைச் செடிகள் வேரூன்றிய கதையையும் நாம் அறிந்திருந்தால் இந்தக் கவிதை நம் நெஞ்சத்தைத் தைக்கும்.

**எம் நூற்றாண்டின்**
**தாகம் தீர்க்க மறுத்த**
**ஆதிக்க சாதியின்**
**சாபத்தின் அடையாளமாக**

எம் குழந்தையின்
பீ துடைத்த துணியைத்
தூக்கி வீசும்
குப்பைத் தொட்டியாக இருக்கிறது

ஊரின் நடுவே
பொதுக்கிணறு

பொதுக்கிணறு தூர்ந்து போனதன் காரணம் கோடையும், நிலத்தடி நீர் வற்றியதும் என நாம் நினைத்துக் கொண்டிருக்க, அதன் பின்னாலும் இப்படி ஒரு சாபம் இருக்கிறது எனச் சொல்லும் இந்தக் கவிதை நம் காலத்தின் சாட்சிதானே ? குடிநீர் மறுத்த ஆதிக்க சாதிக்கான சாபத்தில்தான் நீரின்றி வறண்டு தூர்ந்து போயிருக்கக் கூடும் பொதுக்கிணறு என்ற உண்மை நம்மை இன்னும் பல காலத்துக்கு முகத்திலறைந்து கொண்டே இருக்கட்டும்.

கால்கள் இடறி
தலைகுப்புற விழுந்து கிடந்தேன்
கூடவே
சிதறியது கழனி வேலைக்குப் போன
அம்மாவுக்குக் கொண்டு சென்ற
கேழ்வரகுக் கூழ்
மீதமான கூழில் ஆற்று நீரை நிரப்பி
அம்மாவின் பசி போக்கினேன்
அம்மா இருக்கிறாள்
நான் இருக்கிறேன்
காணாமல் போயிருந்தது
பசி தீர்த்த
ஆறு

இந்தக் கவிதை நம் மனக்கண் முன்னால் கொண்டு வரும் சித்திரம் ஒரு விவசாய வாழ்வு. அதை நீங்கி நாம் இப்போது நகரத்துக்கு நகர்ந்துவிட்டோம். மேலும் இரண்டாவது தலைமுறைக்கே ஆறு என்ற ஒன்று இல்லை எனக் கவிஞர் பதிவு செய்கிறார். என்றால், அடுத்த தலைமுறைக்கு நீராவது இருக்குமா என்ற அச்சத்தைக் கிளப்புகிறது இந்தக் கவிதை. தமது படைப்புகளில் தமது நிலம், தமது வாழ்க்கை முறை, தமது மண் சார்ந்த காட்சிகளைப் பதிவு செய்யும் எழுத்தாளர்கள் மிகவும் போற்றுதலுக் குரியவர்கள். அவர்கள்தாம் நமது வரலாற்றை இலக்கியங்களின்வழி ஆவணப் படுத்துகிறார்கள். அப்படியான கவிதைகளைக் கவிஞர் நிறைய தந்திருக்கிறார் இந்தத் தொகுப்பின்வழி.

நீர்நிலைகள் வற்றிவிட்டதன் கொடுமைகள், அதிகாரத்தின் ஒடுக்கு முறைகள், தீண்டாமையின் கொடுஞ் செயல்கள் எனச் சமூகத்துக்கான புறக் கவிதைகளோடு சில அகக் கவிதைகளையும் சேர்த்துத் தொகுப்பாக்கியிருக்கிறார்.

தாய்மையடைந்திருக்கும் ஒரு பூனையின் வருகைக்காக சன்னல்களைத் திறந்து வைத்து, தட்டு நிறைய பாலுடன் காத்திருக்கும் மனிதம்தான் இந்தக் கவிதைகளின் அடிநாதம். மனிதமும், சாதீய ஒதுக்குதலுக்கெதிரான உரத்த குரலும், இயற்கை, உயிர்களின் மீதான வன்முறைகளைச் சாடும் குரலும் இந்தக் கவிதைகளில் ஓங்கி ஒலிக்கின்றன.

இரண்டாவது தொகுப்பிலேயே இவ்வளவு அடர்த்தியான கவிதைகளோடும் இவ்வளவு செங்கோபத்துடனும் வந்திருக்கும் கவிஞர் சோலைமாயவனை வாழ்த்தி வரவேற்போம். நல்ல கவிதைகள் காலத்தின் அத்தியாவசியமாக இருக்கின்றன. நல்ல படைப்பாளர்கள் காலத்தின் பெரும் தேவையாயிருக்கின்றனர்.

**நூல் : விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குருதி**

**ஆசிரியர் : கவிஞர் சோலைமாயவன் - 9597014283**

**வெளியீடு : பொள்ளாச்சி இலக்கிய வட்டம்**

**விலை : ரூ.60**

• அருணாதேவி

# தமிழ் மொழி, இலக்கியக் குறிப்புகள் 2018 மே வரை



ஞாநி



தமிழறிஞர் ம.லெ.தங்கப்பா



எழுத்தாளர் பாலகுமாரன்

- உலகத் தமிழ் இணைய மாநாடு 2018, ஜூலை 6 முதல் 8ஆம் தேதிவரை கோவை வேளாண் பல்கலையில் நடைபெறவுள்ளது. இணையப் பட்டியலில் ஆங்கிலத்துக்கு அடுத்த இடத்தில் தமிழ் உள்ளது.
- திருவள்ளுவர் மாவட்டம் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி அரசுக் கலைக்கல்லூரி வளாகத்தில் ஏழாயிரம் ஆண்டுகள் பழமையான தொல்தமிழரின் ஈமக்காடு 2018 ஜனவரி மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- மூத்த பத்திரிக்கையாளரும் நாடக ஆசிரியரும் அரசியல் விமர்சகருமான ஞாநி தனது 64வது வயதில் 2018 ஜனவரி 15அன்று காலமானார்.
- கனடா இலக்கியத் தோட்டம் சார்பில் வழங்கப்படும் 2017ஆம் ஆண்டுக்கான இயல் விருது எழுத்தாளர் வண்ணதாசனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஈரோடு மாவட்டம் தாளவாடி தாலுக்கா மரூர் கிராமம் அருகே தொல்லியல் மேட்டில் 2018 பிப்ரவரி மாதத்தில் கண்டறியப்பட்ட சுமார் நான்கு அடி உயரமுள்ள கல் செக்கு ஒன்றின் கீழ்ப்பகுதியில் தமிழ் பிராமி போன்ற குறியீடுகள் காணப்பட்டன. இது கிட்டத்தட்ட 1700 ஆண்டுகள் பழமையானது.
- தமிழ்நாடு டிஜிட்டல் நூலக இணையதளம் (www.tndigitallibrary.ac.in) 2018 ஏப்ரல் 05 அன்று தொடங்கப்பட்டுள்ளது.
- கீழடி அகழ்வாராய்ச்சியில் 6 உறைகளைக் கொண்ட 93 செ.மீ. விட்டம் கொண்ட ‘ரிங்’ வடிவக் கிணறு 2018 மே மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- எழுத்தாளர் பாலகுமாரன் தனது 71வது வயதில் 2018 மே 15 அன்று காலமானார்.
- தஞ்சாவூர் பெரிய கோவிலில் 60 ஆண்டுகளுக்கு முன்பு மாயமான ராஜராஜசோழன், உலோகமாதேவி சிலைகள், குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் உள்ள சாராபாய் பவுண்டேஷன்காலிகோ அருங்காட்சியகத்திலிருந்து மீட்டு 2018 மே 31 அன்று தமிழகம் கொண்டு வரப்பட்டுள்ளது.
- தமிழறிஞர் ம.லெ.தங்கப்பா 2018 மே 31 அன்று காலமானார். ■

• கவி: தமிழ் மணவாளன்
சித்திரம்: கொ.வடிவேல்

# கேள்விகள் பற்றிய நினைவுக் குறிப்புகள்



வறண்ட நாவின் சுவை மொட்டினை
மலர்த்திடும் தேன் சுவையின் சொற்களல்ல
நடு இரவின் அடர் இருளான கேள்விகள்
கேட்பவர்களுக்கு சுவாரஸ்ய மாயிருப்பினும்
நெடு வெளிப்பயணத்தின்
நேரெதிர் பள்ளத்தாக்கினை நொடியில்
அறியும் கணமென
எதிர் கொள்பவர்களை நிலைகுலையச் செய்கிறது
கேள்விக்குப் பதிலாய் எதிர்க் கேள்விகள்
கேட்கப்படுவது ஒரு உத்தியெனினும்
பதில் கேள்விகள்
ஒருபோதும் பதில்களாகாது
கேள்வியின் நியாயம் வெளிப்படையாயினும்
என்னிடம் ஏன் கேட்கிறாயென்பதும்
என்னைக் கேட்க நீயாரென்பதும்
பிரதிக்கு வெளியிருந்து செய்யும் விவாதங்கள்
அப்போது வழிதவறிப்போன குழந்தையின்
விசும்பலோடு
கேவியபடி நிற்கின்றன கேள்விகள்
சாதுர்யமான பதில்வாசிகள்
பல கேள்விகளுக்குப் பின்னாலும்
வனாந்தரத்தில் பூத்த ஒற்றை மலரென
ஒரு சொல்லில் விடையளிக்கக் கற்றிருக்கிறார்கள்
கூட்ட நெரிசலை சமாளிக்கப்
பேருந்து நிறுத்தம் தவிர்த்து மெல்ல உருட்டிப் போகும்
நகரப் பேருந்து ஓட்டுனரைப் போல
பதிலுரைக்காமலே
உரையாடலைத் தொடரக் கற்றவென் தோழனை
அடுத்தமுறை உங்களுக்கு
அறிமுகப்படுத்துகிறேன்
பல கேள்விகள்
பதிலைப் பெறுவதை விடவும்
பகையையே பெறுகின்றன
என்ற போதிலும்
கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன
கேட்டு விட்டோமெனும் நிம்மதிக்காக. ■

பிரேமபிரபா
ஓவியங்கள் : கொ.வடிவேல்

# சீன நெடுஞ்சுவர்

சீனாவின் தென்மாவட்டத்திலிருந்தது ஒரு அழகிய மலைக்கிராமம். அங்கிருக்கும் மொத்தக் குடியிருப்புக்களையும் விரல்விட்டு எண்ணிவிடலாம். காலக் கதிரவனின் கன்னி ஒளிக்கிரணங்கள் பட்டு, பட்டொளியுடன் பளபளத்தன தளிர் இலைகள். இளவேனிற்காலம் என்பதால் மொட்டவிழ்ந்து சிரிக்கும் மலர்களுக்கு அங்கு பஞ்சமே இல்லை. வீட்டு முகப்புகளை, சாலை ஓரங்களை அலங்கரிக்கும் மலர்களின் வரவேற்புரையை ஒரு கவிதையாகவே படைத்துவிடலாம். அன்று பிறந்த குழந்தையின் இதமான சூட்டுடன் காற்றின் விரலசைப்பு அந்தக் கிராமத்தை ஒரு சொர்க்க பூமியாகவே மாற்றி இருந்தது.

பெண்கள் காலை நேரப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்க, ஆண்கள் விடியலிற்கு முன்பே தத்தம் வயல்வெளிகட்குப் புறப்பட்டிருந்தார்கள். அப்படி சென்றவர்கள் எல்லோரும் வயதில் முதிர்ந்தவர்களாகவே இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவை ஆண்ட மன்னன் குயின் ஷிகுவாங்கின் ஆணைப்படி கிராமங்களில் வாழும் அனைத்து இளைஞர்களும் சீனச் சுவர் கட்டுமானப் பணிக்காகப் பலவந்தமாக அழைத்து வரப்பட்டார்கள். பணிக்கு வர மறுத்த இளைஞர்கள் கடுமையாகத் தண்டிக்கப்



பட்டார்கள். அரசாங்க ஆணையென்பதால் குறைந்தபட்சக் கூலியுடனோ அல்லது கூலியில்லாமலோ, பல இளைஞர்கள் கட்டுமானப் பணிகளில் தங்களின் விருப்பத்திற்கு எதிராக ஈடுபடவேண்டி இருந்தது. அவர்களின் மௌனமான மனத் தவிப்பு எந்த நேரத்திலும் புரட்சியாக வெடிக்கும் என்று அஞ்சிய மன்னன், தன் முழு அதிகாரத்தால் இளைஞர்களை அடக்கி வைத்திருந்தான்.

மெங்ஜியாங்னு தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்துகொண்டு தோட்டத்தில் இருக்கும் மலர்களைக் கைகளால் வருடி அவை தலையாட்டுவதைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தாள். அப்போது அவளின் முழுகவனத்தையும் ஈர்த்தது, மலருக்கு மலர் தாவிப் பறந்த ஒரு அழகிய பட்டாம்பூச்சி. எப்படியும் அதைப் பிடித்திட வேண்டும் என்று எண்ணியவள் தன் கையில் இருந்த கலை அம்சத்துடன் வடிவமைக்கப்பட்ட சந்தனக் கைவிசிறியை மேலும் கீழும் அசைத்தபடி பட்டாம்பூச்சியை நோக்கி ஓடினாள். அருகில் இருக்கும் குளக்கரைப் படிக்கட்டில் கால் இடற, தவறி தண்ணீரில் விழுந்துவிட்டது அவளின் கைவிசிறி. தன் நெருங்கிய தோழி லீச்சே அவளின் பிறந்த நாளிற்குப் பரிசாகக் கொடுத்த கைவிசிறியை இழக்க அவள் துளியும் தயாராக இல்லை. அதை எப்படியும் நீரிலிருந்து மீட்டெடுக்க முற்பட்டாள். தயங்கியபடி சுற்றும் முற்றும் பார்த்தவள் யாரும் தன்னைக் கவனிக்கவில்லையென்று ஊர்ஜிதம் செய்த பிறகு தன் அழகிய கணுக்கால் தெரிய ஆடைகளை மேலே உயர்த்திக் குளத்தினுள் இறங்கினாள்.

“இளவரசியே ஜாக்கிரதை”, நடுக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிப் பார்த்தாள். அருகில் இருக்கும் புதர் அசைவதைக் கண்டு மேலும் அச்சமுற்று “யாரது?” என்று மிரண்டபடி குரல் எழுப்பினாள். புதரில் ஒளிந்திருந்த ஒரு அழகான கட்டிளம் காளை இமை கூடும் நேரத்திற்குள் அவளின் நடுங்கும் தேகத்தை இடது கையால் வளைத்துப் பிடித்து, வலது கையால் வாயை மூடினான். “அஞ்சாதே.. என் அழகிய இளவரசியே. என்னால் உனக்கு எந்தவித ஆபத்தும் வராது. அரசாங்கத்தால் தேடப்படும் இளைஞர்களுள் நானும் ஒருவன். அடைக்கலம் கொடுப்பாயென்று வந்திருக்கிறேன்'', என்று மெல்ல அவளின் வாயிலிருந்து கையை எடுத்தான்.

துடிப்பான காந்தக் கண்கள். படர்ந்த தோள்கள். அடர்த்தியான கேசம். நெற்றியில் துளிர்த்த முத்துமுத்தான வியர்வைத் துளிகளின் பளபளப்பு. இவ்வளவு நெருக்கமாக இதுநாள் வரை எந்த ஒரு ஆடவனின் அரவணைப்பிலும் மெங்ஜியாங்னு இருந்ததே இல்லை. அவர்களின் நெருக்கத்தின் இடைவெளிகளை நிரப்பிக் கொண்டிருந்தது அந்த இளைஞனின் இதமான சூட்டுடன் கூடிய விரைவான சுவாசமும், அவளின் தொடர் பார்வைகளும்.

“ஒரு பெண்ணிடம் இப்படியா முரட்டுத்தனமாக நடந்து கொள்வாய், இளைஞனே?”, என்று செல்லமாகக் கோபித்தபடி அவன் பிடியில் இருந்து அரை மனதுடன் வெளியேற முயற்சித்தாள். பிடியினைத் தளர்த்தியவன், “என்னால் உனக்கு எந்தவித ஆபத்தும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். என்னை நீ முழுமனதுடன் நம்பலாம் இளவரசியே'', என்று அவள் இமைகளில் படிந்திருந்த காய்ந்த சிறு மஞ்சள் மலரை அக்கறையுடன் தட்டிவிட்டுச் சிரித்தான்.

அவன் குரலின் கம்பீரம் ஒரு நொடி அவளைத் தன் வயப்படுத்த, எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், “சரி இளைஞனே.. உனக்கு அடைக்கலம் தருகிறேன். ஆனால் வயலிற்குச் சென்ற என் தந்தை திரும்பி வரும்வரைதான். பிறகு அவரின் ஒப்புதலையும் நீ வாங்க வேண்டியிருக்கும்”, என்றாள் வெகு இயல்பாக மனம் விட்டுச் சிரித்த இளைஞனை மேலும் ரசித்தபடி.

“நீ மிகவும் களைப்பாய் இருக்கிறாய். சூடான மக்காச்சோளக் கஞ்சியும், வேக வைத்த இனிப்புக் கிழங்கும் சமைத்து வைத்திருக்கிறேன். முதலில் பசியாறிவிட்டு ஓய்வெடு. பிறகு பேசிக் கொள்ளலாம் உன் பூர்வீகத்தைப் பற்றி”, என்றாள். எதையும் பொருட்படுத்தாமல் மிகவும் சகஜமாக உணவருந்துவதைப் பார்த்தவள், “இதுவரை நீ உன்

பெயரைக்கூட என்னிடம் கூறவில்லை. என் பெயர் மெங்ஜியாங்னு" என்று மேலும் இரண்டுத் துண்டு கிழங்குகளை அவன் தட்டத்தில் பரிமாறினாள்.

"இளவரசியே, என் பெயர் பான் எக்ஸிலியாங். போராளி என்று கூட வைத்துக் கொள்ளலாம். உனக்கு ஒன்று தெரியுமா? மனித உழைப்புதான் விலை மதிப்பற்றது. அதற்கு இணை இவ்வுலகில் எதுவும் கிடையாது. உழைக்கும் வர்க்கத்தில்தான் போட்டியோ, பொறாமையோ கிடையாது. உழைப்பின் வெகுமதி பெற்றுக்கொள்ளும் கூலியில் மட்டும்தான் என்று எண்ணிவிடாதே. அதன் கௌரவம் காப்பாற்றப்படாமல் எத்தனை சீன இளைஞர்கள் ஒரு வேளை உணவுடன் சுவர் கட்டுமானப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா உனக்கு? எத்தனை பேர், வீட்டின் நினைவுகளை நெஞ்சில் சுமந்துகொண்டு காய்த்துப்போன தோள்களில் கற்களையும் சுமக்கிறார்கள் தெரியுமா? புரட்சி ஒன்றினால்தான் நமக்குத் தீர்வு கிடைக்கும். உங்கள் கிராமத்தில் அந்த அளவிற்கு அரசாங்கக் கெடுபிடிகள் இல்லை என்று அறிந்ததால்தான் அடைக்கலம் தேடி இங்கு நான் வந்தேன். முடிந்தால் நீயும் எனக்கு உதவலாம், என்ன சொல்கிறாய்?", என்று ஒரே மூச்சில் கூறி முடிக்க, "இளைஞனே.. நீ மிகவும் புத்திசாலியாய் இருக்கிறாய். உன் பேச்சில்தான் எத்தனை ஆவேசம். எத்தனை உத்வேகம். புரட்சி பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. உன்னிடம் கற்றுக்கொள்வது பற்றி எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. எதற்கும் அப்பாவிடம் இது பற்றிப் பேசு. ஒருவேளை அவரின் அறிவுரை உனக்கு உதவலாம்", என்றாள்.

மாலையில் களைப்புடன் திரும்பிய அவளின் தந்தையிடம் பக்குவமாக நடந்த விபரங்களைக் கூறி, இளைஞனிருக்கும் அறைக்குக் கூட்டிச் சென்றாள். அயர்ந்து உறங்கும் அந்த இளைஞனைக் கண்டவுடன் அந்த முதியவர், "மகளே, அவனுக்கு ஏதாவது உணவு உண்ணக் கொடுத்தாயா? காலையில் நாம் பேசிக்கொள்ளலாம்", என்றவாறு தன் மகளிற்கு மிகவும் பிடித்த பால் பற்றிய பிஞ்சு மக்காச்சோளக் கதிரினை மடியில் இருந்து எடுத்துக் கொடுத்தார்.

அன்றைய விடியல் ஏனோ அவளுக்கு மிகவும் கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுத்தது. மூங்கில் கதவினைத் திறந்து அறையிலிருந்து வெளியே வந்த இளைஞன் இரண்டு கைகளையும் உயர்த்திச் சோம்பல் முறித்தபடி அவளையே பார்த்தான். "என்ன இளவரசியே, அதிகம் உன்னை நேற்று கலவரப்படுத்தி விட்டேனா? வேண்டுமென்றால் இன்றே நான் வெளியேறி விடுகிறேன்'', என்றவாறு அவளருகில் வந்து நின்றான். என் இளவரசியே என்று அவன் அடிக்கடி கூறினாலும் அதை மிகவும் ஈர்ப்புடன் மீண்டும் மீண்டும் தனக்குத்தானே மனதிற்குள் உச்சரித்துக் கொண்டாள்.

அன்று முழுவதும் இளைஞன் அவளுக்கு உதவியாக எல்லா வேலைகளும் செய்தான். காய்ந்த மரத் தண்டுகளைப் பிளந்து சிறு துண்டங்களாக்கி அடுக்கி வைத்தான். கூரையின் பின் பகுதியில் இருக்கும் ஓட்டையைச் செப்பனிட்டு மேவினான். தோட்டத்திலிருக்கும் அனைத்துப் பூச்செடிகளுக்கும் மண் அணைத்துக் கொடுத்தான். மரத்தினாலான பெரிய தொட்டியில் தண்ணீர் நிரப்பி வைத்தான். களைப்புடன் திண்ணையில் வந்தமர்ந்த இளைஞனைக் கண்டவள், "என்ன இளைஞனே.. இப்போதாவது உன் பூர்வீகம் பற்றி என்னிடம் சொல்லக் கூடாதா?'', என்று அவனருகில் நெருக்கமாக வந்தமர்ந்தாள்.

"என் பெற்றோர்கள் நான் சிறுவனாய் இருக்கும்போதே காலமாகி விட்டார்கள். என் வளர்ப்புத் தாயின் பராமரிப்பில்தான் இருந்தேன். இலக்கியம், சரித்திரம் மீது அதிக நாட்டமுண்டு. மற்றபடி சராசரி சீன இளைஞன் நான். கனவுகள் அவ்வளவாகக் காண்பதில்லை. ஆனால் என்றும் உன்னைப் போன்ற அழகான கன்னியரின் பேச்சிற்கு உடன் மயங்கி விடுவேன்", என்று அவளைப் பார்த்துக் கண்ணடித்துச் சிரித்தான்.

இளைஞனின் நடவடிக்கையைச் சில நாட்களாகக் கவனித்த அவளின் தந்தை ஒருநாள் தன் மகளிடம், "மகளே மெங்ஜியாங்னு, நான் உன்னை மிகவும் செல்லமாக வளர்த்துவிட்டேன்.

நானோ முதுமையின் கடைசி நாட்களில் வாழ்கிறேன். உனக்கு ஒரு வாழ்க்கை அமைத்துக் கொடுப்பது என் கடமையில்லையா? நம் வீட்டில் அடைக்கலம் தேடி வந்திருக்கிறானே.. அந்த இளைஞன் மிகவும் நல்லவனாகத்தான் தெரிகிறான். உனக்கு அவனைப் பிடித்திருக்கிறதா?", என்று கேட்க அவளோ தன் கையில் இருக்கும் கற்றை மஞ்சள் பூக்களை முகர்ந்து முத்தமிட்டு வெட்கத்துடன் தன் அறையினில் ஓடி ஒளிந்து கொண்டாள்.

அவர்களின் திருமணமும் இனிதே நடந்தேறியது. தன் கணவனின் கைகளைப் பற்றி வயல்வரப்புகளில் நடந்தாள். எதிர்படும் தன் தோழிகளிடம் தன் கணவனைப் பற்றிக் கூடுதலாகவே அறிமுகப்படுத்தினாள். வாழ்க்கையின் சுவாரசியம் தென்றலின் தீண்டலுடனும், மலர்களின் வாசத்துடனும் அவர்களைத் தொடர்ந்தது. அவளின் அன்பான பேச்சில் தனை மறந்த பான் எக்ஸிலியாங் தன் வருங்காலத் திட்டங்களை அவளிடம் பட்டியலிட்டான். எல்லாத் திட்டங்களும் அவளை மையப்படுத்தியே இருந்தது அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

திருமணம் முடிந்த மூன்றே நாளில் எப்படியோ அவன் இருப்பிடத்தைக் கண்டறிந்த அரசாங்க ஒற்றர்கள் அவனைக் கைது செய்து கட்டுமானப் பணிக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். கனவென வந்த வானவில் வாழ்க்கையை நினைத்து மெங்ஜியாங்னு நடைபிணமானாள். காலங்கள் கடந்து பனிக்காலமும் வந்தது. பனிக்கால உடையை உறவினர் நண்பர்களுக்கிடையே பரிமாறிக்கொள்ளும் வழக்கம் அந்நாளில் இருந்தது. ஒவ்வொரு இழையையும் தன் அன்பான கணவனை நினைத்தபடி இழைத்து மெங்ஜியாங்னு அழகான உடை ஒன்றைத் தன் கணவனுக்காகப் பின்னினாள். தந்தையிடம் மன்றாடி அனுமதி பெற்றுக் கணவனைக் கண்டு வர சீனச் சுவருக்கு நடை பயணமானாள்.

போகும் வழியெங்கும் கடும் பனி வீசியது. கற்களும் முட்களும் பாதைகளில்.. பிரிவாற்றாமையின் சோகம் மனம் முழுவதும். பல மாதங்கள் நடை பயணத்திற்குப் பிறகு சுவர் கட்டுமானப் பணியிடத்திற்கு வந்து சேர்ந்தாள். நீண்ட பயணத்தால் அவள் உடல் பலவீனமானாலும் மனதளவில் தன் கணவனைக் காண்போமென்ற முழு நம்பிக்கையில் இருந்தாள். வருவோர் போவோரிடம் தன் கணவனின் பெயரைக் கூறி விசாரித்தாள்.

அவளின் நிலையைக் கண்டு வருத்தப்பட்ட பலர், "சாத்தியப்படுமா என்று தெரியாது மகளே. உன் முயற்சியைப் பலவீனப்படுத்தும் அளவிற்கு உனக்கு ஏதாவது நடந்தால் அதை எப்படி எதிர்கொள்வாய் என்று எங்களுக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. கடவுள் உன் பக்கம் நிச்சயம் இருக்கட்டும்", என்று தைரியம் கூறி வழி அனுப்பினார்கள்.

தன் கணவனைக் கிழக்குப் பகுதியில் பார்த்ததாக ஒருவன் கூறினான். அங்கு சென்று விசாரித்ததில் பால் எக்ஸிலியாங் அதீத களைப்பினால் இறந்து விட்டதாகவும், கலவைப் பொருட்களுடன் சுவற்றிலேயே அவனைப் புதைத்து விட்டார்கள் என்றும் கூறினான். நெஞ்சடைத்து அழத் தொடங்கியவள் அழுதுகொண்டே இருந்தாள். அவளின் சோகம் சீனச் சுவர்களில் பட்டு எதிரொலித்தது. தன் இயலாமையை எண்ணி அரற்றினாள். ஆர்ப்பரித்தாள். தன் பலம் உள்ளமட்டும் உயர்ந்த குரலில் கூக்குரலிட்டாள்.

அவளின் சோகம் காணத் தாளாது சுமார் இருநூற்றைம்பது மைல் நீளத்திற்குச் சுவர் சரிந்து விழுந்தது. தன் கணவனின் உடலைக் காணத் தவிப்புடன் அலைந்து திரிந்தாள். எலும்புக் குவியலில் தன் கணவனின் சடலத்தை அடையாளம் காண முடியாது தவித்தாள். தன் விரலைக் கீறி ரத்தத்தை அங்கிருந்த எலும்புக் கூடுகளில் உதிர்த்தாள். ஒரு எலும்புக் கூடு அவளின் ரத்தத்தை உறையவைக்க, தன் கணவனின் உடல் கண்ட மகிழ்ச்சியில் கூக்குரலிட்டாள்.

சுவர் இடிந்ததைக் கேட்ட அரசர் குயின் ஷிகுவாங் கடும் சினம் கொண்டு அந்த



இடத்திற்கு விரைந்து வந்தார். அபலையின் பேரழகைக் கண்ட நொடியில் தன்னை முற்றிலும் மறந்தான் குயின் ஷிகுவாங். தன்னை மணந்து கொள்ள வேண்டி அவளிடம் கெஞ்சினான். மெங்ஜியாங்னுவும் மூன்று நிபந்தனைகளின் பேரில் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்தாள். ஒன்று பான் எக்ஸிலியாங்கின் உடலைச் சிதைவுகளில் இருந்து மீட்டுக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக, தன் கணவனிற்கு அரசாங்க மரியாதையுடன் இறுதி ஊர்வலம் நடத்த வேண்டும். மூன்றாவதாக, இறுதி ஊர்வலத்தில் மன்னர் கண்டிப்பாகக் கருப்பு அங்கியணிந்து உடன் வரவேண்டும்.

அனைத்திற்கும் ஒப்புதல் அளித்த அரசன், மிகவும் விமரிசையாகப் பான் எக்ஸிலியாங்கின் இறுதி ஊர்வலத்திற்கு ஏற்பாடுகளைச் செய்தான். எல்லாம் முடிந்து அரண்மனைக்குத் திரும்பும் சமயம் திடீரென்று எழும்பிய புழுதிக் காற்று அனைவரது பார்வைகளையும் மறைத்தது. துக்கம் தாளாமல் கண்மூடித்தனமாகக் கடலை நோக்கி வெறித்தனமாக அழுதபடி ஓடிய மெங்ஜியாங்னு அதில் மூழ்கி உயிரை விட்டுத் தன் அன்புக் கணவனுடன் ஒன்றெனக் கலந்தாள்.

**– உலக அதிசயக் கதைகள் தொடரும்** ■

• ஸ்டெல்லா தமிழரசி

# மேகா பதிப்பக நூல் வெளியீட்டு விழா







மதுரையைச் சேர்ந்த அருணாசலம் தனது தந்தையின் நினைவாக 2016இல் தொடங்கியதுதான் மேகா பதிப்பகம். மேகா பதிப்பகத்தின் முதல் வெளியீடாகக் கல்கி தலைமை ஆசிரியர் அமிர்தம்சூர்யாவின் 'ஓவிய ஃப்ரேம்களிலிருந்து வெளியேறும் பறவைகள்' நூலும் திரு.நேசமித்ரன் அவர்களின் 'ஜெல்லிமீன்கள் கரையொதுங்கும் கடல்' நூலும் 2016இல் வெளியிடப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து 2017 டிசம்பர் 17ஆம் தேதி எழுத்துலகில் அதிகம் பேசப்படக் கூடிய மூன்று ஜாம்பவான்களின் புத்தகங்களை மேகா பதிப்பகம் வெளியீடு செய்தது.

சென்னை கவிக்கோ மன்றத்தில் நடந்த விழாவில் தேன்மொழிதாஸின் காயா, யவனிகா ஸ்ரீராமின் அலெக்ஸாண்டரின் காலனி, கணேசகுமாரனின் வில்லா 21 ஆகிய நூல்கள் வெளியீடு செய்யப்பட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. சாரு நிவேதிதா விழாத் தலைமை ஏற்று மூன்று நூல்களையும் வெளியிட்டார்.

தேன்மொழி தாஸின் காயா நூல் குறித்து அறிமுகம் நிகழ்த்திய கவிதைக்காரன் இளங்கோ, தேன்மொழி தாஸின் கவிதைகளில் உள்ள பிரத்யேகமான சொற்கள் குறித்த பட்டியலைக் கூறி, அச்சொற்கள் கவிதைகளில் எவ்விதம் கையாளப் பட்டிருக்கின்றன என்பதையும் அவற்றின் பயன்பாட்டால் கவிதையாக மாறும் தருணம் எது என்பதையும் விரிவாகப் பேசினார்.

யவனிகா ஸ்ரீராமின் அலெக்சாண்டரின் குதிரை கவிதை




நூலை அறிமுகம் செய்த அமிர்தம் சூர்யா அக்கவிதைகளில் உள்ள அரசியல் குறித்தும் அதே சமயம் அது எவ்விதம் கலை நுணுக்கமாய் மாறியிருக்கிறது என்பது குறித்தும் பேசினார். தனது அழகான பேச்சினால் அரங்கை நிரப்பி அலெக்ஸாண்டரின் குதிரையை மனதிற்குள் ஓடவிட்டுக் கொண்டிருந்தார்.

கணேசகுமாரனின் வில்லா 21 நூல் குறித்துப் பேசிய தமயந்தி, இந்த நூலை ஒரே இரவில் படித்து முடித்ததாகக் கூறினார். கதைகளில் வெளிப்படும் உளவியல், மன அழுத்தம், மனப்பிறழ்வு சார்ந்த விஷயங்கள் குறித்தும் கதையின் மிக நுட்பமான கதாபாத்திரங்கள் குறித்தும் உரை வழங்கினார்.

இறுதியாக, தலைமை உரை நிகழ்த்திய சாரு நிவேதிதா, மூவரின் நூல்கள் குறித்தும் தனது கருத்துக்களைச் சொல்லி எல்லா நூல்களுக்கும் சிறு அறிமுகம் கொடுத்தார். காடு மலை செடி கொடியென இயற்கையோடு ஒன்றி, தனது கவி பயணத்தை மிக ஆழமாகவும் அழகாகவும் எழுதிக் கொண்டிருக்கும் தேன்மொழிதாஸ் குறித்தும் 'காயா' குறித்தும் அவர் விரிவாகப் பேசினதோடு தேன்மொழி தாஸை வனதேவதை, ஆதித் தாய் போன்ற சொற்களால் சிலாகித்தும் நூற்றாண்டுக் கவிஞர் என்று புகழாரம் சூட்டியும் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி முற்றிலும் நிறைவாகவும் சிறப்பாகவும் நடந்த மேகா பதிப்பக நூல் வெளியீட்டு நிகழ்வு விஜி அவர்களால் தொகுத்து வழங்கப்பட்டது. இலக்கிய ஆளுமைகள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ■



## கவிச்சித்திரம்

• கவி: க.அம்சப்ரியா
சித்திரம்: கொ.வடிவேல்



மீன் பிடித்து விளையாடிய
குளமெங்கும் நிறைந்திருக்கிறது
பறவைகளின் இறந்த இறகுகள்
களிமண்ணில் நாம் செய்கிற
உருவாரங்களுக்கெனக் காத்திருக்கின்றன
நம் நடுகல் தெய்வங்கள்
அளவான ஆழத்தில் தாத்தாக்கள் வெட்டிய
கிணறுகள் நம் நீச்சலில் திளைத்திருந்த
காலமெல்லாம் இறந்த காலமாகிட
எத்தனை அடி இயந்திரத்தை
இறக்கியபோதும்
வெறும் புகையாய் வெளியேற
நிழலே கொடுத்துப் பழகிய வேப்பமரம்
இம்முறை பிணம் சுமக்கும் வேலைக்குக்
கண்ணீரோடு தயாரானது
இந்தக் கோடையின் பாடலை
உரத்துப் பாடுகிறேன்
துளி நீரேனும் வாய்க்குமென்ற நம்பிக்கையில்
வாயேன் நீயும் வசந்தப் பாடலைத் துவங்குவோம்.

• தமிழ்பாரதன்
மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்

# ஈரிருநாள் இலங்கை

உணவுப் பரிமாற்றமும் உணர்வுப் பரிமாற்றமும் தொடங்கியிருந்தது. இந்தியப் பிரதிநிதிகளாகப் பரந்துபட்ட பாரததேசத்தின் மாட்சிமிகு திறத்தை உலக அரங்கில் உயர்த்திப் பிடிக்கப்போகிறவர்களைத் தேர்வுசெய்த பேராசிரியர் குறிஞ்சிவேந்தன் அவர்களை முதன்முதலாக அடையாளங் காணமுடிந்தது, முகநூல் பயன்படுத்திய நனவிலி மனத்தால். வணங்கி வாழ்த்து பெற்று எனக்கான அறைக்குச் செல்கையில் ஞானசம்பந்தன் ஐயாவைப் பிரிய நேர்ந்திருந்தது. குறுக்காக மாட்டியிருந்த பையும், இடது கைப் பிடித்திருந்த உடைமையும் தானியங்கி மின்தூக்கியில் தனியாக மேலேறவில்லை. மின்தூக்கி திறந்ததும் எதிர் நின்ற தளம் நான்கு. உணவக விடுதியின் வழிகாட்டிக் கால்கள் நின்ற இடம், இந்தியப் போட்டியாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட குடில். யாருமற்ற அங்கே இறக்கி வைத்துவிட்டு, போட்டியாளர்களைக் காணக் கண்கள் பயணிக்கத் தொடங்கியது.

தானியங்கி மின்தூக்கி இதற்கு மேல் செல்லமுடியாது என நின்ற கட்டிடத்தின் நிறைவு தளத்தில் போட்டியாளர்கள் பேட்டி காணப்பட்டிருந்தனர். நான் தாமதம் என்பதால் இந்தியா தவிர்த்த பிற தேசத்து மாணவர்கள் பேட்டி காணப்பட்டிருந்தனர். “உண்டு முடித்து, உறக்கம் கலைத்துப் புத்துணர்ச்சியுடன் வாருங்கள்! இந்தியாவை மாலை பேட்டி எடுத்துக் கொள்ளலாம்” எனப் பகர்ந்தனர் மலேசியாவின் ஆஸ்ட்ரோ வானவில் தொலைக்காட்சிக் குழுவினர். சரியெனச் சொல்லிய பின், அங்கிருந்த அரங்கக் கதவைத் திறக்கையில் முகத்தில் ‘மருட்கை’ கூடியிருந்தது.



சிறு பிள்ளையிலிருந்து, குறிஞ்சியின் மீதும், நெய்தலின் மீதும் தீராக் காதல் கொண்டிருந்த மழலை மனம் இளைஞப் பருவத்தை எட்டியிருந்தது. மலையும் கடலும் அடுத்தடுத்திருக்கும் இயற்கையிடத்தை இதுகாறும் கண்டதில்லை. பூமியிலிருந்து நூறடி உயரத்திற்கு அதிகமுயரம் கொண்ட கட்டிடத்தின் உச்சியில் உச்சிவெயிலில் நின்றுகொண்டிருந்தேன். என்னிலிருந்து 45 டிகிரி கோணத்தில் பரந்து விரிந்திருக்கும் இந்தியப் பெருங்கடலின் மேற்குப் பக்கம் கடலலைகளால் கலையாக இருந்தது. தென்னைமரங்களும், இன்னபிறவும், கடலலைகளுக்குக் காவல் காத்து நின்றிருந்தன.

கடற்கரையில் கப்பலைக் காணலாம், படகுகளைக் காணலாம். அச்சமயம் அங்கு கண்டதோ, மரவட்டை. மரவட்டை அளவில் கட்புலனாகித் தெற்கிலிருந்து வடக்காக ஊர்ந்து கொண்டிருந்த தொடரி. அந்த மாநகரத்துச் சாலையில் மகிழுந்துகள் இடப்பெயர்ச்சியும் அடைந்து கொண்டிருந்தன. அவ்வுச்சியிலிருந்து காண்கையில் 360டிகிரி பரப்பில், பாதி கடல், மீதி நிலம். பூமிக்கு மேலேறிப் பூவுலக அழகை இரசிப்பதிலேதான் எவ்வளவு ஆனந்தம். அந்த நொடிகளை அப்படியே காட்சிப்பதிவுகளாக ஆவணப்படுத்த, 'போகலாம்ன்னா' என்ற குரல். 'உணவுக் காகக் காத்திருக்கலாம், உணவு காத்திருத்தலாகாது', எனப் பஞ்ச் சொல்லி ஒன்றரை மணிக்கே அழைத்துச் சென்றான் இந்தியாவைச் சேர்ந்த சக போட்டியாளர் வினோத்.

மொத்தம் இந்தியாவிலிருந்து மூன்று போட்டியாளர்கள், எஸ் ஆர் எம் கல்விக் குழுமத்தில் பயிலும் அருணாச்சலம், வேலம்மாள் கல்விக் குழுமத்தில் பொறியியல் பயிலும் வினோத் மற்றும் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நான். உடைமைகள் கிடத்தப்பட்ட குடிலில் மூவரும் முதன்முறை சந்தித்தோம். தேடியலைந்து எங்களுக்கான உணவு வாங்கித் தந்திருந்தனர், பொறுப்பாளர்கள். புளிச்சோறுக்கும், தக்காளிசோறுக்கும், பிரியாணிக்கும் இடையிலான சுவையில் அஃதிருந்ததை முதல்வாய்ச்சோறு உள்சென்றதும் உள்மனது சொல்லத் தொடங்கியது. அயலக உணவுகள் அதிகம் பரிச்சயமின்மையால், அப்படி இருந்திருக்கலாம். ருசித்துப் புசிக்க முடியாததால், பசிக்குப் புசிக்கத் தொடங்கினேன். சக தோழர்களும் ஒரு வழியாக முழு உணவையும் சாப்பிட்டனர்.

பின், அக்குடிலில் அவரவர் அறை சென்றோம். படுக்கையில் கிடத்தப்பட்ட நெடுஞ்சாண்கிடையான உடலால் பயணக்களைப்பு சற்றே தணிக்கப் பட்டிருந்தது. கண்ணுக்கெதிரே கைப்பேசி நிலைநிறுத்தப்பட்டது. ஒன்றுக்கு இரண்டெனத் தொலைதொடர்பு பயனாளர் அட்டை (sim card) இருந்தும் ஏதொன்றும் தொடர்பு கொள்வதற்கான நிலையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், அறிவியல் தொழில்நுட்பம்தான் ஆகாயம் தாண்டி, செயற்கைக்கோளை நிலைநிறுத்தியுள்ளதே. நம்பிக்கையான கம்பியில்லாச் சேவை (wifi) அவ்வுணவக விடுதி முழுதும் தரப்பட்டிருந்தது. வந்ததும் விடுதியாளர் தந்த கடவுச்சொல்லை உட்புகுத்த, முகநூல், புலனம் எனச் சமூக வலைதளங்களில் வந்திருந்த செய்திகள் வரிசை கட்டி நின்றன.

வீடு, பல்கலைக்கழகம், வேறு சில நட்புகளிடம் தொடர்புகொண்டு பேசி, ஒரு சில பதிவுகளைச் சமூக வலைதளங்களில் பதிவிட்டுப் பேசிக்கு ஓய்வு கொடுத்தாயிற்று. கைப்பேசி ஓய்வுநிலைக்கு வந்துவிட்டாலே, கண்களே ஓய்வு கொள்ளத் தொடங்கி விடும் என்பது நவயுகத் தத்துவம். கண்கள் இருட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கிய நேரம். உறக்கம் உடல்கொள்ளவில்லை. இந்த அயலகப் பயணம் எண்ணிப் பார்த்திராதது. பயணத்தை அசைபோட்டுப் பாதிநேரம் கழிந்தது. கனவுகளும், எண்ணங்களும் அடுத்தநாள் நிகழவுள்ள போட்டி குறித்திருந்தது.

ஒருவழியாக மாலை வர, தேநீர் அருந்த விரும்பிய தேகம் புத்துணர்வடைந்தது. முகம் கழுவி, மாற்றுடை தரித்துத் தயாரானோம். அங்கிருந்து மேல் தளத்திற்குச் செல்ல,



ஒளிப்படக் கருவிகள் தயாராக இருந்தன. மற்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் காலையில் ஒளிப்படமாகியிருக்க, இந்திய மாணவர்களான நாங்கள் மட்டும் மாலையில் ஒளிப்பதிவு செய்யப்பட்டோம். ஒளிப்பதிவு செய்யப்பட்ட பின், போட்டியாளர்களுக்கிடையேயான கலந்தாலோசனைக் கூட்டம். பேராசிரியர் ஞானசம்பந்தன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றிருந்தனர். போட்டியாளர்களின் ஐய வினாக்களுக்கு, விடையளித்த அவர்கள் போட்டி எப்படி நடக்கப் போகிறது, எப்படிப்பட்ட பேச்சை எதிர்பார்க்கிறோம்.. போன்றவற்றைத் தெளிவுபடுத்தினர்.

அதுவும் முடிந்த பின், புத்துடை கலைந்து இயல்புடைக்குத் திரும்பினோம். பிறநாட்டுத் தோழமைகளைச் சந்திக்க முடிவெடுத்து ஒரு குடிலில் கூடினோம். "ஒவ்வொரு நாட்டுத் தமிழும் ஒருடல் தரித்த பல்வேறு ஆடைகளாக'' இருந்தது. ஈழத் தமிழ், மலேசியத் தமிழ், பர்மியத் தமிழ் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஒலித்திரிபு கொண்டிருந்தது. கொங்கு தமிழ், நெல்லைத் தமிழ், மதுரைத் தமிழ், தஞ்சைத் தமிழ், சென்னைத் தமிழ் என்று தமிழகத்தில் நிலவும் ஒலிப்புமுறைத் தமிழை வட்டார வழக்கு என்போம். நாட்டுக்கு நாடு நிலப்பரப்பு, வாழ்க்கைச் சூழல் போன்றவற்றின் மாறுபாட்டால் தமிழின் ஒலிப்பு முறை மாற்றங்கண்டிருக்கிறது. ஒவ்வொருவரின் தமிழையும் ஒரு கணம் நிறுத்திப் பொருள் கொள்ளும் தன்மை, நம்மை நாமே புதுக்கோணத்தில் நோக்குவது போலிருந்தது. அவர்களுடனான நல விசாரிப்புகள், தகவல் பரிமாற்றங்களுக்குப் பின், அங்கிருந்து அவரவர் குடிலுக்கு வர, அடிவயிற்றை அவ்வப்போது தட்டியழைத்தது 'உள்நின்று உடற்றும் பசி'.

விழா ஏற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்த உணவு வரும் முன்பாக, நாம் வெளியே போய்ச் சாப்பிட்டால் என்ன? வெளியே சுத்திப் பார்த்த மாதிரி இருக்கும் என்று, குடிலிலிருந்து கிளம்பினோம். இலங்கைத் தெருக்களில் பாதம் பதித்தோம் முதல்முறையாக. இந்திய மாணவர்கள் நாங்கள் மூவர் மட்டும் அங்கிருந்து வடக்கு நோக்கிப் பயணிக்கத் தொடங்கினோம், இந்திய விடுதி ஏதேனும் உண்டங்கில்

சாப்பிட்டுத்தான் பார்ப்போமே என. பன்னாட்டுப் பணப்பரிமாற்ற அட்டையுடன், சிக்னல் இல்லாத கைப்பேசியுடன், சிறிதளவு இலங்கைப் பணத்துடன், மிக முக்கியமாக எடுத்துக் கொண்டது இந்தியக் குடிமகன் என்பதற்கான அடையாள அட்டை ஆதார். அயல் மண்ணில் அறிந்தவர் யாரும் அருகில்லாத சூழலில் மூவர் மட்டும் யோசித்து யோசித்து ஒவ்வொரு கடையின் பெயர்ப்பலகையிடமும் யாசகம் பெற்றோம்.

இந்தியாவில், சிறுநகரங்களில் கூட பன்னாட்டு உணவகங்கள் தற்போது எண்ணிக்கையில் அதிகரித்திருக்கின்றன. தமிழ்நாட்டில் நிலவும் வெயிலுக்கு எதிர்மறைக் குளிருள்ள கண்ணாடிச் சுவருக்குள் உணவுண்ணப் பெருங்கூட்டம் செல்வதைத் தவிர்க்கமுடிவதில்லை. இவற்றை உள்சென்று பார்த்திராத சராசரிக் குடிமகனாக இலங்கை வீதிகளில் உள்ள பன்னாட்டு உணவகங்கள் பரிச்சயமாகவே இருந்தன. எங்களின் இலக்கு இந்திய உணவு. நாட்டின் தலைநகரின் முதன்மைச் சாலை என்பதால், அடுத்தடுத்து உணவகங்கள் வரிசைகட்டி வண்ணவண்ண விளக்குகளால் வரவேற்றன. சில பெரிய உணவகங்களில் இந்திய உணவு கிடைக்கும் என நாங்கள் நினைத்தோம். ஆனால், அங்கு உண்டால், பன்னாட்டுப் பணப்பரிமாற்ற அட்டையையே தானம் செய்துவிட வேண்டியது தான் எனுமளவு அவ்வுணவகங்களின் புறக்கட்டமைப்பு இருந்தது.

அவ்வப்போது சில ஆட்டோ ஓட்டுநர்கள் சவாரி கேட்டனர். ஆனால், இரு கிலோமீட்டர் தொலைவிற்கும் அதிகமில்லாத தூரத்தைக் கடந்து, பெருவணிக நிறுவனங்களின் அணிவகுப்பில், சராசரிக் கடைகளற்ற தெருக்களில் பெருமூச்சு விட்டு மூவரும் நின்றோம். “இன்னும் கொஞ்சம் தூரம் போனால், ஏதாச்சும் இந்திய உணவகம் வந்துடும் சாப்பிடலாம் வாங்க.!'' என்றதும், “போட்டிக்கு வந்தீர்களா, சாப்பிட வந்தீர்களா?'' என்றொருவன் நினைத்த மைண்ட் வாய்ஸ் எங்களுக்குக் கேட்டேவிட்டது. ‘அட, ஆமால! நாளைக்குக் காலையில் போட்டி, முதல்நாள் இரவு இப்படி நடுத்தெருவில் (நல்ல சாலை!) நிற்கிறோமே, வாங்க நாம் விடுதிக்கே போகலாம்’, என முடிவெடுத்தோம்.

க்ளோபல் உணவக விடுதி நோக்கி நடக்க ஒரு அபவுட்டர்ன் தேவைப்பட்டது. இப்போது, தெற்கு நோக்கி நடக்கத் தொடங்கியிருந்தோம். இலங்கை நகர வீதிகளில் இந்திய உணவு கிடைத்தாலும் கிடைக்கும், புலால் தவிர்த்த உணவு கிடைக்காதோ என நினைத்துக் கொண்டோம். பெரும்பாலும் அசைவ உணவகங்களே காணப்பட்டன. குடிலுக்குச் சென்று, அங்கே இந்நேரம் வந்திருக்கும் இரவுணவை உண்ணலாம் எனக் கால்கள் பெருவேகமெடுத்தன.

கல்லூரி முடித்திராத எங்களிடம் ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் கேட்ட கேள்வி, சீக்கிரம் பாதுகாப்பாய் விடுதிக்குள் சென்றுவிட எத்தனிக்க வைத்தது. ஒருவழியாய் விடுதியில் எங்கள் குடிலுக்குள் நுழைந்து இரவுணவை முடித்து, அவரவர் அறையில் ஓய்வுகொள்ளத் தயாரானோம். அடுத்தநாள் காலை போட்டி என்பதால், தயாரிப்புகள் செய்தாக வேண்டும். என்ன தலைப்பில் பேசப்போகிறோம் என்பது பேசும் நேரத்திலே தான் தெரியும் என்பதால், எல்லாவிதமாகவும் முன்னாயத்தம் ஆனோம். இரவு பன்னிரெண்டு மணி இருக்கும் அப்போது.

புலனத்திலே மருத்துவ மாணவன் அருணை அழைத்திருந்தேன். கடந்தாண்டு இப்போட்டியில் பங்குகொண்ட அவன் சில அறிவுரைகள் தந்தான். கிட்டத்தட்ட இருபத்தைந்து நிமிடங்களைக் கடந்த அந்த அழைப்பில், அருண் பேசிக் கொண்டிருந்தான். பதிலுக்குப் பேசவேண்டிய என்னிடமிருந்து குறட்டைச் சத்தமே(!) அருணுக்கு அனுப்பப்பட்டது. அடுத்த நாள் போட்டி பற்றிய எண்ணங்களோடு அறிதுயில் படர்ந்தது.

– விடியட்டும் பேசுவோம் ■

• கவி : வேதநாயக்
சித்திரம் : கொ.வடிவேல்

# பழச்சாறின் ஒழுக்கு



நிறைவேற்றப்படாப்
பல்லாயிரம் ஆத்மாக்களின்
ஒற்றைக் குரலொலி
உன் தாபம்
கருணை சேர்;
கற்பூரம் முகிழச் செய்;
கனன்று உதிரா
ஊதுவத்தியின் சாம்பலை
ஊது என
விளிப்பதும், மிழற்றுவதுமாக
இருண்ட அறையின்
தனித்த உயிராய்ப் புலம்புவது
புரிகிறதுதான்
என் செய?
சொடக்குத் துளிகளில்
வெளி நனைத்து,
உள் அனலை அப்படியே
வைத்திருக்கும்
ஒற்றைகளில் ஒன்றுமில்லையே..
மூழ்கி எழுந்து
உள்ளும் புறமும்
நீர் வடிய
வெடவெடக்கும் பெரும்போதின்போது
கலக்கும் பேறை அல்லவா
யாசித்தலின் தாத்பரியம்? ■

• ஓவியம் : கொ.வடிவேல்



# தகவு பதில்கள்

**பக்தி இலக்கியக் காலத்திற்கும்.. பாரதியார் காலத்திற்கும் இடையில் எவ்வித இலக்கியங்கள் உருவானது? மேரி டயானா, சென்னை.**

பக்தி இலக்கியக்காலம் என்று பொதுவாகச் சொல்லப்படுவது பல்லவர்காலம். அதன்பிறகு பிற்காலச்சோழர் காலம் வருகிறது. கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற பெருநூல்கள் அக்காலக்கட்டத்தில்தான் உருவாயின. பேரரசுகள் தகர்ந்தபின்னால் பல்வேறுவகையான சிற்றிலக்கியங்கள் தோன்றின. நூல்களுக்கான உரைகள் வரத்தொடங்கின. ஐரோப்பியர்களின் வரவால் உரைநடை வளர்ச்சியடைந்தது. கிறித்துவ நூல்கள் அறிமுகமாயின. பாரதியார் எழுதத் தொடங்கிய பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்குள் இத்தனையும் உருவாகியிருந்தன.

**ஒரு படைப்பின் நோக்கமென்ன, படைப்பவனின் ஆன்ம திருப்தி மட்டுமா இல்லை வாசகரின் திருப்தி கூடவா? ஸ்ரீதரன், சென்னை.**

விதைகள் உள்ளார்ந்த உயிர்ப்பினால் முளைக்கின்றன.. சூழலின் சூட்சுமங்களைப் பயன்படுத்தி வளர்கின்றன.. விரிந்து பிற உயிர்களுக்கு உதவியாகி நிலைக்கின்றன. விதை முளைப்பது விதைக்காகத்தான் என்றாலும் அதன் உயிர்ப்பு பிறரால்.. பிறருக்காகத்தான். படைப்பவனின் திருப்தியால் எழுவதுதான் படைப்பு. ஆனால் வாசிப்பவரின் திருப்தியால் தான் அதன் நிலைப்பு.

**இணையத்தில் எழுதுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறதே? நித்யா, திருச்சி.**

ஆமாம். முன்பெல்லாம் கல்லூரிக் கல்வியை முடித்தவுடன் பலரும் எழுதுவதை நிறுத்திவிடு வார்கள். பின்னர் அவரவர் பணிசார்ந்து மட்டுமே எழுதிக்கொண்டிருப்பர். ஆனால், இப்போது எல்லா வயதினரும், துறையினரும் மொழியை எழுத்துக் கருவியாகப் பயன்படுத்தத் துவங்கி விட்டனர். எந்நிகழ்வுக்கும் எதிர்வினை ஆற்றுகின்றனர். இதன்வழி சமூகத்தின் வரலாற்றை எழுதுவதுகூட எளிதுதான். சிலர் ரன்னிங் கமெண்ட்ரியாய்ப் பதிவுகள் போடு வதைப் பார்க்கும்போதெல்லாம்.. பூட்டிவைத்து.. யார் கண்ணிலும் படாமல் டைரி எழுதிய காலத்தை எண்ணிப்பார்க்கிறேன். ம்ம்..

**வாழ்க்கை சுவாரசியமானதா.. இலக்கியம் என்னதான் சொல்கிறது? சத்யபிரியா, சேலம்.**

சுவாரசியத்திற்கென்ன குறைச்சல்.. தேன்துளியை நக்குவதுபோலத்தான் வாழ்க்கை. ஆனால் எப்படிப்பட்ட சூழலில்? அழகாய் சூளாமணி இலக்கியம் சொல்கிறது. ஒருவனை யானை துரத்துகிறது. ஓடும் அவன் ஒரு குழிக்குள் குதிக்கச் செல்கிறான். அதனுள் பாம்புகள் இருப்பதைக் கண்டவன் அதன்மேல் தொங்கிக் கொண்டிருந்த கொடியைப் பற்றிக்கொள்கிறான். அப்போது மரத்தின் மேலிருந்த தேன்கூட்டி லிருந்து தேன்துளி சொட்டுகிறது. மேலே யானை.. கீழே பாம்புகள். ஆனாலும் அந்தத் தேன்துளியை நக்குகிறான்... சுவைக்கிறான். அதுதான் வாழ்க்கை.

நாடக வடிவில்
சங்க இலக்கியம்

• வடிவம் : கிருஷ்ணமூர்த்தி பழனியப்பன்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



# கலித்தொகை II

தலைவியைப் பிரிந்து பொருள் சேர்க்கச் சென்றான் தலைவன். அவனுடைய பிரிவால் வருந்துகிறாள் தலைவி. அங்கு தோழி வருகிறாள்.

**தோழி** : ஏனடி வருத்தமாக இருக்கிறாய்?

**தலைவி** : என் தலைவர் பொருள் தேடிச் சென்றிருக்கிறார். எப்போது வருவார் என்பது தெரியவில்லை.

**தோழி** : ஓ.. அப்படி தேடும் பொருளை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறாராம், உன் தலைவர்?

**தலைவி** : நானும்தான் கேட்டேன். 'இல்லாதவர்க்குக் கொடுக்கலாம். எதிரிகளை அழிக்கலாம். அதைவிட இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியாக வாழவே பொருள் வேண்டுமே' என்கிறார்.

**தோழி** : சரி! அவர் சென்ற இடத்திற்கு நீயும் வருகிறேன் என்று சொல்லியிருக் கலாமே..

**தலைவி** : சொன்னேன். அவர் சென்ற வழியில் உள்ள காடு மிகக் கொடுமையான தாம். நம்மைப் போல் மென்மையானவர்கள் அதில் போக முடியாதாம்.

**தோழி** : அதென்னடி.. அப்படிப்பட்ட காடு?

**தலைவி** : வெயில் காலத்தில் காலை வைக்க முடியாத அளவுக்குத் தரை சுடுமாம். 'உன் பாதம் தாங்குமா?' என்கிறார்.

**தோழி** : அதே காட்டில்தான் தன் தாகத்தைப் பொறுத்துக்கொண்டு பெண் யானைக்கு முதலில் நீரைக் குடிக்கக் கொடுக்கும் ஆண் யானையும் இருக்கின்றது. அது அவருக்குத் தெரியாதா?

**தலைவி** : 'இலைகளே இல்லாமல் வெறும் கொம்புகள்தான் இருக்கும். அதுவும் காய்ந்து கிடக்கும். நிற்பதற்குக் கூட நிழல் கிடையாது' என்கிறார்.

**தோழி** : அதே காட்டில்தான் வெய்யிலால் தவிக்கின்ற பெண்புறாவுக்கு ஆண் புறா சிறகசைத்து இளைப்பாற்றும். அது அவருக்குத் தெரியாதா?

**தலைவி** : 'அடிக்கின்ற வெயிலில் மூங்கில்கள் கூடக் காய்ந்து கிடக்கும்' என்கிறார்.

**தோழி** : இருக்கட்டும். அதே காட்டில்தான் பெண் மானுக்குத் தன் நிழலைக் கொடுத்து நிற்கச் செய்யும் ஆண் மானும் இருக்கின்றது. அது அவருக்குத் தெரியாதா?

**தலைவி** : எருதுக்கு நோவு காக்கைக்குக் கொண்டாட்டம் என்பது மாதிரி இருக்கிறதடி உன் பேச்சு.

**தோழி** : கவலைப்படாதே, அம்மா! உன் அழகை வாட விட மாட்டார் உன் தலைவர். அவர் எப்படிப்பட்ட காட்டுக்குள்தான் போகட்டுமே! திரும்பி வரத்தானே வேண்டும்?

**தலைவி** : வந்துவிடுவார் என்கிறாயா?

**தோழி** : ம்ம்.. அதோ பார்! பல்லி கெவுளி சொல்வது கேட்கிறதா?

**தலைவி** : கேட்கிறது.

**தோழி** : உன் இடது கண்ணைத் தொட்டுப்பார்.

**தலைவி** : துடிக்கிறது.

**தோழி** : இவை எல்லாம் நல்ல சகுனங்கள் இல்லையா? கண்டிப்பாகத் தலைவர் வந்துவிடுவார். வருந்தாதே!

நம்பிக்கையுடன் காத்திருக்கத் தொடங்குகிறாள் தலைவி. ■





• யவனிகா ஸ்ரீராம்

# உன்னதமான கவிதையிலிருந்து தன் மொழியை விடைபெறுதலுக்காகச் சேகரித்தவன்

**(குங்கிலியம் மணக்கும் காடு கவிதைத் தொகுப்பை முன்வைத்து)**

இளங்கவி அருள், இதுவரை ஆறு கவிதைத் தொகுப்புகள் வெளியிட்டுள்ளார் மற்றும் அல்லாது புதுச்சேரிக்கும் தமிழகத்திற்கும் இடையே ஊடாட்டமாகப் பாயும் தமிழ்க் கவிமனம் அவருடையது. ஒருகாலத்தில் வானம்பாடி கவிதைகளின்மேல் ஈர்ப்புக் கொண்டவராக இருந்து அவற்றின் விளை பொருளாக அதிகம் அறியப்பட்ட வைரமுத்து போன்றவர்களிடம் மனம் கொடுத்தவர். தன்னுடைய இளம்பிராயத்து வளர்ச்சிப் போக்குகள் பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் இருந்து வானம்பாடிகள் வரை.. பிறகு, அவர் பிறந்த மண்ணில் மறைந்து எழுந்த இலக்கியப்போக்குகளை ரமேஷ் பிரேம் போன்றோரிடம் இனம் காண்கிறார். இதற்கிடையில், ஒரு அரசு ஊழியராக இருக்கும் அவர் கவிதையை உயிர்மூச்சாக வரித்துக் கொள்கிறார். எல்லாக் கவிஞரிடத்தும் அன்பும் சிநேகமும் பரவசமும் கூடியவராக இலக்கியக் கூடங்களில் சந்தித்து, தமிழின் கவிதை மரபில் தனக்கான இடத்தைக் கண்டடைய முயன்றார். ஒரு மத்தியதர வாழ்வின் அன்றாடங்களிலிருந்து விலகிவந்த ஒரு கவிஞனாக நிலைபெற அவருடைய ஆர்வங்கள் மிகுந்த மதிப்புக்குரியதுதான்.

ஆரம்பத்தில், தான் விரும்பிய அனைத்துக் கவிஞர்களையும் கொண்டாட, அதற்கெனத் தன் சொந்த வருமானத்தைப் பயன்படுத்தி அவர்களை

உற்சாகப்படுத்தி, விருதுகள் வழங்கி அதற்குள் தன்னையும் இனம் காண்பவராக அல்லது தன் சொந்த சுக, துக்கங்களில் இருந்து ஒரு அந்நியமான வாழ்வை மேற்கொண்டார் என்றே சொல்லலாம்.

தற்போது வெளிவந்திருக்கும் 'குங்கிலியம் மணக்கும் காடு' என்ற தொகுதியை மட்டுமே ஒரு வாசிப்புக்கு எடுத்துக்கொண்டிருக்கிறேன். இது, அவர் கவிதையை முழுமையாகப் பரிசீலிக்கும் ஒரு செயல்பாடு அல்ல. எனினும் ஒரு தீவிரமான இலக்கியச் சூழலில் பிரதிபலன் எதிர்பார்க்காமல் புதுச்சேரியின் வாசலில் எப்போதும் இலக்கியத்திற்காகக் காத்திருக்கும் ஒரு வயதடையாத இளைஞன்போலவே இருக்கிறார். குறிப்பாக, இத்தொகுதியில் அவர் வாழ்விற்கு மரபுவழியாக வழங்கிய மனித விழுமியங்களின் உன்னதத்தைத் தற்காத்துக் கொள்பவராகவும் அன்பின் பரிமாணத்தை, வஞ்சகங்களும் துரோகங்களும் இன்னபிற சாஸ்திர சம்பிரதாயங்களும் பேருண்மைகளும் கூட கலைத்துவிட முடியாது என்கிற நம்பிக்கையில் நம்மிடையே ஒரு அண்டை வீட்டானைப்போலவே இருக்கிறார். இலக்கியத்தின், அதன் வாழ்வின் மாய்மாலங்கள், சுயநலங்கள், சோரம் போதல், அதன் அரசியல், அதற்கு அதிகாரத்தோடு உள்ள தொடர்பு மற்றும் இலக்கியத்தின் பிழைப்புவாதிகளின்மீது தீராத பராதிகளைச் சொல்லிக்கொண்டிருப்பவராகவும் மாறிப் போனார்.

புதுச்சேரி மது விடுதிகளை, அவர் நம்பிய கவிஞர்களுக்கு ஒரு திறந்த வெளியாக்குவதில் உற்சாகமடைவதும், கலைஞர்கள் எங்கிருந்தாலும் மகிழ்வாய் இருக்க வேண்டியது அவசியம் என்கிறவகையில், தன் பொருளியல் வாழ்வில் அதற்கென ஒரு பங்கை ஒதுக்கினார். அது, அவர் லௌகீகத்தினின்றும் கவிஞருடன் இருக்கவிரும்பிய ஒரு நேர்ச்சை என்றும் சொல்லலாம். இப்படியாகவேதான், அவர் முதல் தொகுப்பிலிருந்து ஏழாவது தொகுப்புவரை ஒரு கவித்துவ நகர்வு வெள்ளந்தியாக நகர்ந்திருக்கிறது.

'இன்றைய பொழுதைக் கழிக்க', 'ஓரறிவு உயிர்கள்', 'கருணைமிக்க பூவுலகு', 'காலநிர்பந்தம்', 'ஞானமிழந்த உடல்', 'தந்தையர் தினத்தன்று', 'நட்பின் வெளிச்சம்', 'நவீன காளான்மரம்', 'நாட்குறிப்பில் நிறையும் அவன்', 'நிலம்', 'மெய்மையும் பொய்மையும்', 'வீழ்த்தும் சிறுபறவை' போன்ற கவிதைகளை இத்தொகுப்பில் வாசிக்கும் ஒருவர், தன்னளவில் வரலாற்றைத் தவிர்த்துவிட்டால் அவரது தன் உணர்ச்சியின் துயரப் பாடல்களை, பேரன்பின் நாடக நிலத்தை அல்லது பழம்செவ்வியலின் இறந்தகாலத்தை, அன்றைய மானுடத்தைத் தழுவ முயன்று தழுவ முயன்று விரல்முனைகள் மழுங்கிப் போன ஒரு மனிதனின் நவீன இருப்பை உணரமுடியும். ஆதிக்கத்தின் வரலாற்று வெளியே லௌகீகத்தின் இருத்தல்மீது அமைதியடைய விரும்பும் இளங்கவி அருள், ஒரு ஆண் என்கிறமுறையில் இந்த உலகத்தைத் தன் கவிதைகளால் இசைக்க முயன்றவன். அதிகம் பாலிச்சையால் தூண்டப்பட்ட ஒரு மனிதனின் பேரார்வங்கள் வடிந்து இறுதியில் கலைக்கு, கவிதைக்குத் தன்னை ஒப்புக் கொடுப்பதன்மூலம் தன்னிலை அரசியல் பேதமற்று இப்படித்தான் நேர்கிறது.

மனிதர்கள் கவிதையை உருவாக்கு கிறார்களா?, கவிதைகள் மனிதனை உருமாற்றம் செய்கிறதா? என்பதற்கு உதாரணமாக, இவரின் கவிதைகளைக் காலத்தின் மனித இயங்கியலாக எடுத்துக் கொள்ளலாம். பெரும் உடமைக்கான பேராசைக்கும், கைகளை விரித்து ஒன்றுமில்லை என்பதற்கும் இடையே ஒரு கவிஞன் அல்லாடுவானேயானால் கவிதை நிற்கும். கவிஞன் இறந்துதான் போவான். வனங்களைப்பற்றி அதிகம் பேசாமல் இளங்கவி அருள், வாழ்க்கை நறுமணத்தை குங்கிலியப் புகையோடு ஒப்பிடுகிறான். அவனுடைய காதல், வாசகன் நம்புமளவிற்கு உன்னதப்படுத்தப்படவில்லை. அவன் பிரம்மாண்டங்களைக் கடக்கும்போது, நம்மை ஒரு தேநீர்க்கடையில் அல்லது மதுவிடுதியில் சந்தித்துவிட்டு மீண்டும் வீடு திரும்புபவனாக அல்லது நம்மை எப்போதும் வழியனுப்புபவனாக, கவிஞனாக வாழ்கிறான். ■

# படைப்புப் பதிப்பகம் வெளியீடுகள்

நூல்களைப் பெற
97908 21981

























